


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 169 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 16 – செவ்வாய்க்கிழமை 30 ஜனவரி 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 169 : Thiruvalluvar Year - 2055 - Thai 16 - Tuesday 30 January 2024 - Chennai 12 Pages ₹ 5.00




தமிழ்நாட்டில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அரசுமுறை பயணமாக ஸ்பெயின் நாட்டின், மேட்ரிட் சென்றடைந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை ஸ்பெயின் நாட்டிற்கான இந்தியத் தூதர் தினேஷ் கே. பட்நாயக் அவர்கள் வரவேற்று, ஸ்பெயின் பயணம் வெற்றி பெறுவதற்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா உடனிருந்தார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அரசுமுறை பயணமாக ஸ்பெயின் நாட்டிற்கு பயணம் மேற்கொண்ட போது, விமான பயணத்தில் உலகின் நம்பர் ஒன் டென்னிஸ் விளையாட்டு வீரர் நோவாக் ஜோகோவிச் அவர்களை (Mr. Novak Djokovic) சந்தித்தார்.

## முதலீட்டாளர்கள் மாநாடு: ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன!

# பெருந்தொழிலதிபர்களுடன் சந்திப்பு!

## ஸ்பெயின் தலைநகர் மேட்ரிட் சென்றடைந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**மேட்ரிட் (ஸ்பெயின்) ஜன. 30-**

**ஸ்பெயின் நாட்டின் தலைநகரில் நேற்று தமிழ்நாடு அரசின் சார்பில் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதில் பங்கேற்று, தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான உகந்த சூழல் இருப்பது குறித்து விவரித்தார்.**

**அதையடுத்து பன்னாட்டு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதில் ஆர்வம் காட்டி, புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன.**

இது தொடர்பாக சென்னையில் இருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புறப்பட்டபோது குறிப்பிட்டதாவது.

“ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளைப் போன்றே, ஸ்பெயின் நாட்டிலும், முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த இருக்கிறேன். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த முன்னணி முதலீட்டாளர்கள், வணிக அமைப்புகள், தொழில் முனைவோர் இந்த மாநாட்டில் கலந்துகொள்ள இருக்கிறார்கள்.”

**‘இன்வெஸ்ட் ஸ்பெயின்’ அமைப்புடன் நேரடிப் பேச்சுவார்த்தை!**

இந்த மாநாட்டில், தமிழ்நாட்டில் நிலவும் சாதகமான முதலீட்டுச் சூழல் பற்றியும், தமிழ்நாட்டின் கட்டமைப்பு வசதிகள், மனதவள ஆற்றல் போன்றவற்றின் சிறப்பம்சங்களையும் எடுத்துக்கூறி, இந்தியாவில் முதலீடுகளை மேற்கொள்ள தமிழ்நாடு தான் உகந்த மாநில என்று, அந்த நாட்டு முதலீட்டாளர்களுக்கு எடுத்துரைக்க இருக்கிறேன்.

இந்தப் பயணத்தின்போது, ரோகா (ROCA) மற்றும் கெஸ்டாம்ப், உட்பட சில பெரும் தொழில் நிறுவனங்களுடனும், ‘Invest Spain’ முதலீட்டு அமைப்புடனும் நேரடிப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

இந்தப் பயணத்தின் மூலமாக, ஐரோப்பிய நாடுகளின் கவனத்தையும் ஈர்த்து, அந்த நாடுகளில் இருந்தும் முதலீடுகளை பெருமளவில் ஈர்க்க முடியும் என்று நம்புகிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்திருந்தார்.

ஸ்பெயின் நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சி குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்க ஸ்பெயின் நாட்டிற்கு சென்றடைந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை ஸ்பெயின் நாட்டிற்கான இந்தியத் தூதர் அவர்கள் வரவேற்றார்.

தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அரசு முறைப் பயணமாக ஸ்பெயின் நாட்டிற்கு 27.1.2024 அன்று இரவு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து புறப்பட்டு, நேற்று முன்தினம் (28.1.2024) மாலை ஸ்பெயின் நாட்டின் தலைநகர் மேட்ரிட் சென்றடைந்தார்.

மேட்ரிட் சென்றடைந்த முதலமைச்சர் அவர்களை, ஸ்பெயின் நாட்டிற்கான இந்தியத் தூதர் தினேஷ் கே. பட்நாயக் அவர்கள் தூதரக அதிகாரிகளோடு மலர்க்கொத்து வழங்கி வரவேற்று, சந்தித்து பேசியபோது, ஸ்பெயின் பயணம் வெற்றி பெறுவதற்கு தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.



தமிழ்நாட்டில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அரசுமுறை பயணமாக ஸ்பெயின் நாட்டின், மேட்ரிட் சென்றடைந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை ஸ்பெயின் நாட்டிற்கான இந்தியத் தூதர் தினேஷ் கே. பட்நாயக் அவர்கள் தூதரக அதிகாரிகளோடு மலர்க் கொத்து வழங்கி வரவேற்றார்.

இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா உடனிருந்தார்.

ஸ்பெயின் தொழில் அமைப்புகள் மற்றும் ஸ்பெயின் நாட்டில் செயல்படும் பெரும் தொழில் நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் மாநாட்டை முதலமைச்சர் அவர்கள் நேற்று (29.1.2024) நடத்தினார். இம்மாநாட்டில் தமிழ்நாட்டில் நிலவும் சாதகமான முதலீட்டுச் சூழல் பற்றியும், தமிழ்நாட்டின் கட்டமைப்பு வசதிகள், மனிதவள ஆற்றல் போன்றவற்றின் சிறப்பம்சங்களை விளக்கி, தமிழ்நாட்டில் முதலீடுகளை பெருமளவில் ஈர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஸ்பெயின் பயணம் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.01.2024) தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**ஸ்பெயின் வந்தடைந்தேன்! ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு முதன் முறையாக ஐரோப்பியப் பயணம்!**

**ஸ்பெயின் நாட்டிற்கான இந்தியத் தூதர் திரு. தினேஷ் கே. பட்நாயக் அவர்கள் தூதரக அதிகாரிகளுடன் சிறப்பான வரவேற்பை அளித்தார்.**

**இன்று மாலை ஸ்பெயின் நாட்டின் தொழில் அமைப்புகள் மற்றும் அந்நாட்டில் செயல்படும் பெரும் தொழில் நிறுவனங்களைச் சந்திக்கிறேன்.**

**தமிழ்நாட்டில் நிலவும் வாய்ப்புகள் மற்றும் இளைஞர் வளத்தை எடுத்துக்கூறி முதலீடுகளை ஈர்க்கவுள்ளேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

### இஸ்ரேல் கொடூர தாக்குதல்:

## காசாவில் ஒரே நாளில் 165 பேர் பலி!

*காசா, ஜன.30-*

*இஸ்ரேல் - ஹமாஸ் இடையே கடந்த அக்டோபர் 7ந்தேதி தொடங்கி, 3 மாதங்களாக போர் நடந்து வருகிறது. இந்த போரில் காசாவில் மட்டும் 26 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகி உள்ளனர். காசா மீதான தாக்குதல்களை இஸ்ரேல் ராணுவம் நாளுக்கு நாள் தீவிரப்படுத்தி வருகிறது.*

*குறிப்பாக மத்திய காசா பகுதியில் இஸ்ரேலின் தரைப்படைகள் வேகமாக முன்னேறி வருகின்றன. கடந்த 2 நாட்களாக நஸர் ஆஸ்பத்திரி மற்றும் அல் அமல் ஆஸ்பத்திரி சுற்று வட்டாரத்தில் இஸ்ரேலின் தாக்குதல் அதிகமாக இருப்பதாகவும், அல் அமல் ஆஸ்பத்திரியில் ஆக்சிஜன் சிலிண்டர் தீர்ந்த நிலையில் நோயாளிகள் அவதிப்பட்டு வருவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.*

*நேற்று முன்தினம் பகலுடன் முடிந்த முந்தைய 24 மணி நேரத்தில் இஸ்ரேல் தாக்குதலில் 165 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாகவும், 290 பேர் காயம் அடைந்து இருப்பதாகவும் ஹமாஸ் நிர்வாக அமைப்பின் சுகாதாரத் துறை அறிவித்தது. இதன் மூலம் அங்கு பலியான பாலஸ்தீனியர்கள் எண்ணிக்கை 26 ஆயிரத்து 422 ஆக உயர்ந்து உள்ளது. 65 ஆயிரத்து 87 பேர் காயம் அடைந்து உள்ளனர்.*

---

## 56 மாநிலங்களவை இடங்களுக்கு தேர்தல்: தேதி அறிவிப்பு!

புதுடெல்லி, ஜன. 30 –

பல்வேறு மாநிலங்களில் காலியாக உள்ள 56 மாநிலங்களவை இடங்களுக்கு அடுத்த மாதம் 27ம் தேதி தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி, ஆந்திரா, பீகார், மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம் உள்ளிட்ட 15 மாநிலங்களில் உள்ள 56 மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் ஏப்ரலில் நிறைவடைகிறது.

இந்நிலையில், மாநிலங்களவை தேர்தல் நடைபெறும் தேதியை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

### தமிழ்நாட்டின் ஓரிரு இடங்களில்

## இரண்டு நாட்கள் லேசான பனிமூட்டத்திற்கு வாய்ப்பு!

### சென்னை வானிலை மையம் தகவல்!

சென்னை, ஜன.30-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது, இன்று (30.01.2024) தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டத்திற்கு வாய்ப்பு உள்ளது.

31.01.2024 முதல் 02.02.2024 வரை: தென் தமிழகம், டெல்டா மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய பகுதிகளில் ஏனைய பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

29.01.2024 மற்றும் 30.01.2024: தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் இரவு / அதிகாலை வேளையில் உறைபனி ஏற்பட வாய்ப்பு உள்ளது. சென்னையைப் பொறுத்தவரை அடுத்த இரு தினங்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 30-01-2024

# விஷம் வழிந்தோட வேண்டாம்; அன்புநதியில் நனைவோம்!

அண்ணல் காந்தியடிகளை கோட்சே சுட்டுக் கொன்ற நாள் தான் சனவரி 30. அண்ணல் காந்தியின் வரலாற்றைச் சொல்பவர்கள், அவர் கொலை செய்யப்பட்டு இறந்தார் என்பதையும் சொல்ல வேண்டும். அதுதான் அவருக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்க முடியும். எதிர்காலத்தில் மதவெறி பரவாமல் தடுக்கும் வழியாகவும் அது இருக்க முடியும்.

அண்ணல் காந்தி கொலை செய்யப்பட்ட அந்த நாளில் அவர் விரும்பிய மத நல்லிணக்க உறுதிமொழியை நாடு முழுவதும் அனைவரும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார் தி.மு.க. தலைவரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மத நல்லிணக்க உறுதிமொழி எடுக்க வேண்டிய அவசியம் இன்று ஏன் ஏற்பட்டுள்ளது என்பதை மிகச் சரியாக விளக்கி இருக்கிறார்.

*** அனைத்து மதத்தவர் உணர்வுக்கும் மரியாதை கொடுத்த காந்தி, ஒற்றை மதவாத தேசியவாதத்தை அவர் ஏற்கவில்லை. அதனாலேயே மதவெறிக்கு அவர் பலியானார்.**

*** 75 ஆண்டுகள் ஆனபிறகும் அண்ணல் காந்தியார் மீதான கோபம், வகுப்புவாதிகளுக்கு குறையவில்லை.**

*** தேசத்தந்தை என்று போற்றப்படும் காந்தியடிகளை, பொய்களாலும் அவதூறுகளாலும் கொச்சைப்படுத்தும் காலமாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவரது கொள்கைகள் மட்டுமல்ல, அவரே இழிவுபடுத்தப்படுகிறார்.**

*** இந்தியா முழுமைக்குமான ஒற்றுமையின் அடையாளமாக இருக்கின்ற அண்ணல் காந்தியின் புகழைச் சிதைப்பதன் மூலமாக இந்திய நாட்டின் பன்முகத் தன்மையை சிதைக்க முயற்சிக்கிறார்கள்.**

*** நாடு சந்தித்து வரும் மதவெறி பாசிச நடவடிக்கைகளுக்கு எதிராகவும், நாட்டு மக்கள் அனைவரும் மத வேறுபாடின்றி ஒற்றுமையாக வாழ்ந்திட வேண்டும்.**

*** வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட இந்திய நாட்டின் பண்பாட்டையும், 'எல்லோர்க்கும் எல்லாம்' என்ற தமிழ்நாட்டின் மாண்பையும் இந்திய ஒன்றியத்திற்கு வெளிப்படுத்தும் வகையில் நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக திட்டமிட்டு நடத்திட வேண்டும். - என்பதை அதிகமாக வலியுறுத்திச் சொல்லி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.**

அன்பைப் போதிக்கிறது மதம் என்று சொல்லிக் கொண்டே வம்பை விதைத்துக் கொண்டு இருக்கிறார்கள் வகுப்புவாத சக்திகள். இக்காலத்தில் மதச்சார்பின்மை, மதநல்லிணக்கத்துக்கு ஆதரவான முகமாக அண்ணல் காந்தியடிகளைத்தான் தூக்கிப் பிடித்தாக வேண்டும். அவர் நாத்திகர் அல்ல. ஆன்மிகவாதிகளின் அடையாளமாக தனது வாழ்க்கையை வரித்துக் கொண்டவர் அவர்.

நானும் ஓர் சனாதன ஹிந்து என்று உரிமை பாராட்டி வருகிறேன் என்று சொல்லிக் கொண்டவர்தான் காந்தியார். ஹிந்து தர்ம சாஸ்திரங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொண்ட அவர், வேதகாலத்தில் இருந்த வருணாசிரம தர்மத்தில் தனக்கு பெரிய நம்பிக்கை உண்டு என்றும் சொல்லிக் கொண்டார். இத்தோடு அவர் நிறுத்தி இருந்தால் அவரை வகுப்புவாதிகள் ஏற்றுக் கொண்டிருப்பார்கள்.

"வேதங்களுக்கு மட்டுமே தனித்து ஈசுவரத் தன்மை உண்டு என்று நான் கருதுவதில்லை. வேதங்களுக்கு எவ்வளவு ஈசுவரத்தன்மை உண்டோ அவ்வளவு ஈசுவரத் தன்மை கிறிஸ்துவ வேதமாகிய பைபிளுக்கும், முகமதியர் வேதமாகிய குர் ஆனுக்கும், பாரசீகரின் வேதமாகிய ஜெண்டவஸ் தாவுக்கும் உண்டு என்று கருதுபவன் நான்" என்றவர் அவர்.

"இந்தியாவில் இந்துக்கள் மட்டுமே இருக்க வேண்டுமென்று இந்துக்கள் கருதினால் அவர்கள் கனவு காண்பவர்கள் ஆவார்கள். இந்தியாவைத் தங்கள் தாய் நாடாக்கிக் கொண்ட இந்துக்களுக்கும், முகமதியர்களுக்கும், பார்சிகளும், கிறிஸ்தவர்களும் சகோதரர்கள் ஆவார்கள்" என்றவர் அவர். முகமதியர்களை கீதை படிக்கச் சொன்னார். இந்துக்களை குரான் படிக்கச் சொன்னார். 'போலிக் குருமார்களின் போதனையைக் கேட்காதீர்கள்' என்று வேண்டிக் கொண்டார். எந்த சமூகமும், தனது நம்பிக்கைகளை அடுத்தவர் மீது திணிக்கக் கூடாது என்றார்.

"சூத்திரர்கள் வேதங்களைக் கற்கக் கூடாது என்ற தடையை நான் ஆதரிக்க முடியாது. நாம் அந்நியருக்கு அடிமையாக இருந்து வரும் வரையில் நாம் எல்லோருமே உண்மையில் தற்போது சூத்திரர்கள்தான்" என்று சொன்னவர் காந்தி.

இரு தேசியங்கள் இந்தியாவில் இருக்கிறது என்று சாவர்க்கர் சொன்ன போது, 'இரு தேசிய இனங்கள் எனும் கொள்கை பொய். இந்திய இந்துக்களும், முசுலீம்களும் வேறுவேறு இனமல்ல' என்றவர் காந்தி.

**'மதவாத எண்ணம் தோன்றினால் நாடு விஷம் வழிந்தோடும் தேசம் ஆகிவிடும். ஆனால் நான் கனவு காணும் நாடு அன்புநதிகள் வழிந்தோடும் நாடாகும்'** என்றவர் காந்தி. இன்று அவர் தேவைப்படுகிறார். அவரது கருத்துகள் தேவைப்படுகின்றன. அவர் நினைகூரப்பட வேண்டும். அவரது நினைவு நாளில் உறுதிமொழி எடுத்துக் கொள்வோம்!

**மனித நேயம் காப்போம்! மதவெறியை விலக்குவோம்! வேற்றுமையில் ஒற்றுமை காப்போம்! நமக்குள் உள்ள பிளவுகளை விலக்குவோம்! மதவெறி சக்திகளை வேரறுப்போம்! பிளவுபடுத்தும் சக்திகளை வேரறுப்போம்! பிறப்பொக்கும் என்பதே, நமது அறமாகும்! யாவரும் கேளிர் என்பதே, நமது பண்பாகும்! அமைதியான இந்தியா வேண்டும்! வகுப்புவாத இந்தியா வேண்டாம்! அனைவர்க்குமான இந்தியாவை உருவாக்குவோம்! ஒற்றுமை இந்தியா வேண்டும்!**

## நாகை மாவட்டத்தில் வீடு கட்டும் திட்டச் செயல்பாடு தொடர்பாக

# ஆளுநர் ரவியின் ஊடகப் பதிவிற்கு புள்ளி விவரங்களுடன் பதில்!

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி அறிவிப்பு!

**சென்னை, ஜன. 30-**

**பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவது தொடர்பாக சில சொந்த கருத்துகளை தமிழ்நாடு ஆளுநர் ரவி தெரிவித்து இருந்தார். இது தொடர்பாக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி புள்ளி விவரங்களோடு அளித்துள்ள பதிலறிக்கை பின்வருமாறு:**



நாகப்பட்டினம் மாவட்டம் வெண்மணி ஊராட்சியில் பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 127 பயனாளிகளுக்கு வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு இதுவரை 75 பயனாளிகள் வீடுகளை கட்டி முடித்துள்ளனர். மீதமுள்ள 52 பயனாளிகளால் வீடுகள் கட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு ஒன்றிய அரசால் 31,051 வீடுகள் மட்டும் வழங்கப்பட்டு 23,110 வீடுகள் பயனாளிகளால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

**ஊரக குடியிருப்பு திட்டத்தில் மாநில அரசின் கூடுதல் பங்களிப்பு!**

பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ், ஒரு வீடு கட்டுவதற்கு ஒன்றிய அரசு நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை ரூ.1.20 இலட்சம் ஆகும். இத்திட்டத்தில் ஒன்றிய அரசு தன் பங்காக வீடு கட்ட 72 ஆயிரம் ரூபாய் மட்டுமே வழங்குகிறது. ஆனால், ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலன் கருதி தமிழ்நாடு அரசு மாநிலத்தின் நிதி பங்களிப்பாக 1 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் வழங்குகிறது.

இதனுடன் மகாத்மா காந்தி வேலை உறுதித் திட்டம் மூலம் ரூ.26,460 தூய்மை பாரத இயக்கம் மூலம் ரூ.12,000 உடன் சேர்ந்து தமிழ்நாட்டில் ஒரு வீட்டின் அலகுத் தொகை ரூ.2,78,460 ஆக உள்ளது. இந்தியாவிலேயே அதிக அளவாக தமிழ்நாட்டில் தான் பயனாளிகளுக்கு பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடு கட்ட அதிக தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வரசு பதவியேற்றவுடன் 2,41,861 பயனாளிகளுக்கு வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. ஏற்கனவே அனுமதி வழங்கி முடிவுறாமலிருந்த வீடுகளையும் சேர்த்து 07.05.2021க்கு பின்னர் இதுவரை 2,93,277 வீடுகள் முடிக்கப்பட்டுள்ளன. இவ்வரசு பதவியேற்ற நாளான 07.05.2021க்கு பிறகு அலகு தொகையாக ஒன்றிய அரசு நிதியிலிருந்து ரூ.2933.31 கோடி வரப்பெற்றுள்ளது. மாநில அரசு இத்திட்டத்திற்கு ரூ.3116.54 கோடி நிதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், பயனாளிகள் விதிமுறைகளுக்கு உட்பட்டு முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டு, வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

**வெண்மணி ஊராட்சிக்கு ஒப்புதல் தராத ஒன்றிய அரசு!**

பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசால் ஊராட்சி வாரியாக வீடுகள் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்படுகிறது. ஒன்றிய அரசால் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு தகுதி வாய்ந்த பயனாளிகள் இல்லாத ஊராட்சிகளிலிருந்து, தகுதி வாய்ந்த பயனாளிகள் அதிகமுள்ள ஊராட்சிகளுக்கு வீடுகளை மாற்றி வழங்க, ஒன்றிய அரசு ஒப்புதல் அளிக்காத காரணத்தால், வெண்மணி போன்ற ஊராட்சிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் தேவைக்கேற்ப வீடுகள் வழங்க இயலவில்லை.

தற்போது தமிழ்நாடு அரசால் குடிசை வீடுகளுக்காக நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வெண்மணி ஊராட்சியில் மொத்தம் 66 குடிசை வீடுகள் தகுதி வாய்ந்தவையாக கண்டறியப் பட்டுள்ளது. மேற்காணும் குடிசை வீடுகள் தமிழ்நாடு அரசின் ஊரக குடியிருப்பு திட்டம் மூலம் கான்கிரிட் வீடுகளாக இனி வரும் காலங்களில் மாற்றப்படும்.

**1970களிலேயே குடிசைகளை மாற்றிய கலைஞர் அரசு!**

மேலும் வீட்டுமனை இல்லாத ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கி அவர்களுக்கு வீடுகள் கட்டி வழங்கியதும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தை (தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்) 1970களிலேயே உருவாக்கி நகர்ப்புரங்களில் குடிசையில் வசித்த வீடற்ற மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டி வழங்கியதும், ஊரகப்பகுதிகளில் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி எண்ணற்ற ஏழை மக்கள் பயனடைய வழிவகுத்ததும் முத்தமிழறிஞர் கலைஞரின் அரசு தான் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையுடன் தொடர்ந்து செயல்படும் இந்த திராவிட மாடல் அரசு, ஊரகப் பகுதி மக்களுக்கு தேவையான வீடு கட்டும் திட்டத்தினை தொடர்ந்து திறன்பட செயல்படுத்தும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் இ.பெரியசாமி குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்நாட்டுக்கு அதிக கெடுதல், கேடு நினைப்பவராகத் திகழும்

# ஆளுநர் ரவிக்கு 'மீடியா மேனியா' நோய் தாக்கியுள்ளதாகத் தெரிகிறது!

## அமைச்சர் எஸ்.ரகுபதி காட்டமான பதில்!

**சென்னை, ஜன.30-**

**"கேரளம், தெலங்கானா, தமிழ்நாடு ஆளுநர்களுக்கு இடையே யாருடைய பெயர் ஊடகங்களில் அதிகம் வருகிறது என மறைமுகப் போட்டி நடக்கிறது" என சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான எஸ்.ரகுபதி ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு பதில் அறிக்கை விடுத்துள்ளார்.**

அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களுக்கு 'மீடியா மேனியா' நோய் தாக்கியுள்ளதைப் போலத் தெரிகிறது. தினந்தோறும் தன்னைப் பற்றி ஏதாவது ஒரு செய்தி வரவேண்டும் எனச் செயல்பட்டு வருகிறார். அதிலும் குறிப்பாகத் தென் மாநிலங்களில் உள்ள கேரள ஆளுநர் ஆரீப் முகமது கான், தெலங்கானா ஆளுநர் தமிழிசை, தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என்.ரவி ஆகிய மூவருக்கும் தங்களுக்குள் யாருடைய பெயர் அதிகமாக மீடியாக்களில் வருகிறது என்ற மறைமுகப் போட்டியே இருப்பது போலத் தெரிகிறது. மாநில அரசின் மீது விமர்சனம் செய்து அதன் மூலம் ஊடக வெளிச்சம் பெறவே இத்தகைய செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். மூவரும் தாங்கள் ஆளுநர் என்பதையே மறந்து, பா.ஜ.கட்சியால் அனுப்பப்பட்ட அந்தந்த மாநில செய்தித் தொடர்பாளர்களைப் போல நடந்து கொள்கிறார்கள்.

**வாய்க்கு வந்ததைப் பேசும் ஆளுநர் ரவி!**

நேற்றைய தினம் நாகப்பட்டினம் சென்ற ஆளுநர், அதன் பிறகு ஒரு செய்தியை வெளியிட்டுள்ளார். நாகை மாவட்டத்தில் பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தைப் பற்றி விமர்சித்துள்ளார். வீடுகள் சரியில்லை என்றும் இதற்குக் காரணம் தமிழ்நாடு அரசின்நிர்வாக அக்கறையின்மை என்றும், ஊழல் என்றும் வாய்க்கு வந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி இருக்கிறார்.

அரசு திட்டத்தில் ஏதாவது விளக்கம் தேவைப்பட்டால் அது குறித்துக் கேட்டறியலாம். அதை விட்டுவிட்டு எதிர்க்கட்சியைப் போல மீடியாக்களில் விமர்சனம் செய்யக் கிளம்புவதுதான் ஒரு ஆளுநருக்கு அழகா? எந்த ஆதாரத்தின் அடிப்படையில் ஊழல் என்று கூறுகின்றார்? வாய்க்கு வந்ததைப் பேசிடவும் எழுதிடவும் அவர் அட்ரஸ் இல்லாத ஆள் அல்லவே?

**நினைவுச் சின்னத்தை குறைகூறும் ஆளுநர்!**

கீழ்வெண்மணி தியாகிகள் மணிமண்டபத்தையும் கொச்சைப்படுத்தி இருக்கிறார் ஆளுநர். குடிசைகளுக்கு மத்தியில் கான்கிரீட் கட்டுமானம் கட்டி இருக்கிறார்களாம். இது தியாகிகள் மற்றும் ஏழைகளுக்கு இழைக்கப்பட்ட கேலிக்குரிய அவமானமாம். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் நிலப்பிரபுத்துவ ஜாதியவாத சக்திகளால் தீ வைத்துக் கொளுத்தப்பட்ட தியாகிகளை நினைவுகூரும் வகையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியால் எழுப்பட்ட நினைவுச் சின்னம் அது. அத்தகைய கொடூர சம்பவத்தில் கொல்லப்பட்ட தியாகிகளைப் போற்றும் வகையில்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அந்தச் சின்னத்தை அமைத்துள்ளது. இதில் என்ன குறை கண்டார் ஆளுநர்? சுற்றிலும் இருக்கிற குடிசைகளை அகற்றச் சொல்கிறாரா?

அயோத்தியில் இப்போது ஆயிரம் கோடியில் கோயில் கட்டி இருக்கிறார்கள். அயோத்தி நகர் இப்போது எப்படி இருக்கிறது என்பதை ஆளுநர் ஆர்.என்.ரவி ஒரு முறை அங்கு போய் பார்த்துவிட்டு திரும்பட்டுமே. உலகத் தலைவர்கள் வரும் போது குஜராத் மாநிலத்து ஏழைகளின் வாழ்விடங்களை பச்சை 'ஸ்கிரீன்' போட்டு மறைத்ததை இந்த நாட்டு மக்கள் இன்னும் மறக்கவில்லை. எந்தப் பணிக்காக வந்தாரோ, அதை விட்டு விட்டு அனைத்தையும் பார்த்துக் கொண்டு இருக்கிறார் ஆர்.என்.ரவி.



**தமிழ்நாட்டின் நன்மைக்கு என்ன செய்தார் ஆளுநர்!**

'தமிழ்நாடு என்று சொல்லக் கூடாது, தமிழகம் என்றுதான் சொல்ல வேண்டும்' என்றார் ஆளுநர். வரலாற்றில் காலம் காலமாக இருக்கும் பெயரை மாற்றும் அதிகாரத்தை இவருக்கு யார் கொடுத்தது என்று சொன்னதும், அதனைத் திரும்பப் பெற்றுக் கொண்டார் ஆளுநர். சில நாட்களுக்கு முன்னால், 'மகாத்மா காந்தியால் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை' என்றார். அதற்கு எதிர்ப்பு கிளம்பியதும், ' நான் அப்படிச் சொல்லவில்லை' என்று சொல்லி விட்டார்.

தமிழ்நாட்டுக்கு ஆளுநராக வந்த ஆர்.என்.ரவி, தமிழ்நாட்டின் நன்மைக்காக இதுவரை ஏதாவது செய்துள்ளாரா என்றால் இல்லை. தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒன்றிய பா.ஜ.க அரசிடம் இருந்து ஏதாவது திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறாரா என்றால் இல்லை. குடும்ப வேலையாக அடிக்கடி டெல்லி செல்லும் அவர், தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கைக்காக எப்போதாவது டெல்லி சென்றுள்ளாரா என்றால் இல்லை. அவர்தான், சொந்தமாக எந்த நன்மையும் செய்யவில்லை. நாட்டு மக்களுக்கு நன்மைகள் செய்யும் தமிழ்நாடு அரசுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் உதவியாக இருக்கிறாரா என்றால் அதுவும் இல்லை. இடைஞ்சலாகவும், மாநிலத்துக்கு அதிக கெடுதல் செய்பவராகவும், கெடுதல் நினைப்பவராகவும் இருக்கிறார் ஆளுநர்.

**முறைகேட்டில் சிக்கியவரை காப்பாற்றத் துடிக்கும் ஆளுநர்!**

ஆன்லைன் ரம்மி தடைச் சட்ட மசோதாவுக்கு அனுமதி வழங்காமல் இழுத்தடித்தது முதல், ஊழல் மற்றும் நிதிமுறைகேடுகளில் சிக்கிக்கைதான சேலம் பல்கலைக்கழக துணைவேந்தரைக் காப்பாற்றும் நடவடிக்கைகள் வரை ஆளுநரின் அனைத்து நடவடிக்கைகளும் சர்ச்சைக்குரியதாக மட்டுமல்ல, சந்தேகத்துக்குரியதாகவும் அமைந்துள்ளன. தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட சட்ட முன்வடிவுகளையும், உத்தரவுகளையும், கோப்புகளையும் பல மாத காலமாக ஊறுகாய்ப் பானையில் ஊற வைப்பதைப்போல கிண்டி மாளிகையில் ஊற வைத்துக்கொண்டு இருக்கிறார். பொறுத்துப் பொறுத்துப் பார்த்து, தமிழ்நாடு அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்குப் போட்டோம்.

**மன்னர் போல தன்னை நினைத்துக் கொள்கிறார்!**

"ஆளுநர் என்பவர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுபவர். அவர் பெயரளவில்தான் மாநிலத்தின் தலைவராக இருக்கிறார். ஆளுநர் என்பவருக்கு அரசியல் சட்டப்படி சில அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன. அந்த அதிகாரங்களை வைத்து மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட சட்டப் பேரவைகள் சட்டமியற்றும் வழக்கமான பணிகளை முறியடித்துவிட முடியாது" என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் உறுதியாகத் தெரிவித்தார்கள். அதன் பிறகும் ஏதோ அதிகாரம் பொருந்தியவராக, தன்னை மன்னரைப் போல நினைத்துக் கொண்டு ஆளுநர் ரவி செயல்பட்டு வருகிறார்.

ஆளுநராக இருந்து அரசியல் செய்வதை விடுத்து, நேரடியாக அவர் அரசியல் களத்துக்கு வரலாம். அவரது அந்த ஆசைக்கு அகில இந்திய பா.ஜ.க தலைமை அனுமதி அளித்தால், 'அவருக்கும் நல்லது தமிழ்நாட்டு மக்களுக்கும் நல்லது' என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று திருத்தணி ஒன்றியத்திற்கு உட்பட்ட அகூர், கோரமங்களம், தாடுர், மத்தூர், ஆகிய பகுதியில் ரூ.4 கோடி 17 லட்சம் மதிப்பீட்டில் புதிய பள்ளி கட்டிடம், அங்கன்வாடி, துணை சுகாதார நிலையம் கட்டிடம், நியாய விலை கட்டிடம் உள்ளிட்ட பணிகள் துவக்க விழா நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டி பணிகளைத் துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள் என்.கிருஷ்ணன், ஆர்த்தி ரவி, கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் அகூர் மாணிக்கம், நரசிம்மன் ராஜு, காஞ்சனாபன்னீர்செல்வம், கிருஷ்ணமூர்த்தி, வளர்மதிகுமார், நிலா கோவிந்தசாமி, சுசிலா சுப்பிரமணியம், டில்லிபாபு, கோதண்டம் , கோவர்தன், வெங்கடேசன் , பன்னீர்செல்வம், கன்னியப்பன், கமலநாதன், முருகன், சம்பத், அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.






நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற விருதுநகர் மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்தவரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். இதில் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர் கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரான – அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மு.மணிமாறன் உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.






நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற சிவகங்கை மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்தவரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். இதில் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர் கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரான – அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### ‘யுனைடெட் ஸ்டூடென்ட்ஸ் ஆஃப் இந்தியா’ கூட்டமைப்பு சார்பில்

# சென்னையில் பிப்.1-ல் மாபெரும் மாணவர் பேரணி! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!

## மாணவரணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

**கோவை,ஜன.30-**

**தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட, மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம் நேற்று (29.01.2024 -திங்கட்கிழமை), காலை 10.00 மணியளவில், கோவை, பீளமேடு, காளப்பட்டி சாலை “சுகுணா கலையரங்கில்”, கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., தலைமையில், அணியின் தலைவர் இரா.ராஜீவ்காந்தி, இணைச் செயலாளர்கள் பூவை சி.ஜெரால்டு, எஸ்.மோகன், துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், சேலம் ரா. தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா. அமுதரசன், பி.எம். ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ. வீரமணி ஆகியோர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.**

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா, எம்.பி., கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, கழக மாணவர் அணிக்கு வழிகாட்டுதல்களை வழங்கினார்.

இக்கூட்டத்தில், கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொ.அ. ரவி, கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் மற்றும் கோவை மாநகர் மாவட்டக் கழக செயலாளர் நா. கார்த்திக் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அனைத்து மாவட்ட, மாநில மாணவர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

**மூலை முடுக்கெங்கும் கொண்டு செல்வோம்!**

வளமான மாநிலங்களே, வலிமைமிக்க ஒன்றியத்தை உருவாக்கும் என்ற உன்னத நோக்கத்தோடு, இந்திய துணைக்கண்டத்தில் இருக்கும் அத்தனை மாநிலங்களின் மாநில உரிமையை மீட்டெடுக்கும் வகையில், பெரியார் – அண்ணா – கலைஞர் ஆகியோர் வழியில், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையேற்று, கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்மொழிந்து நிறைவேற்றிய “மாநில உரிமை மீட்பு” தீர்மானங்களை, தமிழ்நாட்டின் பட்டி தொட்டியெங்கும், மூலை முடுக்கெங்கும், மாணவ, இளைஞர் சமுதாயத்திடம் கழக மாணவர் அணியினர் கொண்டு செல்வதை முதல் கடமையாக கருதி மாணவர் அணியின் இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

மாநில உரிமைகளை மீட்போம்! வளமான தமிழ்நாட்டை உருவாக்குவோம்! வலிமைமிக்க இந்தியாவை காப்போம்! என்ற பணியினை கழக மாணவர் அணியினர் வருங்கால தலைமுறையினராய் விளங்குகின்ற மாணவர்களிடம் கொண்டு சேர்ப்போம்! வருகின்ற 2024 நாடாளுமன்ற தேர்தலை வென்று காட்டுவோம்! இந்திய ஒன்றியத்தை பாசிசத்திடமிருந்து மீட்டெடுப்போம்! என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**நெஞ்சார்ந்த நன்றி!**

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டில், இந்திய அரசியலில் திருப்புமுனை மாநாடாகவும், தமிழ்நாட்டு வரலாற்றில் தடம் பதிக்கக் கூடிய மாநாடாகவும், “மாநில உரிமை மீட்பு” முழக்கத்தை முன்மொழிந்து நடைபெற்ற கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டினை திறந்து வைத்து, தொடக்க உரை வழங்கும் பெருமைமிகு வாய்ப்பை கழக மாணவர் அணியின் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.,வுக்கு வழங்கிட்ட கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் தனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

**கருத்தியல் பயிலரங்கம்!**

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிந்தனை, சொல், செயல் வடிவமாய் விளங்கும் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, திராவிட இயக்க சிந்தனை, கொள்கை, இலட்சியம், கோட்பாடுகள் ஆகிய கருத்தியலில் வலிமைமிக்கவர்களாகவும், இளைய தலைமுறையான மாணவ சமுதாயத்தினரிடம் திராவிட இயக்க சிந்தனை, கொள்கை ஆகியவற்றினை விதைக்கக் கூடியவர்களாக விளங்கிட வேண்டுமென்பதற்காகவும், அரசியலில் களமாடக்கூடிய முன்களபோர் வீரர்களாய் மாணவர் அணியினர் விளங்கிட வேண்டுமென்று, தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கு மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம் நடத்த அனுமதி வழங்கிட்ட கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி!

நடைபெற்ற இரண்டு கருத்தியல் பயிலரங்கத்தில் பங்கேற்ற மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கு பாராட்டுகளும், வாழ்த்துகளும்!

**டெல்லியில் நடைபெற்ற மாபெரும் மாணவர் பேரணி!**

கடந்த 03.01.2024 அன்று காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணையேற்று, கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, “யுனைடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா” (United Students of India) என்ற மாணவர் கூட்டமைப்பு சார்பில், தேசிய கல்விக் கொள்கை 2020 மற்றும் அதை கொண்டு வந்த பாசிச பா.ஜ.க. அரசை நிராகரிப்போம்! இந்தியாவை காப்போம்! கல்வி உரிமையை காப்போம்!! என்ற முழக்கத்தோடு, கடந்த 12.01.2023 அன்று தலைநகர் டெல்லியில் நாடாளுமன்றம் நோக்கிய மாபெரும் மாணவர் பேரணி (Parliament March) எழுச்சியுடன் நடைபெற்றது. அப்பேரணியில் பல்வேறு மாணவர் அமைப்புகள் பங்கேற்றிருந்தாலும், நமது கழக மாணவர் அணியினரின் பங்களிப்பு பெருமளவு எழுச்சியை தந்தது. அப்பேரணி பெரும் வெற்றியடைய பங்காற்றிய கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநில அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கு, தலைமைக் கழக மாணவர் அணி நன்றிகளையும், நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!**

இந்தியாவின் வடக்கே நடைபெற்ற பேரணியைத் தொடர்ந்து, தெற்கே சென்னையில் “மாபெரும் மாணவர் பேரணி”ஐ யுனைடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா (United Students of India) கூட்டமைப்பு நடத்த முடிவெடுத்ததன் அடிப்படையில் வரும், 01.02.2024 அன்று சென்னையில் மாபெரும் மாணவர் பேரணி நடைபெற உள்ளது.

இப்பேரணியில் இந்திய அளவிலான பல்வேறு மாணவர் அமைப்புகளின் தலைவர்கள், நிர்வாகிகள் கலந்து கொள்ளவுள்ள நிலையில், பேரணியை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைக்கிறார். பேரணியின் நிறைவில், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுச்சியுரை ஆற்ற உள்ளார்.

இந்தியாவை காக்கவும், மாணவர்களின் கல்வி உரிமையை காக்கவும் நடைபெறும் இம்மாபெரும் பேரணியில், தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட, மாநில நிர்வாகிகள், மாணவர் அணியினர், தமிழ்நாடு, புதுவையிலுள்ள பல்வேறு கல்லூரிகளின் தி.மு.க. மாணவர் அமைப்பைச் சார்ந்த 15,000க்கும் மேற்பட்டவர்கள் கலந்துக் கொள்வதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

**பேச்சு – கட்டுரைப் போட்டிகள்!**

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்கள் கழக மாணவர் அணிக்கு பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்திட ஆணையிட்டார்கள். அதன்படி, பேச்சு, எழுத்து என இரண்டிலும் தனி அடையாளத்துடன் வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞரின் சிறப்புகளை, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடம் வளர்த்தெடுக்கும் வகையில், அனைத்து கழக மாவட்டங்களிலும் கழக மாணவர் அணியின் சார்பில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு மாவட்ட அளவிலான பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகள் மிகச் சிறப்புடன் நடைபெற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், பங்கேற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து, மாவட்ட அளவில் தேர்வானவர்களுக்கு மாநில அளவில் “மாணவ நேசன் – முத்தமிழறிஞர் கலைஞர் 100 பேச்சும் எழுத்தும்” இறுதிப் போட்டிகளை வரும் பிப்ரவரி மாதத்தில் நடத்துவதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது. மேலும், மாவட்ட அளவில் நடைபெற்ற பேச்சு மற்றும் கட்டுரை போட்டியில் வெற்றி பெற்றவர்களின் பட்டியலை உடனடியாக அளித்திட மாவட்ட அமைப்பாளர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

**கல்லூரிகளில் உறுப்பினர்களை சேர்த்திடுவீர்!**

திராவிட இயக்கத்தின் கொள்கைப் பாதையில் மாணவர்களை ஒன்றினைத்து, தாய் தமிழ் மொழிக்கு ஆபத்து என்று வந்த போது, இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டத்தில் தன்னுடன் பயின்ற பள்ளி நண்பர்களை ஒருங்கிணைத்து, ‘இளைஞர் மறுமலர்ச்சி அமைப்பு’ என்ற இயக்கத்தைத் தொடங்கி அதன் மூலம் இந்தி எதிர்ப்புப் பேரணிகளையும் இந்த அமைப்பின் மூலம் நடத்தினார். மேலும், தனது 17 வயதில், ‘தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்’ என்ற அமைப்பை ஏற்படுத்தி, அதன் தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டார். முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றமே, திராவிட இயக்கத்தின் முதல் மாணவர் அணி என்ற சிறப்பைப் பெற்றது. நமது கழகத்தின் மூத்த முன்னோடிகளாக இருந்து நம்மை வழிநடத்திய பேராசிரியர் பெருந்தகை க. அன்பழகன், நாவலர் இரா.நெடுஞ்செழியன், கே.ஏ.மதியழகன் உள்ளிட்ட திராவிட இயக்க முன்னோடிகள் இந்த அணியில் இணைந்து செயல்பட்டுள்ளனர். பெருமைமிகு கலைஞர் நூற்றாண்டில் நாம் வாழ்ந்து வரும் நமக்கு, மீண்டும் தமிழ் மாணவர் மன்றத்தை உருவாக்கிடும் பொன்னான வாய்ப்பினை நமது கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நமக்கு அளித்துள்ளார்.

கல்லூரிகளில் பயிலும் திராவிடக் இயக்க சிந்தனைக் கொண்ட மாணவர்களை ஒன்றினைத்து, அரசியல் சார்பற்று கல்லூரி மாணவர்களின் தேவைகளை, பிரச்சினைகளையும் பூர்த்தி செய்யும் வண்ணம் செயல்படவும், தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, தமிழர் கலை உணர்வு, தமிழின தொன்மையும், பெருமைகளையும் இளைய தலைமுறையினர் அறியும் வண்ணம் செயல்படவும், பகுத்தறிவு – சுயமரியாதை- சமூகநீதி – சமத்துவம் ஆகிய கொள்கைகளை கருத்தியல் பரப்புரை செய்திடவும், மேலும் மாணவர்களிடம் திறன் மேம்பாட்டினை உருவாக்க பயிற்சிகளும், ஊக்குவிக்கும் வகையில் போட்டிகளையும் நடத்திடும் வகையில் இம்மன்றம் செயல்படும்.

எனவே, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாடு மற்றும் புதுவையில் உள்ள அனைத்து கல்லூரிகள் மற்றும் கல்லூரி விடுதிகளில் “தமிழ் மாணவர் மன்றம்” உருவாக்கிடும் பணியினை விரைவாக துவக்கிட இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

**மாணவர் அணியின் கடும் கண்டனங்கள்!**

இந்திய சமூகத்தில் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கல்வி மறுக்கப்பட்டு, கல்வி ஒரு சாதிக்கு மட்டும் இருந்த நிலையை மாற்றி எல்லோருக்கும் கல்வி வேண்டுமென 16.09.1921 அன்று நீதிக்கட்சி அரசு வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணையை வெளியிட்டு, இந்திய சட்டமன்ற வரலாற்றில் முதன்முதலில் இட ஒதுக்கீடு முறையை அறிமுகப்படுத்தியது. 1928ஆம் ஆண்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டம் நிரந்தரமாக்கப்பட்டது. இதனால், அரசியல் – கல்வி – வேலைவாய்ப்பு உரிமை அனைத்துத்தரப்பு மக்களுக்கும் கிடைத்தது!

வகுப்புவாரி உரிமையை எதிர்த்து இடை இடையே பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டு வந்த போது, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பெரும் முயற்சியால் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட திராவிட இயக்கங்கள் அதை வென்று காட்டி, அரசியல் அமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தத்தை கொண்டு வந்து எல்லோருக்கும் படிக்கிற உரிமையை மீட்டெடுத்துள்ளது.

வருணாசிரம அடிப்படையில், சாதியின் அடிப்படையில் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு போன்ற உரிமைகள் மறுக்கப்பட்டதோ, அதே முறையில் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்டது தான் இடஒதுக்கீட்டு கொள்கை.

அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கப் பெற வேண்டுமென்ற சமத்துவ நோக்கத்திற்காக கொண்டுவரப்பட்ட இடஒதுக்கீட்டை சிதைப்பதற்காக உள்நோக்கத்துடன், திட்டமிட்டே இடஒதுக்கீட்டுப் பிரிவில் தகுதியானவர்கள் இல்லை என்று கூறி, உயர்கல்வி நிறுவனங்களில் எஸ்.சி., எஸ்.டி, ஒ.பி.சி. பிரிவில் காலியாக உள்ள இடங்களை பொது பிரிவினரை கொண்டு நிரப்ப நினைப்பது மீண்டும் இடஒதுக்கீட்டு கொள்கையை ஒட்டு மொத்தமாக அழிப்பதற்கான பாசிச பா.ஜ.க. அரசின் அடித்தளம்.

வருணாசிரம, சனாதனத்தை தூக்கி பிடிக்கும் பா.ஜ.க. பெரும் சதி திட்டத்தை செய்து, பல்கலைக் கழக மானியக் குழுவிக்கு இல்லாத அதிகாரத்தை அவர்கள் உருவாக்க நினைப்பது ஒரு சதி திட்டமாகும்.

கடந்த டிசம்பர் 28-ல் இடஒதுக்கீடு ரத்து தொடர்பாக வரைவு அறிக்கை வெளியிட்டு, அதன் மீது ஜனவரி 28-க்குள் கருத்து தெரிவிக்கலாம் என்று சொல்லி அறிவிப்பு வெளியிட்டது யு.ஜி.சி. இடஒதுக்கீடு பற்றி முடிவெடுப்பதற்கு யு.ஜி.சி.க்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதை ஏன் இத்தனை நாள் ஒன்றிய பா.ஜ.க. அரசின் கல்வித்துறை அமைச்சர் மறுப்பு தெரிவிக்க மறந்திருந்திருக்கிறார். மறந்திருந்தார் என்றுச் சொல்வதை விட, குட்டி விட்டு ஆழம் பார்க்கலாம் என்ற ஒரு பெரும் சதி திட்ட நோக்கத்திலேயே இதை நிறைவேற்றி விடலாம் என்று காத்திருந்தனர்.

ஒவ்வொரு முறையும் இந்தியாவில் இடஒதுக்கீட்டிற்கு எதிரான சதிகள் வருகிற போதும், அதை எதிர்த்து குரல் கொடுக்கின்ற மண்ணாக, போராடுகிற மண்ணாக தந்தை பெரியாரின் திராவிட இயக்க மண்ணாக தமிழ்நாடு விளங்குகிறது. அவர் வழியில், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இப்போதைய நமது கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இடஒதுக்கீட்டினை காத்து கொண்டிருக்கும் அரணாக விளங்குகிறார்கள்.

அந்தவகையில், இப்போதும் தமிழ்நாட்டிலிருந்து கிளம்பிய எதிர்ப்பு குரல் பா.ஜ.க.வை எச்சரித்துள்ளது. அதை உணர்ந்த பா.ஜ.க. அப்படி அறிவிக்கவில்லை என்று பின்வாங்கியுள்ளது. பா.ஜ.க.வின் சதிதிட்டத்தை தமிழ்நாடு விழிப்புணர்வோடு உணர்ந்து கொண்டதற்கான காரணம் திராவிட இயக்கம் தந்த கல்வியே! அந்த விழிப்புணர்வு இந்தியா முழுமையும் பெற வேண்டுமென்று கழகத் தலைவர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

இனியும் இதுபோன்ற இடஒதுக்கீட்டிற்கு எதிரான எந்த செயலையும் செய்ய பா.ஜ.க. அரசு முற்படக்கூடாது என தி.மு.க. மாணவர் அணி எச்சரிக்கிறது. அரசியல் அமைப்பு சட்டம் வழங்காத அதிகாரத்தை தனக்கு இருப்பதாக நினைக்கிற யு.ஜி.சியின் தலைவராக விளங்கும் ஜெகதீஷ்குமார் அறிவித்த அறிவிப்பு மிகப்பெரிய கண்டனத்திற்குரியது. யு.ஜி.சியை எதிர்த்தும், இடஒதுக்கீட்டிற்கு எதிரான தனது சதிதிட்டத்தை நிறைவேற்ற நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு தி.மு.க. மாணவர் அணி கடும் கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




சென்னை, கலைவாணர் அரங்க வளாகத்தில் உள்ள மாநில செய்தி நிலைய கூட்டரங்கில் நேற்று (29.01.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய மண்டலங்களின் இணை இயக்குநர்களுடன் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர்.எல்.சுப்ரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு அரசின் தலைமை வழக்கறிஞராகப் பொறுப்பேற்ற மூத்த வழக்கறிஞர் பி.எஸ்.ராமன், தமிழ்நாடு அரசின் வழக்கறிஞராகப் பொறுப்பேற்றுள்ள ஏ.எட்வின் பிரபாகர் ஆகியோருக்கு கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி. மற்றும் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி., வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி., தமிழ்நாடு அரசின் கூடுதல் வழக்கறிஞர் ரவீந்திரன், அரசு கூடுதல் பிளிடர் சீனிவாசன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

### பத்து தினங்கள் நடைபெறுகிறது; பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்வீர்!

# சிவகங்கை மாவட்டத்தில் 3வது புத்தகக் கண்காட்சி!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்து பேச்சு!

*சிவகங்கை. ஜன. 30.*

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை மன்னர் பள்ளி வளாகத்தில் மாவட்ட நிர்வாகம், பள்ளி கல்வித் துறை, பொது நூலக இயக்ககம், மற்றும் பப்பாசி இணைந்து நடத்தும் மூன்றாவது புத்தகத் திருவிழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் நடைபெற்றது.

3வது புத்தக கண்காட்சியினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் திறந்து வைத்து பேசியதாவது.

முதல்வர் தளபதி அவர்களின் நல்லாட்சி சாதனையில் புத்தகத் திருவிழாவும் ஒன்றாகும். இத்தகைய புத்தகத் திருவிழா மாவட்டங்கள் தோறும் நடைபெறுவது நமக்கு மிகவும் மகிழ்ச்சியான செய்தியாகும். இந்த புத்தகத் திருவிழா மூலம் மூதாதையர்கள், முன்னோர்கள், தமிழர்கள் நாகரிகம் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பாக கீழடி அருங்காட்சியகம் வாயிலாக நமது முன்னோர்கள் வாழ்ந்த நாகரிகத்தை இன்று நாம் தெரிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளது .ஓலைச்சுவடி மூலம் தெரிந்து கொண்டது மாறி விட்டது . காலத்துக்கு ஏற்ப காகிதத்தை அச்சடித்து புத்தமாக தருகிறோம்.இந்த நவீன காலத்தில் அனைத்தும் டிஜிட்டல் மயமாக மாறி வருகிறது. அதற்கேற்ப நாம் நம்மை மாற்றிக் கொள்ள



வேண்டும்.

**புதையல் சுரங்கமாக அமைந்துள்ளது!**

புத்தகங்கள் மூலம் பல செய்திகளை அறிந்து கொள்ள வாய்ப்பாக அமைகிறது. புத்தகம் என்பது ஒரு புதையல் சுரங்கமாக அமைந்துள்ளது. இதற்காக புத்தகங்களை தேடிச்சென்று வாங்கி வருகிறோம்.அத்தகைய சிரமங்களைப் போக்கிடும் வகையில் முதல்வர் அவர்கள் மாவட்டம் தோறும் புத்தகக் கண்காட்சியினை திருவிழா போல் நடத்திட உத்தரவிட்டுள்ளார்.இதனால் ஏராளமான பதிப்பகங்கள் உருவாகிறது. புத்தகங்களும் அதிகமாக வெளிவருகிறது. இளைஞர்கள், முதியவர்கள் மாணவர்கள் என அனைவரும் புத்தகத் திருவிழாவில் புத்தகங்களை வாங்கி படிக்க வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். படிப்பதற்கு வயது ஏதும் கிடையாது. நாம் படிக்க வேண்டியது ஏராளமாக உள்ளது. வள்ளுவப் பெருந்தகை கற்க கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்கு தக என்று கூறியுள்ளார்.

கடந்த பத்தாண்டு அ.தி.மு.க. ஆட்சியில் இத்தகைய புத்தகத் திருவிழாக்கள் ஏதும் நடைபெறவில்லை. மாறாக கிராமப்புறத்தில் உள்ள நூலகங்களுக்கு மூடிமூடு விழா நடத்தினார்கள். முதல்வராக தளபதி அவர்கள் பதவி ஏற்றதும் புத்தகத் திருவிழாவினை மாவட்டம் தோறும் நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டார். இதன் மூலம் ஏராளமான புத்தகங்கள் நமக்கு கிடைக்க வாய்ப்பாக உள்ளது. முதல்வர் அவர்களும் தன்னை சந்திக்க வருபவர்களிடம் புத்தகங்கள் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார். சால்வை துண்டுகள் தரவேண்டாம் என்று கூறியுள்ளார் . அதன் மூலம் அவர் பெறும் புத்தகங்களை நூலகங்களுக்கு அன்பளிப்பாக தருகிறார்.

நமது மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெறும் புத்தகக் கண்காட்சி நல்ல முறையில் வருவாய் இலக்கினை எட்டி உள்ளது. இந்த ஆண்டு அதை தாண்டும் வகையில் புத்தகக் கண்காட்சி அமைய வேண்டும் இந்த புத்தகங்கள் மூலம் நம்முடைய தமிழர்களின் நாகரிகம் வாழ்க்கை வரலாறு எப்படி வாழ்ந்தார்கள் என்பதை அறிந்து கொள்ள வாய்ப்பாக அமைகிறது. எனவே பத்து தினங்கள் நடைபெறுகின்ற புத்தகக் கண்காட்சியினை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மோகன சந்திரன் வரவேற்றுப் பேசினார்.

நிகழ்ச்சியில் எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ் .மாங்குடி, திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர்த.சேங்கை மாறன், ஊராட்சி மன்றத்தலைவர் கே.எஸ்.எம். மணிமுத்து, சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம். துரை. ஆனந்த், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்க தலைவர் சேது.சொக்கலிங்கம் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

நிகழ்ச்சியில் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் காஞ்சிரங்கால் ஊராட்சி மன்றத் தலைவர் கே. எஸ். எம்.மணி முத்து,கல்லல் நாகராசன் ஆகியோர் தலா ஒரு லட்சம் நிதியினை புத்தகங்கள் வாங்குவதற்காக மாவட்ட ஆட்சியரிடம் அளித்தார்கள். மாவட்ட திட்ட அலுவலர் சிவராமன் நன்றி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மஞ்சுளா பாலச்சந்தர் எம். கார்கண்ணன், என். குணசேகரன், சுகிதா தாசில்தார் சிவராமன், முதன்மைக் கல்வி அலுவலர் பாலுமுத்து, மாவட்ட கல்வி அலுவலர்உதயகுமார், அதிகாரிகள், பொதுமக்கள், கல்லூரி, பள்ளி, மாணவ, மாணவிகள், அனைத்துக் கட்சியினர் பங்கேற்றனர்.

# நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், 22-01-2024 அன்று மாலை 5 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனவரி21 அன்று சேலத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் எழுச்சியுரையாற்றும்போது தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளான பொறுப்பு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ மாநகர / பகுதி/ ஒன்றிய/ நகர/ பேரூர் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட “நிர்வாகிகள் சந்திப்பு” கீழ்க்கண்ட அட்டவணைப்படி. சென்னை, அண்ணா சாலை, “அண்ணா அறிவாலயத்தில்” நடைபெறும்.

| தேதி | நேரம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 30.01.2024 | காலை 9.00 மணி | தூத்துக்குடி, கன்னியாகுமரி |
| | மாலை 3.00 மணி | மதுரை, தேனி |
| 31.01.2024 | காலை 9.00 மணி | இராமநாதபுரம், கடலூர் |
| 01.02.2024 | காலை 9.00 மணி | சிதம்பரம், மயிலாடுதுறை |
| | மாலை 3.00 மணி | நாகப்பட்டினம், தஞ்சாவூர் |
| 02.02.2024 | காலை 9.00 மணி | வேலூர், அரக்கோணம் |
| | மாலை 3.00 மணி | விழுப்புரம், கள்ளக்குறிச்சி |
| 03.02.2024 | காலை 10.00 மணி | வடசென்னை, தென் சென்னை |
| | மாலை 3.00 மணி | மத்திய சென்னை, திருபெரும்புதூர் |
| 04.02.2024 | காலை 9.00 மணி | திருவண்ணாமலை, ஆரணி |
| | மாலை 3.00 மணி | பெரம்பலூர், திருச்சி |
| 05.02.2024 | காலை 9.00 மணி | கரூர், திண்டுக்கல் |
| | மாலை 3.00 மணி | காஞ்சிபுரம், புதுச்சேரி |

குறிப்பு: அந்தந்த நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பாகவே அரங்கத்திற்குள் வந்து அமர்ந்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

### தென்காசி வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில்

# மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்கநாள் பொதுக்கூட்டம்!

## ஈ.ராஜா எம்.எல்.ஏ. - எஸ்.ஆஸ்டின் - குளித்தலை சலாவுதீன் சிறப்புரை!

*தென்காசி.ஜன.30-*

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் சங்கரன்கோவில் திருநீலகண்ட ஊரணி அருகில் உள்ள அம்பேத்கர் திடலில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் உதயகுமார் தலைமையில் மருத்துவரணி செண்பக விநாயகம், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துசெல்வி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிச்சை, மாணவரணி துணை அமைப்பாளர்கள் வீரமணி,தினேஷ் முத்துலட்சுமி, மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.நகர செயலாளர் பிரகாஷ் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமைக் கழக பேச்சாளர்கள் எஸ். ஆஸ்டின்,குளித்தலை சலாவுதீன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினர்.

நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் பத்மநாபன், மாவட்ட பொருளாளர் இல.சரவணன், பொதுக்குழு உறுப்பினர்கள் வேல்சாமி பாண்டியன்,தேவா என்ற தேவதாஸ்,பத்திரம் சாகுல் ஹமீது, ஒன்றிய செயலாளர்கள் கடற்கரை, சேர்மதுரை, லாலா சங்கரபாண்டியன், பெரியதுரை,இராமச்சந்திரன், புளியங்குடி நகர செயலாளர் அந்தோணிசாமி, பேரூர் செயலாளர்கள் மாரிமுத்து,ரூபி பாலசுப்ரமணியன்,

மாரியப்பன்,முத்துக்குமார்,சுப்புத்தாய், லாசர், செய்யதுஅலி, சிவசங்கரி, ரணி நாகூர் கனி,பொறியாளரணி பசுபதி பாண்டியன், மணிகண்டன், கிப்ட்சன், மாடசாமி, சங்கரதாஸ் லட்சுமி உள்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். சதீஷ்குமார் நன்றியுரையாற்றினார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிவிப்பின்படி நேற்று உத்திரமேரூர் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் கூட்டம் உத்திரமேரூரில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் பச்சையப்பன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி பேசினர். இதில் மாவட்ட நிர்வாகிகள் , ஒன்றியச் செயலாளர்கள் கெ.ஞானசேகரன், டி.குமார், குமணன், சேகர், செயற்குழு உறுப்பினர்கள் இரா.நாகன், பேரூர் செயலாளர்கள் வாலாஜாபாத் என்.பாண்டியன், என்.பஸ்.பாரிவள்ளல், ஒன்றிய குழு தலைவர்கள் – பேரூராட்சி தலைவர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### தேனி வடக்கு மாவட்டம் தாமரைக்குளம் – தென்கரை பகுதிகளில்

# அ.தி.மு.க. - தே.மு.தி.க. - மாற்றுக்கட்சியினர் 1000க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் முன்னிலை ! கே.எஸ்.சரவண குமார் ஏற்பாட்டில்!

*தேனி, ஜன. 30-*

தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள தாமரைக்குளம் மற்றும் தென்கரை பேரூராட்சி பகுதிகளில் இருந்து அ.தி.மு.க, தே.மு.தி.க. உள்ளிட்ட பல்வேறு மாற்று கட்சிகளை சேர்ந்த சுமார் 1000க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர். இதற்கான நிகழ்ச்சி பெரியகுளம் அருகே தாமரைக்குளத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. பெரியகுளம் தெற்கு ஒன்றிய செயலாளரும், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.சரவணக்குமார் ஏற்பாட்டில் . பெண்கள் உள்பட 1000க்கும் மேற்பட்ட மாற்று கட்சியினர் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் முன்னிலையி இணைந்தவர்களிடமிருந்து அவர்கள் ஏற்கனவே உறுப்பினர்களாக இருந்த கட்சி உறுப்பினர் கார்டுகள் பெற்றுக் கொள்ளப்பட்டு தி.மு.க. கட்சி துண்டு அணிவித்து வரவேற்க்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் பி.டி. செல்லப்பாண்டியன், மாவட்ட துணை செயலாளர் செந்தில்.பெரியகுளம் நகர செயலாளர் முகமது இலியாஸ், பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டியன், பெரியகுளம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் தங்கவேல், மீனவர் நலவாரிய உறுப்பினர் குள்ளப்புரம் முருகன், தாமரைக்குளம் பேரூராட்சி தலைவர் பால்பாண்டியன், துணைத் தலைவர் மலர்கொடி சேதுராமன், நியமன குழு தலைவர் பாலாமணி பழனி முருகன், தென்கரை பேரூராட்சி தலைவர் நாகராஜ், தாமரைக்குளம் பேரூர் செயலாளர் கருத்தராசு தென்கரை பேரூராட்சி செயலாளர் பாலமுருகன் உள்பட நிர்வாகிகள், உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.



நாடாளுமன்ற தேர்தல் 2024–ஐ முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் வடசென்னை, மத்திய சென்னை, தென்சென்னை, திருவள்ளூர், திருப்பெரும்புதூர், அரக்கோணம், திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய 8 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் உதவி அலுவலர்களுக்கு 29.01.2024 முதல் 02.02.2024 வரை நடைபெறவுள்ள 5 நாட்களுக்கான சான்றிதழ் பயிற்சி வகுப்பினை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நேற்று (29.01.2024) தொடங்கி வைத்து உரையாற்றினார். இந்தப் பயிற்சி வகுப்பில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) சி.சுரேஷ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





வியாசர்பாடி F.F.C கால்பந்தாட்ட குழு 40 வது ஆண்டு துவக்க விழா பொங்கல் திருநாளை முன்னிட்டு F.F.C கால்பந்தாட்ட குழு சார்பில் மாபெரும் ஒரு நாள் வெட்ரன் கால்பந்து போட்டி த.அன்புகன் தலைமையில் திரு.வி.க.நகர், வடக்கு பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன், பெரம்பூர் ஆர்.மகேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு போட்டியை துவக்கி வைத்து வெற்றிபெற்ற அணிக்கு 60,000 (அறுபதாயிரம்) ரொக்கமும் இரண்டாம் பரிசு பெற்ற அணிக்கு 50,000 (ஐம்பதாயிரம்) ரொக்கமும் வெற்றி கோப்பையும் வழங்கினார்.

அரசுத் திட்டங்களின் பயன்கள் அனைத்துத் தரப்பு மக்களிடமும் உடனே சென்று சேர்ந்திட

# செய்தி மக்கள் தொடர்புத்துறை - இணைப்புப் பாலமாகச் செயல்பட வேண்டும்!

## மண்டல இணை இயக்குனர்கள் ஆய்வுக் கூட்டத்தில் – அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவுரை!

சென்னை, ஜன.30

அரசுத் திட்டங்களின் பயன்கள் அனைத்துத் தரப்பு மக்களிடமும் உடனே சென்று சேர்ந்திட செய்தி மக்கள் தொடர்புத் துறை இணைப்புப் பாலமாகச் செயல்பட வேண்டும் என மண்டல இணை இயக்குநர்களுக்கான பணி ஆய்வுக் கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அறிவுரை வழங்கினார்.

அதன் விபரம் வருமாறு:-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் மண்டல இணை இயக்குநர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நேற்று (29.1.2024) மாநிலச் செய்தி நிலையக் கூட்ட அரங்கத்தில் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலும், விழாக்களிலும் வெளியிட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்பான அறிவிப்புகளில் நிலுவையில் உள்ள அறிவிப்புகள், முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை அமைச்சரால் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றில் நிறைவேற்றப்பட்டவை. அவை அளித்திடும் பயன்கள் குறித்தும், நிலுவையில் உள்ள அறிவிப்புகளை உடனடியாகச் செயலுக்குக் கொண்டுவருதல் குறித்தும், “தமிழரசு” மாத இதழ் சந்தாவை அதிகரித்தல் குறித்தும், கள விளம்பரம் குறித்தும் ஆய்வுகள் மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், அமைச்சர் மு.பெ. ஆற்றியபோது குறிப்பிட்டதாவது:-

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று, மூன்றாண்டுகள் நிறைவுபெற உள்ள நிலையில் ஆய்வு செய்யும் போது, நம்முடைய துறையில் பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றி இருக்கிறோம் என்பதும், அது போல தமிழரசு இதழ் மூலம் பல்வேறு மலர்களை வெளியிட்டுள்ளோம் என்பதும் நமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றன.

செய்தி மக்கள் தொடர்புத் துறை அரசினுடைய ஒவ்வொரு செயல்பாட்டையும் மக்களிடம் எடுத்துச் செல்கின்ற மகத்தான பணியைச் செய்கின்ற துறை. சுதந்திரப் போராட்டத் தியாகிகள், தமிழ் மொழிக்காவலர்கள், நாட்டு முன்னேற்றத்திற்கு உழைத்து ஊக்கமளித்த உத்தமர்கள் பலருக்கும் ஏற்கனவே வைக்கப்பட்டுள்ள சிலைகள் மற்றும் அரங்கங்களை நாம் பராமரித்து வருகின்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் புதிதாக அறிவிக்கப்பட்ட சிலைகளையும் அரங்கங்களையும் உருவாக்கி வருகிறோம்.

இந்தச் சிலைகள், மணிமண்டபங்களின் முக்கியத்துவத்தை மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயலாற்றிட வேண்டும்.

அரசினால் அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களை உதாரணமாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மக்களுடன் முதல்வர் திட்டம் முதலான பல திட்டங்களையும், மக்கள் அறிந்து உணர்ந்து அவற்றின் பயன்களை அடைதல் குறித்தும் விளம்பரப் பதாகைகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் மூலம் மக்களுக்கு அவ்வப்போது விளக்கமாகத் தெரிவித்து வருகிறோம்.

செய்தி மக்கள் தொடர்புத்துறையால் மாவட்டங்களில் திட்டங்கள் குறித்து வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பதாகைகளில் அத்திட்டங்களின் தகுதி மற்றும் பயன்கள் குறித்த சிறு குறிப்பினையும் இடம்பெறச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் பொதுமக்கள் அத்திட்டங்கள் குறித்து பயன்பெற ஏதுவாக இருக்கும்.

நம்முடைய தமிழரசு இதழ் ஒவ்வொரு மாதமும் முதலமைச்சர் அவர்களின் திட்டங்கள் செயலாக்கப்படுவது குறித்து உரிய படங்களுடன் விரிவாக செய்திகளை வெளியிட்டு வருகிறது. அதற்காக எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த தமிழரசு இதழின் வாயிலாக அரசின் திட்டங்களை பொதுமக்கள் மேலும் அறிந்து பயனடையும் வகையில் அதன் விற்பனை அதிகரித்திடல் வேண்டும். அதற்காக ஒவ்வொரு மண்டல இணை இயக்குநரும் தங்களுடைய மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர் அவர்களை அணுகி தமிழரசு மாத இதழ் ஆயுள் சந்தாவை அதிகப்படுத்த உரிய நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ள வேண்டும். அடுத்த ஆய்வுக் கூட்டத்தில் அவ்வாறு அதிகரித்த சந்தாக்களின் விவரங்கள் மண்டல இணை இயக்குநர்களால் எடுத்துரைக்கப்பட வேண்டும். இது மிகவும் அவசியம்.

தமிழரசு ஆயுள் சந்தா இலக்கை எட்ட மாவட்ட ஆட்சியர்களிடம் மண்டல இணை இயக்குநர்கள் பேசி, மாவட்ட அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சியர்களை பேசவைத்து, ஆயுள் சந்தா எண்ணிக்கையை உயர்த்தச்செய்ய வேண்டும்.

தங்களுடைய மாவட்டங்களில் அரசுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள இடங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அனுமதியுடன் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் செய்தியாளர்களை அழைத்துச்சென்று அவற்றை விளக்கி செய்தி இதழ்கள் மூலம் அவை குறித்த விவரங்கள் புகைப்படங்களுடன் வெளிவர மண்டல இணை இயக்குநர்கள் உரிய அறிவுரைகள் வழங்கிட வேண்டும்.

மண்டல இணை இயக்குநர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் உள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடன் வாட்ஸ்அப் (Whatsapp) மூலம் ஆய்வு கூட்டம் நடத்தி பணிகளின் முன்னேற்ற நிலை குறித்து அறிந்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அவ்வப்போது நடைபெற்று வரும் பணிகளின் புகைப்படங்களைப் பெற்று ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

மண்டல இணை இயக்குநர்கள் செய்திமக்கள் தொடர்புத்துறை தொடர்பான முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் முன்னேற்ற நிலையை வேகப்படுத்தி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், மாவட்ட ஆட்சியர்கள் நடத்தும் கூட்டத்தில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களைப் பங்கேற்கச் செய்து செய்தி மக்கள் தொடர்புத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு மேற்கொள்ளச் செய்ய வேண்டும். மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், மாவட்டங்களில் ஏதாவது பிரச்சினை எழும்போது, அதை மாவட்ட ஆட்சித்தலைவரிடம் எடுத்துச் சென்று, பிரச்சினைக்குச் சுமூகத் தீர்வு காண வேண்டும். செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அலுவலர்கள் அரசுக்கும் மக்களுக்கும் பாலமாகச் செயல்பட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் குறிப்பிட்டார்.

முன்னதாக, துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன் முன்னிலை உரையாற்றினார். செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் வரவேற்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் இயக்குநர் (செய்தி), ச.செல்வராஜ் மற்றும் மண்டல இணை இயக்குநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி, தலைமையில், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அரசு தலைமை மருத்துவமனையில் புதியதாக கட்டப்பட்டு வரும் மருத்துவமனை கட்டிடங்களை நேற்று (29.01.2024) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தனர். உடன் திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷி நிகம், திண்டிவனம் நகர்மன்ற தலைவர் திருமதி ஆர்.நிர்மலா பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பரிதி, இணை இயக்குநர் மரு.லட்சுமணன், திண்டிவனம் நகர்மன்ற தலைவர் திருமதி தமிழ்ச்செல்வி உட்பட பலர் உள்ளனர்.

திண்டிவனம் தலைமை அரசு மருத்துவமனையில்

# புதிய மருத்துவமனைக் கட்டிடங்கள் கட்டும் பணி!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – செஞ்சி மஸ்தான் நேரில் ஆய்வு!

திண்டிவனம், ஜன. 30 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி தலைமையில், திண்டிவனம் தலைமை அரசு மருத்துவமனையில், புதிய மருத்துவமனை கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவதை நேற்று (29.01.2024) பார்வையிட்டு, ஆய்வு செய்தனர்.

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், செஞ்சி மஸ்தான் ஆகியோர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2022 ஜனவரி திங்களில், தமிழ்நாட்டில் 25 புதிய மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் அறிவிக்கப்பட்டது. ஏற்கனவே, தமிழகத்தினை பொறுத்தவரை 19 இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் இருந்தது. தமிழ்நாடு முதலமைச்சர், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் அதிக எண்ணிக்கையில் வர வேண்டும் என்பதன் அவசியம் கருதி, 19 புதிய மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளும், 6 இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு இணையாக அமைக்கப்படும் என்று அறிவித்தார். அதனடிப்படையில் இதற்காக ரூ.1,100 கோடி நிதி ஒதுக்கீடும் செய்துகொடுத்துள்ளார்கள். அந்த வகையில், தமிழ்நாட்டில் மா வட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கான கட்டமைப்பு பணிகள் வேகமாக நடைபெற்ற வண்ணம் உள்ளன.

விழுப்புரம் மாவட்டத்தை பொறுத்தவரை, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையினை தொடர்ந்து, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, முதலமைச்சர் அவர்கள் திண்டிவனத்தில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை அமைத்திட உத்தரவிட்டார்கள். மேலும், இதன் கட்டமைப்பினை அதிகரித்திட வேண்டும் என்ற நோக்கத்தில் ரூ.60.00 கோடி மதிப்பீட்டில் புதியதாக மருத்துவமனை கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். தற்பொழுது, இதற்கான கட்டுமானப்பணிகள் விரைவாக நடைபெற்று கொண்டிருக்கிறது.

திண்டிவனம் அரசு தலைமை மருத்துவமனையில், ரூ.60.00 கோடி மதிப்பீட்டில், தரைத்தளம் மற்றும் ஐந்து தளங்கள் தலா 1935.00 ச.மீ பரப்பளவு வீதத்திலும், சாய்தள பரப்பு 700.00 ச.மீ, இணைப்பு பகுதி 95.00 ச.மீ என மொத்தம் 12,475 ச.மீ பரப்பளவில் அமையவுள்ளது. இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் தளங்களில் 1,000 ச.மீ பரப்பளவில் மகப்பேறு மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை கட்டடமும், தரைத்தளத்தில் 166.00 ச.மீ பரப்பளவில் பிண வறைக் கட்டடமும், 63.00 ச.மீ பரப்பளவில் எச்.டி அறையும் கட்டப்பட்டு வருகிறது.

திண்டிவனம் அரசு தலைமை மருத்துவமனையில் கட்டிடப்பணிக்காக ரூ.40.00 கோடியும், ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் மருத்துவமனை இயந்திரங்கள் மற்றும் உள்கட்டமைப்பு தேவைக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிய மருத்துவமனை கட்டிடத்தில், தரைதளத்தில், காத்திருப்பு பகுதி, மருந்தகம், எக்ஸ் கதிர், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மற்றும் வி.டி. ஸ்கேன், கோப்புகள் அறை, புறநோயாளிகள் வார்டு, மீட்பு அறை, மருத்துவர் அறை, அவசர சிகிச்சைப் பிரிவு, விபத்து பிரிவு, காவலர் விசாரனை பிரிவு, பதிவறை, பணி நேர மருத்துவர் அறை, பணிநேர செவிலியர் அறை, கழிவறையும், முதல் தளத்தில், சிகிச்சை அறை, மருத்துவக் கருவிஅறை, பணிநேர மருத்துவர்கள் அறை, பணி நேர செவிலியர்கள் அறை, தனிமைப்படுத்தப்பட்ட அறை, குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு, தீவிர சிகிச்சை பிரிவு, இரண்டாம் தளத்தில், சிகிச்சை அறை, மருத்துவக்கருவிகள் அறை, பணிநேர மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அறை, மருத்துவ வார்டு, சேமிப்பு அறை, சரக்கறை, குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவு, உயர்சார்பு அலகு குழந்தைகள் பிரிவு, உயர்சார்பு அலகு வார்டு, தனிமைப்படுத்த அறை, கழிவறை, மூன்றாம் தளத்தில், சிகிச்சை அறை, மருத்துவக் கருவிகள் அறை, பணிநேர மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அறை, மருந்தகம், தனிமைப்படுத்தப்பட்ட அறை, அறுவை சிகிச்சைக்குப்பின் வார்டு (குழந்தைகள்), நான்காம் தளத்தில், மீட்பு அறை, நோயாளிகள் கண்காணிப்பு அறை, பணிநேர செவிலியர் அறை, பரிசோதனை அறை, சரக்கறை, கருத்தடை மற்றும் சுத்தம் செய்யும் அறை, அறுவை சிகிச்சை தியேட்டர் 5 எண்கள், கழிவறை, ஐந்தாம் தளத்தில், கருத்தரங்கு அறை, காத்திருப்பு அறை, எம்.ஆர்.டி அறை, அறுவை சிகிச்சை அறை, தீப்புண் சிகிச்சைப் பிரிவு, தனிமைப்படுத்தப்பட்ட அறை கழிவறை போன்ற பல்வேறு பிரிவுகளுடனும், மின்தூக்கி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகளுடன் மருத்துவமனை கட்டடம் அமையவுள்ளது.

திண்டிவனம் ஒட்டிய கிராமப்புற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அவசர மருத்துவ என்றால் விழுப்புரம் அல்லது புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையினை நாடிச்செல்கின்ற நிலை இருந்து வந்தது. தற்பொழுது திண்டிவனத்தில் மாவட்ட அரசு தலைமை அமைக்கப்பட்டு தரம் உயர்த்தப்பட்டு வருவதால், இப்பகுதியினைச் சேர்ந்த மக்கள் இந்த மருத்துவமனைகளிலே சிகிச்சை பெற்றுச்செல்கின்ற நிலை உருவாக உள்ளது என அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில், திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்வாயன்ஷி நிகம், திண்டிவனம் நகர்மன்ற தலைவர் திருமதி ஆர்.நிர்மலா, இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.லட்சுமணன், துணை இயக்குநர் (சுகாதார நலப்பணிகள்) மரு.செந்தில்குமார், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.பரிதி, திண்டிவனம் நகராட்சி ஆணையர் திருமதி தமிழ்ச்செல்வி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள்!

மத நல்லிணக்கத்தின் அடையாளமான அண்ணல் காந்தியடிகள் அவர்கள் மதவெறியர்களால் கொல்லப்பட்ட ஜனவரி 30ஆம் நாளை, நாடு முழுவதும் மதநல்லிணக்க நாளாகக் கடைப்பிடிக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும். மதச்சார்பற்ற ஜனநாயகச் சக்திகள் இதில் கவனம் செலுத்தியாக வேண்டும். அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டுக்கு இந்தக் கடமை அதிகம் இருக்கிறது.

எனவே, ஜனவரி 30ஆம் நாளன்று மதநல்லிணக்க உறுதிமொழியை அனைவரும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சரும், நம்முடைய கழகத் தலைவருமான தளபதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, இன்று (30.01.2024) காலை 10 மணியளவில், சைதை இரயில் நிலையம் அருகில் உள்ள தேரடி வீதியில் மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில், சென்னைத் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பகுதி மற்றும் ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள்,

மாவட்ட பிரதிநிதிகள், இளைஞரணி, மகளிரணி, மாணவரணி, மீனவரணி, மகளிர் தொண்டர் அணி, தொழிலாளரணி, தொண்டரணி, தொழில் நுட்ப அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, இலக்கிய அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, சிறுபான்மை நல உரிமைப் பிரிவு, நெசவாளர் அணி, வர்த்தகர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மற்றும் கழகத்தின் அனைத்து நிலை சார்ந்த செயல்வீரர்கள். வீராங்கனைகள் அனைவரும் பெருமளவில் பங்கேற்றிட வேண்டுகிறேன்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்**

செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக தோழர்கள் வீடுகளில் கழக கொடி ஏற்றும் விழா நடைபெற்றது. இதில் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் கரிம்பேடு ஊராட்சி கழக தோழர் இல்லத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கழக கொடி ஏற்றினார். உடன் ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் சி.ஜெ.சீனிவாசன் பொதுக்குழு உறுப்பினர் ராஜேஸ்வரி ரவீந்திரநாத். பள்ளிப்பட்டு பேரூராட்சி மன்ற தலைவர் மணிமேகலை. ஒன்றிய அவைத் தலைவர் திருமலை லோகநாதன். கவுன்சிலர்கள். எஸ்.கே.சேகர், சிபி, முத்து, சி.ஜே செந்தில்குமார் , குணசேகரன், கபிலா சிரஞ்சீவி, புவனா மோகன்ராஜ் , பானு ஜெகதீஷ், கிளைச் செயலாளர் மீனா கோபால், குமார், மாதவன், கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள். பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, திருமுல்லைவாயல், செந்தில் நகரில் ரூபாய் 36 லட்சம் மதிப்பிலும் மற்றும் அகத்தியர் தெருவில் ரூபாய் 27 லட்சம் மதிப்பில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இரண்டு புதிய பூங்காவிற்கு முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார். உடன் மாநகர மேயர் உதயகுமார், மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ்,பகுதி செயலாளர் பேபி சேகர், நாராயண பிரசாத் செல்வம் உள்ளனர்.

எவ்வளவு நிதி நெருக்கடிகள் இருந்தாலும் மக்களின் நிலையை கருத்தில் கொண்டு

# திட்டங்களை வகுத்து, ஓய்வின்றி உழைப்பவர் நமது முதலமைச்சர்!

## தருமபுரி மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்கப் பொதுக்கூட்டத்தில் கு.பிச்சாண்டி பேச்சு!

*தருமபுரி, ஜன. 30 -*

தமிழகத்தில் இந்தி மொழி திணிப்புக்கு எதிராக நீண்ட போராட்டங்கள் நடந்தன, போராட்டத்தில் ஈடுபட்டு கைதானவர்களில் சிலர் சிறை கொடுமை தாங்காமல் உயிரிழந்தனர். தமிழ் மொழிக்காக தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் வகையில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் வழிகாட்டுதல்படி, தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்ரமணி வழிகாட்டுதல்படியும், மாநில மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பின்படி, தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக மாணவர் அணி சார்பில் தருமபுரி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நெசவாளர் காலனி பகுதியில் நடைபெற கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற துணைத் தலைவர் கு.பிச்சாண்டி



மற்றும் தலைமைக் கழகப் பேச்சாளர் திருச்சி ராதாகிருஷ்ணன் ஆகியோர் மொழிப்போர்த் தியாகிகள் வரலாற்றைப் பற்றி சிறப்புரையாற்றினர்.

தமிழ்நாடு சட்டமன்ற துணைத் தலைவர் கு.பிச்சாண்டி பேசுகையில், முத்தமிழறிஞர் கலைஞர் நாட்டிற்கு ஆற்றிய பணிகள் அளப்பரியது. இன்றைய நமது முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களும், அதே போல் ஓய்வின்றி மக்கள் பணியில் செயல்பட்டு வருகிறார்.

ஒன்றிய அரசு பேரிடரின் பொழுது தேவையான அளவு நிதி வழங்காத நிலையிலும் மக்களின் நிலையை கருத்தில் கொண்டு முதலமைச்சர், அவர்களின் நிலை மேம்பட 6000 ரூபாய் நிதி வழங்கினார்.

எவ்வளவு நிதி நெருக்கடிகள் இருந்தாலும் மக்களின் நிலையை கருத்தில் கொண்டு திட்டங்களை வகுத்து, ஓய்வின்றி உழைப்பவர் நமது முதலமைச்சர். இந்தியாவிற்கே முன்னோடியாய் பெண்களுக்கு இலவச பஸ் பயணம்,பெண்களுக்கு உரிமைத்தொகை என பல திட்டங்கள் முதலமைச்சர், கழகத் தலைவர் தீட்டி நமக்கு அளித்துள்ளார்.

எனவே வர இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாமெல்லாம் ஒன்றிணைத்து பாசிச ஒன்றிய அரசை வேரறுக்கும் வகையில் வென்றிட முனைப்புடன் உழைக்க வேண்டும் என்று பேசினார்.

கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பெரியண்ணன் ஏற்பாட்டில் மாவட்ட அவைத் தலைவர் சி.செல்வராஜ் மற்றும் மாநில நிர்வாகிகள் தாமரைச்செல்வன், தர்மசெல்வன், செந்தில் குமார் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் வே. தங்கமணி, ரேணுகா தேவி, உமாசங்கர், ஆறுமுகம் மற்றும் பொதுக்குழு உறுப்பினர் எம்.ஜி.சேகர் மற்றும் நகரச் செயலாளர் நாட்டான் மாது, நகர மன்றத் தலைவர் லட்சுமி மாது, மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் மே.அன்பழகன் மற்றும்

ஒன்றியச் செயலாளர் கே.எஸ்.ஆர்.சேட்டு, ஏரியூர்.என்.செல்வராஜ், சண்முகம், மல்லமுத்து, வைகுந்தம், சபரிநாதன் மற்றும் நகர நிர்வாகிகள் முல்லைவேந்தன், அழகுவேல், அன்பழகன், கோமளவல்லி ரவி, கனகராஜ், சுருளிராஜன், மாணவரணி துணை அமைப்பாளர்கள் கா.கௌதம், அன்பரசு, வேடியப்பன் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! கே.எஸ்.ச.இளையசூரியன் வரவேற்புரை!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் - அமைச்சர் எஸ்.ரகுபதி - கலை கதிரவன் சிறப்புரை!

*புதுக்கோட்டை, ஜன. 30 -*

புதுக்கோட்டையில் வடக்கு மாவட்ட மாணவரணி நடத்தும் மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கநாள் பொதுக் கூட்டம் 25.01.2024 - வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு திலகர் திடல், புதுக்கோட்டையில், வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கே.எஸ்.இளையசூரியன் வரவேற்புரையாற்றினார்.

புதுக்கோட்டை நகரக் கழகச் செயலாளர் ஆ.செந்தில், சிப்காட்நகர் பா.சதீஷ் குமார் செ.பிரசன்னா, ராயல் ஆர்.சபாபதி, கோ. அண்ணாத்துரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழக செய்தி தொடர்பு செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், சட்டத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி, தலைமைக் கழகப் பேச்சாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இதில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., த.சந்திரசேகரன், சுப.சரவணன், செ.அசோக்பாண்டியன், டாக்டர் ரகு அண்ணாமலை, அரு.வீரமணி, க.மதியழகன், பெ.இராஜேஸ்வரி, எம்.லியாக்கத் அலி,

சு.சண்முகம், ஜெயலெட்சுமி தமிழ்செல்வன், கே. எஸ்.சந்திரன், மு.க. ராமகிருஷ்ணன், வெ.முத்துக் கிருஷ்ணன், ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து சி.சண்முகம், இராப்பூசல் எம்.செந்தில் குமார், என்.சாத்தையா இரா.சந்தோஷ், உ.முருகேசன், பி. அண்ணாத்துரை,

எம்.எஸ்.ஏ.முகமது ரிஷா, அ.ரெத்தினம், டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், சி.அரங்கநாயகம், க.கவிவேந்தன், வே.ராஜேஷ், தவசுமணி, எஸ்.வி.ஆர். ஜெய் ஸ்டாலின், மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், அன்சாரி பாஷித், ஜெ. அஸ்ரப் அலி, ஆ. ராஜேந்திர சோழன், மழையூர் ராமசாமி, வெற்றிச் செல்வன், டி.அப்புக்காளை, எஸ்.வி.ஆர்.ராஜா, மழையூர் சத்யா, எம்.ஏ.எம். இம்தியாஸ், கி.சுப்பிர மணியன், தட்டாம்பட்டி ஆறுமுகம், காதர் கனி, செ.ரமேஷ், ஏ.எஸ்.கருணாநிதி, உஷா தேவி, க.செ.மணி மாறன், மேல விடுதி ஆறுமுகம், ஏ.எல்.கணேசன், பால்ராஜ். செல்லையா, பிரேம் ஆனந்த, முத்துக்கருப்பன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முடிவில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் தெய்வானை நன்றி கூறினார்.

# முதுகுளத்தூரில் புதிய வழித் தடத்தில் பேருந்து!

## அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் துவக்கி வைத்தார்!

*இராமநாதபுரம், ஜன. 30-*

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் பேருந்து நிலையத்தில் நேற்று (29.01.2024) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் புதிய வழித்தட பேருந்து இயக்கம் துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன், முன்னிலை வகித்தார். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், புதிய வழித்தடத்திற்கான புதிய பேருந்தை கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் தேவைகளை அறிந்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பொதுமக்களுக்கு தேவையான திட்டங்கள் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கமுதி, முதுகுளத்தூர், சாயல்குடி பகுதிகளில் இருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்று வர ஏதுவாக நேரடி பஸ் வசதி வேண்டி கோரிக்கைகளை முன்வைத்ததன் அடிப்படையில் நேற்று முதல் புதிய பேருந்து கமுதியிலிருந்து, சாயல்குடி வழியாக சிக்கல், தேரிருவேலி, வளநாடு, சத்திரக்குடி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை நாள்தோறும் நான்கு முறை சென்று வரும் வகையில் புதிய வழித்தடத்தில் இப்பேருந்து இயங்கும். இதன் மூலம் இப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கும், அரசு துறையில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மிக பயனுள்ளதாக இருக்கும். இதுபோல் மக்களின் தேவைக்கேற்ப மற்ற இடங்களிலும் பேருந்து வசதிகள் மேம்படுத்தி தரப்படும் என பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் , தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் சிங்காரவேலன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக கோட்ட மேலாளர்கள் நாகராஜன், பத்மகுமார், மாவட்ட ஊராட்சி குழுத் துணைத்தலைவர் வி.வேலுச்சாமி, முது குளத்தூர் பேரூராட்சி தலைவர் அ.ஷாஜஹான் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் ஆப்பனூர் ஆறுமுகவேல், பூபதி மணிக சண்முகம், கோவிந்தராஜன் மற்றும் கட்சி நிர்வாகிகள். அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




நேற்று (29.01.2024) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில், தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் அறிவிப்புகளை பொதுமக்கள் அறியும் வகையில் அமைக்கப்பட்டுள்ள புதிய மின்னணு சுவர்திரையினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் திறந்து வைத்தார்கள். உடன் மாநகராட்சி மேயர் திருமதி வசந்தகுமாரி கமலகண்ணன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், மண்டலக்குழு தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.

பேரறிஞர் அண்ணா 55வது நினைவு நாள் :

# கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் தலைமையில் பிப்.3 அன்று அமைதிப் பேரணி!

## மாவட்டக் கழகத் தோழர்களுக்கு சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!



காஞ்சி தந்த காவியத் தலைவர் - உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் - தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை -, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் - “மெட்ராஸ் ஸ்டேட்” என்ற பெயரை “தமிழ்நாடு” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் - சுயமரியாதை சுடரொளி - சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் - எழுத்து வேந்தர் - தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் - பேரறிஞர் அண்ணா அவர்களின் **55வது** நினைவு நாளினையொட்டி, **கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் கழக முன்னணியினர் பிப்ரவரி - 3, சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார்கள்.**

இந்த அமைதிப் பேரணி வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகிலிருந்து புறப்பட்டு அண்ணா சதுக்கத்தை சென்றடையும்.

கழக இந்நாள் - முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் - முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நல உரிமைப் பிரிவு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் அண்ணன் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

நாள்- 28-1-2024

**சென்னை மாவட்ட தி.மு.க.**

48வது இந்திய சுற்றுலா பொருட்காட்சியை

# 2.77 லட்சம் பேர் பார்வையிட்டுள்ளனர்!

## அமைச்சர் கா.இராமச்சந்திரன் தகவல்!

*சென்னை, ஜன.30*

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று (29.1.2024) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க. மணிவாசன், முதன்மை செயலாளர் /சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் /மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா ஆகியோர் முன்னிலையில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முன்னணி சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது.

தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள்.

முதலமைச்சர் அவர்களின் திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் அனைத்து துறைகளை சேர்ந்த அரங்கங்கள் அமைத்து தீவுத்திடலில் நடைபெற்று வரும் 48-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியினை 28.1.2024 வரை 2,77,876 நபர்கள் பார்வையிட்டுள்ளார்கள். 25.1.2024 முதல் 28.1.2024 வரை 4 நாட்களில் மட்டும் 94,352 நபர்கள் பார்வையிட்டுள்ளார்கள்.

சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தலமாக தமிழ்நாட்டை உருவாக்கும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை துணை செயலாளர் எ.மணிக்கண்ணன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி.இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை உதவி இயக்குநர்கள், சுற்றுலா அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம் விரகனூர் வேலம்மாள் பொறியியல் கல்லூரி கூட்டரங்கில் தனியார் பள்ளிகளுக்கு அங்கீகார ஆணைகளை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கிய போது எடுத்தபடம். உடன் பள்ளிக் கல்வித்துறை செயலாளர் குமரகுருபரன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், மு.பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# அயோத்தி பாலராமர் பேசினால் என்ன பேசுவார்?

**இ**ந்திய நாட்டு மக்களே!

பாலராமனான என்னை 300 கோடி ஆண்டுகள் பழமை வாய்ந்த பாறையிலிருந்து மைசூரைச் சேர்ந்த சிற்பி அருண் யோகிராஜ் செதுக்கினார். வாகனத்தின் மூலம் அயோத்திக்கு என்னைக் கொண்டு வந்தார்கள். அப்போது எனக்குத் தெரியாது, எனக்கு 'பிராணம்' - 'உயிர்' என்பது அப்போது இல்லை.

ஒரு தலைமை அர்ச்சகர் - நூற்றுக்கு மேற்பட்ட அர்ச்சகர்கள் சில 'பிரத்யேக' சடங்குகளைச் செய்ய பிரதமர் மோடி எனக்கு 'பிராண பிரதிஷ்டை' செய்தார். 'பிராண பிரதிஷ்டை' என்பது கற்சிலைக்கு மந்திரங்கள் மூலம் 'உயிரூட்டுவது' ஆகும். இதை சமஸ்கிருதத்தில் 'பிராண பிரதிஷ்டை' என்று சொல்லும்போது உங்களுக்குக் கொஞ்சம் பயமாகக் கூட இருக்கும். அந்த மொழியின் ஒலி அப்படி!

எனக்கு 'பிராண பிரதிஷ்டை' செய்யப்பட்டவுடன் அருள்தரும் தெய்வீகத் தன்மையை நான் பெற்று விடுகிறேன். நான் இப்போது கற்சிலை அல்ல. தெய்வம் - கடவுள் - பாலராமர் என்று ஆகிவிடுகிறேன். எனக்கு 'பிரபஞ்ச ஞானம்' கிடைத்துவிடுகிறது. வணங்கத் தகுதி பெற்றவன் ஆகிவிடுகிறேன்.

ஆங்... உங்களுக்கு ஒன்றைச் சொல்ல மறந்துவிட்டேன். ஜனவரி 22ஆம் தேதி முற்பகல் 11:51 தொடங்கி 12.33 வரை ஆச்சாரியா கணேஷ்வர் சாஸ்திரி திராவிட்டின் கூற்றுப்படி நான் மேலே குறிப்பிட்ட நேரம் 'அபிஜித் முகூர்த்த'மாகும். இந்த முகூர்த்த நேரத்தில் மகா விஷ்ணு கணக்கற்ற தோஷங்களைத் தமது சுதர்சனச் சக்கரத்தால் அழித்தார். அப்போது சூரியனு டைய சக்தி மிகுந்த உச்சத்தில் இருந்தது. இந்த முகூர்த் தத்தில் தான் நான் பிறந்தேன் என்கிறார்கள். காவிய நாயகன் கூட எழுதுகிறவர்களால் இப்படிப் பிறப்பிக்கப் படுவான் போல் இருக்கிறது.

பிரதமர் மோடி ஜனவரி 22ஆம் தேதி நண்பகல் 12:29:08 - 12:30:32 ஆகிய இடைப்பட்ட இந்த நேரத்தில் - அபிஜித் முகூர்த்தத்தின் கறாரான நேரத்தில் தான் 'பிராண பிரதிஷ்டை' சடங்கைச் செய்தார். 84 விநாடிகளுக்குள் இந்தச் சடங்கு நடத்தப்பட்டுவிட்டதாம். என்னை பாலராமனாக்கினார்கள். உயிரூட்டினார்கள். ஹெலிகாப்டரிலிருந்து கோவிலின் மீது மலராகப் பொழிந்தார்கள்.

ஆனால் என் சிலையை முறைப்படி நீரிலும் தான்யத்திலும் பொன்னாலும் முழுக்காட்டப்படவில்லை. கல்லைச் சிற்பமாக்கி அது தெய்வமாக்கப்படுகிறபோது ஆகம விதிப்படி சடங்குகள் எதுவும் பின்பற்றப்படவில்லை. சங்கராச்சாரியார்கள் எதிர்க்கிறார்கள். அங்கீகரிக்கப்படாத காஞ்சி சங்கராச்சாரியார் மட்டுமே வந்திருந்தார். சாஸ்திரங்கள் கற்ற விற்பன்னர்கள் எதிர்க்கிறார்கள். பிரதமர் மோடியே 'எல்லாமாக' ஆனார். அனைத்தும் தெரிந்த 'பிரகஸ்பதி' ஆகிவிட்டார். அதிகாரம் என்ன செய்யுமோ அதைச் செய்துவிட்டது; அவ்வளவுதான்! இவ்வளவும் இப்போது மோடி எதற்காகச் செய்கிறார்? அவரின் பட்டாபிஷேகத்திற்காக!

சடங்குகள் தொடங்கப்பட்டவுடன் என் கண்கட்டை அவிழ்த்தனர் என்றார்கள். அப்போதும் எனக்கு முழு உணர்வு வந்ததாகத் தெரியவில்லை. கண்களுக்கு பொன்னால் செய்யப்பட்ட உறையில் உள்ள பென்சிலால் மையிட்டு எழுதி என்னை அழகு படுத்தினார்கள். 'அபிஜித் முகூர்த்தம்' முடிகிறபோது கண்ணுக்கு ஒளி கிடைத்தது. இப்போது எனக்கு 'பிரபஞ்ச ஞானம்' கிடைத்து விட்டது; பேசுகிறேன்.

மோடியை அறிந்து கொண்டேன். பிரதானமாய் நின்று சடங்குகளைச் செய்தார். ராவ்ஜி மோகன் பகாவத் மோடிக்கு குருஜி, ராஜகுரு மாதிரி. அவர் சடங்கில் பிரதான பங்கு வகித்ததாகத் தெரியவில்லை. ஆனால் இருந்தார். அவர் இல்லாமல் இருக்க முடியாது. என் கோவில் இருந்த உ.பி. மாநில முதல்வரும் ஆளுநரும் இருந்தனர். புரோகித, சந்நியாசிகளின் சிறுபடை இருந்தது.

மோடி, தாமரையின் இதழ்களை ஒவ்வொன்றாகப் போட்டு எனக்கு அர்ச்சனை செய்துகொண்டு இருந்தார். அவர் கோப்பையைப் போல ஒரு மிகச் சிறிய ஏனத்தை கையில் வைத்துக் கொண்டு அதிலிருந்து இதழ்களை எடுத்து என் மீது போட்டுக் கொண்டு இருந்தார். கடைசியாக அந்த ஏனத்திலிருந்து மொத்த இதழ்களையும் எடுத்துக் கொட்டினார். பின்னர் அவ்விடத்தை விட்டு மெல்ல நகர்ந்தார். சந்நியாசிகளைச் சந்தித்த வண்ணம் வெளி பிரகாரத்திற்கு மெல்ல ஆனால் சற்று கூடுதலான வேகத்தோடு நடக்கத் தொடங்கினார். சந்நியாசி ஒருவர் பிரதமர் மோடிக்கு விரலில் மோதிரம் ஒன்றை அணிவித்தார்.

என் விழாவுக்காக அயோத்தி நகரை 2500 குவிண்டால் மலர்களைக் கொண்டு அழகுபடுத்தினார்கள். 7200 பேர் சிறப்பு அழைப்பாளர்களாக வரவழைக்கப் பட்டார்கள். அதில் 4000 பேர் சந்நியாசிகள், 3200 பேர் முக்கியமான பிரமுகர்கள். அயோத்தி விழாவுக்கு வருவதற்காக 100 தனியார் விமானங்கள் விருந்தினர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன. சரயூ நதிக்கரை 10 இலட்சம் விளக்குகளால் ஒளிர்ந்தன. 50 நாடுகளிலிருந்து 92 வெளிநாட்டுக்காரர்கள் வந்து இருந்தார்கள். நான் பாலராமர்; ஆனால் என் கீர்த்தி மிகப் பெரியது ஆயிற்று.

எனக்கு 14 வித நகைகள் அணிவிக்கப்பட்டு இருக்கின்றன. எனக்காக 18,567 வைரக் கற்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன. அவை சிவப்பும் நீலமுமாய் பட்டை இடப்படாததாய் உள்ளன. பிராண பிரதிஷ்டை ஆன மறுநாளே எனக்குக் குஜராத்காரர்கள் வைரத்தினாலான கீரிடத்தைச் சூட்டினார்கள். வடவேங்கடத்தானுக்கு இணையாக அல்லது அதற்கு மேலும் என்னைக் கொண்டு செல்ல வாய்ப்பு இருக்கிறது.

இவ்வளவு இருந்தும் நான் ஒன்றை உணர்கிறேன். உங்கள் தமிழ்நாட்டு ஆழ்வார்கள் என் மீது இனி எப்படிப் பாசுரம் பாட முடியும்? இந்திய நாட்டின் பெரிய கோவிலாக என் கோவில் இருக்கலாமே தவிர சீறிரங்கம், வைணவத் தலங்களிலேயே 'பெரிய கோவில்' என அழைக்கப்படுவது போல் நான் என்றும் ஆக முடியாது அல்லவா?

ஒரு விஷயத்தை உங்களுக்குக் கவனப்படுத்த விரும்புகின்றேன். என்னைப் 'பிராண பிரதிஷ்டை' செய்ததற்குப் பிறகு பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அதில் 15 முக்கிய அம்சங்கள் இருந்ததாக அறிந்தேன். அதில் என்னைப் பற்றி குறிப்பாக பிரதமர் ஒன்றைச் சொன்னார். 'ராமர் விவாதப் பொருள் அல்ல. அவர் தீர்வு' என்பதே அது. இது எப்படி? இருட்டு அறைக்குள் கருப்புப் பூனையைத் தேடுவது போல் இல்லையா? விவாதம், தீர்வு இதனை யார் முன்நிறுத்தியது? 'இவர்கள்' தானே எல்லா குழப்பத்திற்கும் காரணம்.

என்னை விவாதப் பொருளாக்கிவிட்டு தீர்வுக்கு இப்போது எனக்கு 'பிராண பிரதிஷ்டை' செய்து விட்டார்கள். காவிய நாயகனான என்னைக் கடவுளாக்கி மூவருள் ஒருவனாக உயர்த்தி விட்டார்கள். உங்கள் தமிழ்நாட்டோடு சேர்த்து இந்தியாவெங்கும் பல மொழிகளில் பலவித கோணங்களில் என் கதை எழுதி வைக்கப்பட்டு இருக்கிறது. வால்மீகிதான் இதனைத் தொடங்கினான். இன்று இராமாயணம் பல நாடுகளில் இருக்கின்றன; வெவ்வேறு கதை அம்சங்களோடு! அதாவது 133 இராமாயணங்கள் இருக்கின்றன. இதை ஆய்வாளர் காலஞ்சென்ற ஆங்கிலக் கவிஞர் ஏ.கே.இராமாநுஜன் குறிப்பிட்டிருக்கிறார். பல இராமாயணங்கள் இருப்பதைப் பற்றி பவுலா ரிச்மான் சொல்லி இருக்கிறார்.



**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க எழுத்தாளர்

காவியக் கர்த்தாக்கள் என்னைப் பிறக்க வைத்துவிட்டார்கள். நான் ஒரு கதாபாத்திரம். கடவுளாக்கப்பட்டேன். எந்த ஒரு நாட்டை விடவும் உங்கள் தமிழ்நாட்டில் என்னையும் என் காப்பியத்தையும் கடுமையாக விமர்சனம் செய்து இருக்கிறீர்கள். அதில் உங்கள் பக்கமுள்ள நியாயங்களை எடுத்து வைத்தீர்கள். நான் அதனை ரசித்தேன். அப்படி ஒரு விவாதம் தமிழ்நாட்டில் நடந்தது. அதையெல்லாம் ஆவணமாக்கி நீங்கள் இன்றும் வைத்து இருக்கிறீர்கள்.

புத்தர் பிறந்து மறைந்தபின் அசோகர் காலத்திற்குப் பிறகு புனையப்பட்டது என் கதையான இராமாயணம். புஷ்யமித்ர சுங்கன் என்கிற மன்னனே இராமாயணம் உருவானதற்குக் காரணம். அதற்கு முன்பு 'நான்' இல்லையே. இன்று என் நிலை உலகளாவியது ஆகிவிட்டது. எந்த அளவுக்கு உலக அறிமுகம் எனக்கு இருக்கிறதோ, அந்த அளவுக்குக் குழப்பமும் என் கதையில் பேசப்படுகிறது. அதுதான் என் கதைக்கு இருக்கிற சிறப்பு.

என் கதை புனையப்பட்டதே எதற்குத் தெரிமா? முதலில் வர்ணசிரமத்தைக் காக்கும் பரப்புரைக்காக! இரண்டாவதாக அதோடு அரசியல் அதிகாரம் இணைந்தால் அதற்கு அரசுப் பாதுகாப்பும் வர்ணாசிரம சநாதன தர்மக் கோட்பாடும் பலப்படும். மூன்றாவதாக இந்தியாவின் பூர்வ குடிகளான திராவிடர்களோடு கலந்து - போராடி ஒழிப்பதற்காக! இது சிந்துவெளி நாகரிகக் காலத்திலிருந்து இன்று வரை நடந்து வருகிறது. அதன் மிச்ச சொச்சம்தான் உங்கள் தமிழ்நாட்டில் தொடருகிறது.

உங்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ? - ஒரு கட்டத்தில் ஆரியர்களோடு கலப்பு திராவிடர்களுக்கு தவிர்க்க முடியாதது ஆயிற்று. அதனை வைத்துக் கொண்டு தனித்தன்மையைக் காட்டி வந்த திராவிடர்களிடம் சில 'அறிஞர்' பெருமக்கள் "ஆரியமாவது - திராவிடமாவது" என்று பேசி வந்தனர். ஆனால் உறுதி மிக்கவர்கள் வேறுபட்டே தெரிந்தனர். இதுவும் தமிழ்நாட்டில் தொடருகிறது.

என்னைப் பற்றிய கதையில் திராவிடர்களை ஆரியர் வென்றடக்கியதை குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதனை இந்தியவியல் ஆய்வாளரான கிறிஸ்டியன் லேசன் முதன் முதலில் வெளிப்படுத்தினார். இந்த ஆய்வின் வெளிப்பாடு திராவிட அரசியலில் வலுமிக்கத் தாக்கத்தை ஏற்படுத்தியதை இந்த நேரத்தில் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். இப்படி எவ்வளவோ செய்திகளை என்னால் சொல்ல முடியும்.

கொஞ்சம் இருங்கள். 'ஆகிரி' இராகத்தில் சோக இசை எங்கேயோ இசைக்கப்படுகிறது. அதோடு ஒரு உருது கவிதையின் சொற்கள் என் காதுகளில் இப்படி வந்து விழுந்து கொண்டு இருக்கின்றன.

இன்று நாம் பேசாதிருந்தால்
சாவை இங்கே சந்திப்போம்;
ஒவ்வொரு வீடும் தீக்கிரையாகும்;
வாழ்விடம் எல்லாம் எரியக் காண்போம்;
அமைதியின் பின்னே அமுங்கிப் போன
மரண ஓலமே மிஞ்சும்; மீளும்!
கேட்க இங்கே யாருமே இல்லையே!
ஒருவர் இல்லையே; ஒருவர் கூட!

இப்போது சோக இசையும் கவிதையும் எனக்குக் கேட்வில்லை. இந்தக் கவிதையின் பொருள் என்ன? யார் எழுதியது? அதில் மானுடத்தின் ஈனக்குரல் தானே ஒலிக்கிறது? இப்போது ஏன் அந்தக் கவிதை என் காதுகளில் விழ வேண்டும்?

என் பிரபஞ்ச ஞானம் சுழலுகின்றது. அந்த உருதுக் கவிதைகளை எழுதியவர் சஹீர் லுதியான் வீ என்று தெரிந்து கொண்டேன். 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் தேதி பாபர் மசூதி இடிக்கப்பட்டது. கரசேவகர்கள் இடித்தார்களாம். இங்கே இராணுவம் வைத்து இருக்கிற ஒன்றிய அரசு, போலீஸ் வைத்து இருக்கிற உ.பி. மாநில அரசு ஆக இரண்டு அரசுகளும் பாபர் மசூதி இடிப்பவர்களை வேடிக்கை பார்த்தது. எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒரு மதச் சின்னம் வெறுப்பின் காரணமாக இடிக்கப்படுகிறது. வெறுப்படைந்த கூட்டம் கொக்கரிக்கிறது.

அரசுகள் மௌனமாகிவிட்டன. உங்கள் தமிழ்நாட்டின் தாயுமானவர் சொன்னது போல கடவுள் 'பேசாத பெரிய மோனம்'. அது இந்த சம்பவத்திற்கும் பேசாமல் இருந்துவிட்டது. உண்மையில் நான் காவிய நாயகன் மட்டுமே, என்னால் என்ன செய்ய முடியும்? இப்போது நான் பேசுகிறேன் என்றால், 140 கோடி மக்களின் சார்பாக பிரதமர் மோடி என்னை 'பிராண பிரதிஷ்டை' செய்து இருக்கிறார். அவரே அதைக் கூறி இருக்கிறார். அதில் எல்லா மதத்தினரும் அடக்கம் அல்லவா? ஆகவே 'அவர்களுக்காக'ப் பேசுகிறேன்.

'வந்தார்கள்..... வென்றார்கள்!' சுமார் 500 ஆண்டுகள் 'வந்தவர்கள்' ஆண்டார்கள். அவர்களின் மத வழிபாட்டுகளுக்குரிய மசூதிகளைக் கட்டிக் கொண்டார்கள். அவ்வாறு பாபரின் படைத் தளபதி மிர் பாகியால் அயோத்தியில் ஒரு மசூதியைக் கட்டினான். அப்போது அங்கே கோயில் எதுவும் இல்லை. அந்தக் கட்டடத்தைத் தான் 1992 டிசம்பர் 6இல் இடித்தார்கள். அதனால்தான் அந்தக் கவிதையின் குரல் இதைக் கேட்பதற்கு ஜனநாயக யுகத்தில் ஒருவர் கூட இல்லையா என்று கேட்கிறது. எதனால் பாபர் மசூதியை இடித்தார்கள்?

பாபர் மசூதி கட்டப்பட்ட இடத்தில் எனக்குக் கோவில் இருந்ததாகவும் அதனை இடித்துவிட்டுதான் 'அவர்கள்' பாபர் மசூதியைக் கட்டினார்கள். அந்தக் கோயில் இருந்த இடத்தில்தான் நான் பிறந்ததாகவும் சொன்னார்கள். ஒரு காவிய நாயகனான நான் எப்படிப் பிறந்திருக்க முடியும்?

பாபர் மசூதி இடிபடாமல் இருந்த போதே மசூதிக்கு முன்பாக ஒரு விதானம் கட்டுவதற்கு பைசாபாத் கோர்ட்டில் மகந்த் ரகுபீர் தாஸ் 1885இல் மனு போட்டார். அது நிராகரிக் கப்பட்டுவிட்டது. பால ராமர் கோயில் எழுப்புவதற்கு இப்படியொரு முயற்சியை 'இவர்கள்' தொடங்கினார்கள்.

**எனக்கு பாபர் மசூதி இருந்த இடத்தில் கோவில் எதுவும் இருக்கவில்லை. அப்படி இருந்தால் அவை ஏதாவது ஒன்றில் சான்றாகப் பதிவாகி இருக்கும். அக்பர் காலத்தில் எழுதப்பட்ட துளசி தாசரின் எழுத்துகளில் கூட ஒரு கோயில் இருந்தது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. பாபர் ஆட்சியைக் கடுமையாக விமர்சித்தவரும் சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தவருமான குரு நானக் 1539 வரை உயிர் வாழ்ந்துள்ளார். அவரும் கோயிலை இடித்துவிட்டு மசூதி கட்டப்பட்டதாகக் கூறவில்லை. 'அவர்கள்' இருந்ததாகச் சொல்லும் கோயிலுக்கு வரலாற்றில் எந்த ஆதாரமும் இல்லை, இது முழுமையாக இட்டுக் கட்டப்பட்டதாகும்.**

**ஆர்.எஸ்.சர்மா, எம்.அதார் அலி, டி.என்.ஷா, சூரஜ் பன் ஆகிய வரலாற்று ஆசிரியர்களைக் கொண்டு பாபர் மசூதி இருந்த இடத்தில் எனக்கு கோயில் இருந்ததா என ஆராயுமாறு ஒரு குழுவினை அமைத்தார்கள். கோயில் இருந்ததற்கான முறைப்படியான ஆதாரம் எதுவும் இல்லை என்று அவர்கள் உறுதிபடக் கூறினார்கள். 'வரலாற்று ஆசிரியர்கள் நாட்டுக்குச் சமர்ப்பிக்கும் அறிக்கை' என்ற பெயரில் 1991 -இல் வெளியிட பெற்றது. இந்த அறிக்கைக்கு மாறுபட்ட அறிக்கையை 'அவர்கள்' வெளியிடத் தவறவில்லை. எனவே 12 ஆம் நூற்றாண்டிலோ அதற்கு முன்போ ஒரு கோயிலை இஸ்லாமியர்கள் இடித்தார்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.**

காவிய நாயகனான என்னை 'தசாவதாரம்' ஆக்கிவிட்டார்கள். அதற்கான புராணங்களை உருவாக்கி வைத்து இருக்கிறார்கள். இப்போது பால ராமனாக்கி 'பிராண பிரதிஷ்டை' செய்து இருக்கிறார்கள். என்னைச் சுற்றியுள்ள 'பிரபையில்' புத்தர் உட்பட 10 அவதாரங்களைச் செதுக்கி இருக்கிறார்கள். என்னை வணங்குவதற்கு 108 திவ்ய தேசங்கள் வேறு இருக்கின்றன -என் புகழ்பாட உங்கள் நாட்டுப் பாசுரங்கள் வேறு இருக்கின்றன. இப்படி இருக்கும்போது பாலராமரான எனக்கு ஏன் கோவிலை உருவாக்கி நாடு முழுவதும் ஆர்ப்பாட்டத்தை 'அவர்கள்' செய்கிறார்கள்? அரசியல்தான்!

பாபர் மசூதி வரலாற்றுச் சின்னமாகி விட்டது. அதைத் தாக்கித் தகர்த்து தரைமட்டம் ஆக்குவதற்கு யாருக்கும் உரிமை இல்லை, 'இவர்களைப்' போல்தான் ஆப்கானின் பாமினியிலுள்ள புகழ்பெற்ற பிரமாண்டமான 180 அடி கொண்ட புத்தரின் சிற்பம் தாலிபான்களால் அழிக்கப்பட்டது எப்படிச் சரியில்லையோ, அப்படித்தான் பாபர் மசூதி தகர்க்கப்பட்டதும் ஆகும்.

இப்போது வட மதுரா, காசி ஆகிய இடங்களில் உள்ள மசூதிகளின் அருகே கோயில் எழக்கூடும். அதற்கான 'முஸ்தீபு' செய்திகள் வேறு வந்துகொண்டே இருக்கின்றன. நமது மதச்சார்பின்மையும் சகிப்புத் தன்மையும் பன்மைத்தத்துவமும் 'இவர்கள்' ஆட்சியில் மேலும் உறங்கத் தொடங்கிவிடும். அங்கேயும் கோயில் எழும். இதனால் நாட்டில் என்ன விளைவு ஏற்படுமோ என்கிற அச்சம் எனக்கு இருக்கிறது. இதற்காகவே 'இவர்கள்' எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடிக்கப் பட வேண்டும் என்று விரும்புகிறேன்.

இந்த இரண்டு இடங்களின் நிலை 1947க்கு முன் எப்படி இருந்ததோ அப்படியே தொடரலாம். புதிய சிக்கலும் பிரச்சினைகளும் தோன்றாது என்பது என் கருத்து.

எப்படியோ பாபர் மசூதி இடிப்புக்குப் பிறகு அரசும் நீதித்துறையும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டன. நான் பிறந்ததாகக் கூறப்படும் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தின் உரிமை தொடர்பாக 2002 ஏப்ரலில் அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் விசாரணையைத் தொடங்கியது.

உயர்நீதிமன்றம் 2010 செப்.30இல் உரிமையை 3 பகுதியாகப் பிரித்துத் தீர்ப்பளித்தது. சன்னி வஃக்பு வாரியம், நிர்மோகி அகாரா, எனக்கு என மூவருக்கும் உரிமை எனத் தீர்ப்பளித்தது. இதற்கு உச்சநீதி மன்றம் தடை விதித்தது. இந்த வழக்கை 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் அமர்வு விசாரித்து தீர்ப்பு வழங்கியது.

2019 ஆம் ஆண்டு ஆகஸ்டு 6 ஆம் தேதி தொடங்கி நாள் தோறும் விசாரணை நடந்தது. அக்டோபர் 16 இல் விசாரணை நிறைவு பெற்றது. தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. நவம்பர் 9 ஆம் தேதி உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கியது. அயோத்தியில் சர்ச்சைக்குரிய 2-77 ஏக்கர் நிலத்தை எனக்கு - பால ராமருக்கு வழங்கியது. நிலத்தின் உரிமை ஒன்றிய அரசிடம் இருக்கும் எனத் தீர்ப்பளித்தது. மேலும் மசூதி கட்டுவதற்கு அயோத்தியின் முக்கியமான இடத்தில் 5 ஏக்கர் நிலத்தை இஸ்லாமியர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் ஒன்றிய, மாநில அரசுகளுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இப்படி ஒரு தீர்ப்பு வந்தபோது எனக்கு ஒன்றும் புரியவில்லை. எனக்கு ஓர் இடம் கிடைத்துவிட்டதே என்கிற மகிழ்ச்சிகூட எனக்கு இல்லை. ஆனால் அதிர்ச்சியாக இருந்தது. நாட்டில் அதற்கு வரவேற்பைவிட 'மௌனம் அதிகமாகத் தெரிந்தது. இதன் பொருள் என்ன? உங்களின் பார்வைக்கே விட்டுவிடுகிறேன். நான் அதனை விளக்க விரும்பவில்லை.

'அவர்கள்' அடுத்த கட்டத்திற்குத் தயாரானார்கள். 2020 - பிப்ரவரி 5 ஆம் நாள் எனக்குக் கோவில் கட்டுவதற்காக ஒரு அறக்கட்டளையை ஏற்படுத்தினார்கள். நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி இதற்குரிய அறிவிப்பை வெளியிட்டார். ஆகஸ்டு 5 இல் அடிக்கல் நாட்டப்பட்டது. பிறகு 2022 - ஜனவரி 22 இல் 'பிராண பிரதிஷ்டை' நடைபெற்றது. என்னைக் கொண்டு வந்து நிலை நாட்டிவிட்டார்கள்! உயிரூட்டிவிட்டார்கள். மக்களை வரச் செய்துவிட்டார்கள். இப்போது நான் பாசுரம் பாடப்படாத வைணவக் கோவிலின் மூலவராகி விட்டேன்; ஏன்?

என்னை வைத்து இவ்வளவு பெரிய ஏற்பாடு ஏன்? என் கோவில் 'பிரதிஷ்டை' பணி நிறைவடைந்தவுடன் அவர் நாடாளுமன்றத் தேர்தல் பணியைத் தொடங்கி விட்டாரே, பார்த்தீர்களா? அவர் 'பட்டாபிஷேகத்திற்கு' தயாராகிறார், அதோடு முடியவில்லை, அடுத்த கட்டப் பணி இறுதிப் பணி ஒன்று இருக்கிறது. அது என்ன?

என் பெயரால் இந்தியாவில் ராமராஜ்யம் அமைப்பது! இதுதான் அடுத்த திட்டம், பிரதிஷ்டை' முடிந்தவுடன் அயோத்தியில் நடந்த பொதுக்கூட்டத்தில் ராவ்ஜி மோகன் பகாவத் ஆர்.எஸ்.எஸ். தலைவர், 'ராமராஜ்யம் நெருங்கிவிட்டது; பூசலைத் தவிர்த்துவிட்டு ஒன்றிணையுங்கள்' என்கிறார். அதே பொதுக் கூட்டத்தில் பேசிய உ.பி. முதல்வர் யோகி ஆதித்திய நாத் 'ராமர் கோவில் 'பிரதிஷ்டை' முடிந்து விட்டது. அது ராமராஜ்யத்தின் பிரகடனம்' என்கிறார்.

இந்தியா என் பெயரால் 'ராமராஜ்யம்' ஆகப்போகிறதா? அது கூடாது; கூடாது. அப்படி என்றால் இந்தியாவின் மதச் சார்பற்ற ஜனநாயகக் குடியாட்சியைத் தகர்த்து அந்த இடத்தில் 'இந்து ராஜ்யத்தை' உருவாக்கப் போகிறார்கள். அதற்குத் திட்டமிடுகிறார்கள் என்று தானே அர்த்தம்.

காந்தியைவிட என்மேல் அன்பு கொண்டவர்களைப் பார்க்க முடியாது. அவரே மதச் சார்பற்ற கொள்கையைத்தான் வலியுறுத்தினார். நான் நீண்ட நேரம் மிகச் சொற்பமான - குறைந்த அளவு விஷயங்களையே உங்களோடு பகிர்ந்து கொண்டேன்.

**நான் இரண்டே செய்திகளை உங்கள் முன் வைக்கிறேன்.**

**(1) பாகிஸ்தான் அல்லது தேசப் பிரிவினை எனும் நூலில் அம்பேத்கர், " இந்து ராஜ்யம் என்பது உண்மையாக அமைந்தால், அது இந்த நாட்டின் பேரழிவில் முடியும் என்பதில் சந்தேகமில்லை. எந்த விலை கொடுத்தாயினும் இந்து ராஜ்யத்தைத் தடுத்தாக வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.**

**(2) அவர் கூறியதைத் தடுத்தாக வேண்டும் என்றால் விடுதலைப் போராட்டக்கால உணர்வோடு 'இந்திய மக்களே ஒன்று படுங்கள்; வேற்றுமையில் ஒற்றுமையை நிலைநாட்ட இப்போது முதலே சற்று வேகமாகச் செயல்படத் தொடங்குங்கள்' என்ற வேண்டுகோளை உங்கள் முன் வைத்து விடை பெறுகிறேன்.**

**அதோடு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்து ராஜ்ஜியம்' என்று குரல் கொடுப்போருக்கு ஒன்றிய அரசைக் கைப்பற்றுவதன் மூலம் அதிர்ச்சியை முதலில் கொடுங்கள். அதன் பிறகு தொலை நோக்கையும் சிந்தியுங்கள். 'மக்கள் குரலே மகேசன் குரல்' என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**



மதுரை அழகர் கோயில் சாலையில் உள்ள தனியார் ஹோட்டல் கூட்டரங்கில் நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி நிகழ்ச்சியில் அரசு பள்ளிக் கூடுதல் கட்டிடம் கட்ட தனது நிலத்தை பள்ளிக்கு தானமளித்த திருமதி.ஆயி என்ற பூரணம் அம்மாள் அவர்களுக்கு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பொன்னாடை போர்த்தி நினைவு பரிசு வழங்கி கௌரவித்தார். உடன் பள்ளிக் கல்வித்துறை செயலாளர் குமரகுருபரன், மாவட்ட ஆட்சியர் சங்கீதா, சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், மு.பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.



வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சைதை கிழக்குப் பகுதி துணைச் செயலாளர் ஆர்.ராஜ்குமார் – ஆர்.காஞ்சனா ஆகியோரது மகள் ஆர்.ரம்யா, ஆவடி ரவிச்சந்திரன் – உமாதேவி ஆகியோரது புதல்வர் ஆர்.மணிஷ்குமார் ஆகியோரது திருமணம் – வரவேற்பு நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றதையொட்டி, அன்னாரது இல்லம் சென்று மணமக்களை வாழ்த்தினார்.

### அமைச்சர் ஐ.பெரியசாமி தலைமை! ப.வேலுச்சாமி எம்.பி. - எஸ்.காந்திராஜன் எம்.எல்.ஏ. முன்னிலை!

# திண்டுக்கல்லில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

### மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. அறிக்கை!





திண்டுக்கல், ஜன. 30 - திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர்அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

காஞ்சி தந்த காவியத் தலைவர் தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும், வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர், தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர், பேரறிஞர்அண்ணாஅவர்களின் 55வது நினைவு நாளான 3.2.2024, சனிக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் கழக துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான இ.பெரியசாமி தலைமையிலும் எங்களது (திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும் உணவுத் துறை அமைச்சருமான அர.சக்கரபாணி, திண்டுக்கல் கிழக்கு மாவட்டகழகச் செயலாளரும், பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார்) மற்றும் ப.வேலுச்சாமி எம்.பி., எஸ்.காந்திராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில்; பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்குமாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட வுள்ளது.

அதுசமயம் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு மற்றும் கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாநகர மேயர், துணை மேயர், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர், பேரூராட்சிமன்றத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், பேரூராட்சிமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கழக முன்னாள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் திரளாக கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

### கழக இளைஞரணி 2வது மாநில மாநாட்டின் தீர்மானங்களை விளக்கி

# நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம்!

### சு.சுப்பிரமணியன் - நெல்லை முத்தையா சிறப்புரை! அப்துல் கையூம் தலைமை!

நெல்லை, ஜன. 30 - நெல்லை மாநகர தி.மு.க சார்பில் கழக இளைஞர் அணி சார்பில் சேலத்தில் நடைபெற்ற 2வது மாநில உரிமை மீட்பு மாநாட்டின் தீர்மா னத்தினை மக்களுக்கு கொண்டு சென்று விளக்கும் வகையில் தெருமுனைப் பிரச்சாரப் பொதுக்கூட்டம் 26.01. 2024, 27.01.2024 ஆகிய 2 நாட்கள் நடைபெற்றது.

இதில் 26 ம் தேதி மேலப்பாளையம் சந்தை முக்கு நேசம் டீக்கடை அருகில் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம் தலைமையில் நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியை மாநகர தொண்டரணி அமைப்பாளர் சித்திக் தொகுத்து வழங்கினார்.

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி

நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவுறுத்தலின்படி சேலத்தில் நடைபெற்ற இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினை பொது மக்களுக்கு விளக்கும் வகையில் நெல்லை மேலப்பாளையம் சந்தை முக்கு நேசம் டீக்கடை அருகில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று தீர்மானங்களை விளக்கி உரையாற்றினார்.

நிகழ்வில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் நெல்லை முத்தையா, மைக் மணி, வட்டச் செயலாளர்கள் காஜாமைதீன், ஜான் கென்னடி, அந்தோணி, கிங்பாலா, சுப்ரித் சுப்பிரமணியன், மில்.ஜே.குமார், மார்க்கெட் நயினார், ஜாகிர் உசேன் பத்மா, மேரி உலகராஜ், பிந்து செய்யது, வனிதா, மாருதி கண்ணன், சித்ரா, ஷெட்டி ஸ்டார் முருகன், பீர் மஸ்தான், அல்பி நிஜாம், சேக்மைதீன், சாகுல் ஹமீது, நேசம் வாகித், ரகுமான்ஷா, சார்லஸ், முத்து கணேசன், பெருமாள், ராமச்சந்திரன், துபாய் கமல், ஆறுமுகம், விஸ்வநாதன், ஹமீம் முஸ்தபா, அலி பக்ருதீன்,அருள் ராஜ், சங்கர், சிக்கந்தர், யாசின், சண்முகராஜா முகமது அலி,ஆட்டோ சுல்தான், மீன்கனி, காசி லெப்பை, அலாவுதீன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் 27.01.2024 இரவு 7 மணி அளவில் நெல்லை பேட்டை பகுதி சந்தி பிள்ளையார் முக்கு பேருந்து நிறுத்தம் அருகில் பகுதி செயலாளர் நமச்சிவாயம் தலைமையில் தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன்,அவை தலைவர் சுப்பையா,நாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன்,தலைமைக் கழக பேச்சாளர்கள் தூத்துக்குடி சரத் பாலா, நெல்லை முத்தையா ஆகியோர் தீர்மானங்களை விளக்கி உரையாற்றினர்.

கழக நிர்வாகிகள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட வர்த்தக அணி தலைவர் அவதார் ஷாஜகான் நன்றி உரையாற்றினார்.



சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் இரண்டு நாட்கள் (26.1.2024 மற்றும் 27.1.2024) நடைபெற்ற தொழில் முனைவோருக்கான கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நிறைவு விழாவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் நினைவு பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத் தலைவர் உ.மதிவாணன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசுச் செயலாளர் க.லட்சுமி பிரியா, தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் த.ஆனந்த் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கடலூர் மேற்கு மாவட்டம் – திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி

# மங்களூரில் ஆரம்ப சுகாதார நிலையம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்! அமைச்சர் சி.வி.கணேசன் அறிக்கை!

கடலூர், ஜன. 30 - கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மங்களூரில் ஆரம்பம் சுகாதார நிலையத்தை இன்று (30.01.2024) மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார் என அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூரில் ஆரம்ப சுகாதார நிலையத்தையும் மற்றும் திட்டக்குடி தொகுதியில் 17 துணை சுகாதார நிலையங்களையும் எனது (சி.வி.கணேசன்) தலைமையில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்.

அதனை ஒட்டி இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகரக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள்,

தலைமை கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் ஒன்றியக் குழு பெருந்தலைவர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதி நிதிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் என்று அமைச்சர் சி.வி. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### பெரம்பூர் தொகுதியில்

# மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி!

### பகுதிச் செயலாளர்கள் அ.முருகன் - க.ஜெயராமன் வேண்டுகோள்!

சென்னை, ஜன. 30 - பெரம்பூர் தொகுதி தி.மு.க. மாநில நிர்வாகிகள் பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆகியோருக்கு பகுதிச் செயலாளர்கள் அ.முருகன், க.ஜெயராமன் ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :-

கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க மாவட்டச் செயலாளர் மற்றும் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி இன்று (30-01-2024 செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி அளவில் மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்ப நிகழ்ச்சி பெரம்பூர் வடக்கு, தெற்கு பகுதிக் கழகம் சார்பில் கீழ்க்கண்ட விவரங்களின்படி நடைபெற உள்ளது.

இடம்: பெரம்பூர் வடக்கு பகுதி 37 வது வட்டம் எம். கே. பி. நகர் பஸ் நிலையம் அருகில். நேரம்: காலை 10 மணி.

இதில் அனைத்து மதங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் மற்றும் தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்க உள்ளனர். பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகி கள், பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் தோழமைக் கட்சிகளான காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள், மனித நேய மக்கள் கட்சி, இந்திய தேசிய முஸ்லிம் லீக், மதிமுக,ஆகிய கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகளும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு பகுதிச் செயலாளர்கள் அ.முருகன், க. ஜெயராமன் ஆகியோர் வேண்டுகோள் விடுத்து ள்ளனர்.

### புதுக்கோட்டை மாவட்ட

# தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கக் கூட்டம்!

### மாவட்டத் தலைவர் ராஜாங்கம் தலைமையில் நடைபெற்றது!

புதுக்கோட்டை, ஜன. 30- புதுக்கோட்டை மாவட்டம் சந்தைப்பேட்டை நகராட்சி நடுநிலைப்பள்ளியில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் சென்னையில் நடைபெறக்கூடிய நன்றி அறிவிப்பு மாநாட்டிற்கு ஆயத்தப்படுத்தும் விதமாக அவசர ஆயத்த கூட்டம் மாவட்டத் தலைவர் ராஜாங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில தலைவர் கு. தியாகராஜன் தொடக்க கல்வித்துறையில் மாநில அளவிலான மூதுரிமை கடைப்பிடிக்கப்படும் என அறிவித்துள்ள தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், பள்ளிக்கல்வித் துறை அமைச்சருக்கும் நன்றி தெரிவிக்கும் மாநாடு சென்னை ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் பிப்ரவரி 04 அன்று நடைபெறுகிறது

நன்றி அறிவிப்பு மாநாட்டில் முதல் நிகழ்வாக கல்வியில் கலைஞர் என்ற தலைப்பில் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவும், கவிதை நூல் வெளியீட்டு பரிசு அளிப்பு நிகழ்வும் நடைபெறுகிறது என்று தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் இயக்கப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மாநாட்டில் புதுக்கோட்டை மாவட்டத்தின் சார்பில் 5000 பேர் கலந்து கொள்வது என முடிவு செய்யப்பட்டது.

மாநாட்டில் முன்வைக்கப்பட உள்ள கோரிக்கைகளான புதிய ஓய்வூதிய திட்டத்தை கைவிட்டு பழைய ஓய்வு திட்டத்தை அமல்படுத்த வேண்டும் எனவும், 2004 முதல் 2006 தொகுப்பு ஊதிய காலத்தை பணிக்காலமாக மாற்றுதல்,

பழைய முறைப்படி ஊக்க ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என கோருதல், பள்ளிக் கல்வித் துறையில் உள்ளது போல தொடக்கக் கல்வித் துறையில் பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடம் உருவாக்குதல், ஈட்டிய விடுப்பு பணம் ஒப்படைப்பை மீண்டும் வழங்குதல், தொடக்க மற்றும் பள்ளிக்கல்வித் துறையில் பதவி உயர்வுக்கு தகுதி தேர்வு தேவை இல்லை என அரசின் கொள்கை முடிவை எடுத்துக் கோருதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட உள்ளன.

முன்னதாக மாவட்ட செயலாளர் நாயகம் வரவேற்றார்.

இந்நிகழக மாவட்ட செய்தியாளர் ரகமதுல்லா, மாவட்ட நிர்வாகிகள் பாபு சிவராம், பால்ராஜ், தனபால், கோவிந்தராஜன், வெள்ளைசாமி, தயாளன், செல்லக்கண்ணு, வீரமணி கலையரசன், பிரவீன், சுப்பிரமணி, தவமணி ஜோதி பாசு, கணேசன், சசிகுமார், மாணிக்கம் சரவண பெருமாள், முருகன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிறைவாக பொருளாளர் செந்தில்குமார் நன்றி கூறினார்.




நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் மேலப்பாளையம் பகுதி கழக நிர்வாகிகள் ஏற்பாட்டில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணி 2வது மாநில உரிமை மீட்பு மாநாட்டின் தீர்மான விளக்க தெருமுனை பொதுக்கூட்டம் மேலப்பாளையம் பகுதி சந்தை முக்கு நேசம் டீக்கடை அருகில் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம் தலைமையில் நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் முன்னிலையில் நடைபெற்றது. மாநகர தொண்டரணி அமைப்பாளர் சித்திக் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று தீர்மானத்தை விளக்கி உரையாற்றினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர்கள் முத்தையா,மைக் மணி,கழக பேச்சாளர்கள் மில் ஜே.குமார், மார்க்கெட் நயினார் உள்பட பலர் பங்கேற்றனர்.

## மதவழி தேசியம் - ஆரிய மாடல்! மொழிவாரி தேசியம் - திராவிட மாடல்!

# தேசிய இனங்களின் அரசை ஒன்றியத்தில் அமைப்போம்!

### சேலம் இளைஞர் அணி மாநில மாநாட்டில் - கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. முழக்கம்!

**சேலம், ஜன. 30 -**

**சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டில், "திராவிட மாடல் - எல்லோருக்கும் எல்லாம்" எனும் தலைப்பில் சிறப்புரையாற்றிய கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., "மதவழி தேசியம் - ஆரிய மாடல்! மொழிவாரி தேசியம் - திராவிட மாடல்" என்றும், "தேசிய இனங்களின் அரசை ஒன்றியத்தில் அமைப்போம்!" என்றும் குறிப்பிட்டார்.**

இம்மாநாட்டில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. ஆற்றிய உரை வருமாறு :-

இந்த மாநாட்டின் மேடையில் நின்று நான் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கிறேன். தலைவர் இங்கே அமர்ந்திருக்கிறார். இளைஞர் அணியின் முதல் மாநில மாநாட்டில் அணிவகுப்பை தொடங்கி வைக்கின்ற வாய்ப்பினை எனக்கு வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர். அந்த ஈர உணர்வோடு உங்கள் முன்னால் இந்த இரண்டாவது மாநாட்டில் பத்து நிமிடம் நிற்க அனுமதி கேட்கிறேன்.

இந்த இயக்கத்தைத் தோற்றுவித்த பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி தலைவர் கலைஞர் அவர்கள் என்ன சொன்னார் என்பதை இங்கே வீடியோவாக போட்டுக் காட்டினார்கள். "தலைவர் என்பார்; தத்துவ மேதை என்பார்; சொல்லாற்றல் சுவைமிக்க எழுத்தாற்றல் பெற்றார் என்பார்; மனிதர் என்பார்; மாநிலத்து அமைச்சர் என்பார்; நடிகர் என்பார்; நாடக வேந்தர் என்பார்; அத்தனையும் தனித்தனியே சொல்வதற்கு நேரம் அற்றோர் நெஞ்சத்து அன்பாலே 'அண்ணா' என்ற ஒரு சொல்லால் அழைத்திடவே அவர் அன்னை பெயரும் தந்தார்" என்று கலைஞர் சொல்வார்.

அந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் தோற்றுவித்த இந்த இயக்கத்தில் அவர் இரண்டு ஆண்டுகள் மட்டும்தான் முதலமைச்சராக இருக்க இயற்கை அனுமதி தந்தது. அதற்குப் பிறகு மூதறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டு தி.மு.க.வின் மாநாட்டில் உரையாற்றினார். "அண்ணா இருந்த இடத்தில் நான் இருக்கிறேன். யார் அண்ணா?

**நரியும் பரியாய்ப் போன கதை;**
**நாரதர் பெண்ணாய் ஆன கதை;**
**உரியை கண்ணன் உடைத்த கதை;**
**ஊரார் போற்றிய பழைய கதை;**
**எரியில் துரும்பாய் ஆக்கியவர்**
**பெரியார் தந்த பேரறிஞர்"** - என்று அண்ணாவை போற்றிவிட்டு அந்த இடத்தில் - அவர் உட்கார்ந்த முதல்வர் நாற்காலியில் நான் உட்கார்ந்து இருக்கிறேன் என்று குறிப்பிட்டுவிட்டு, அவர் தன்னை தாழ்த்திக் கொண்டு ஆற்றிய உரையில்,

"அண்ணா வெண்ணெய்; நான் சுண்ணாம்பு; என் பக்கத்தில் இருக்கும் நாவலர் வெற்றிலையானால், என் அருகில் இருக்கும் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பாக்கானால், இந்த தமிழ்நாடு சிவப்பதற்கு நான் நல்ல சுண்ணாம்பாக இருப்பேன். நான் வெண்ணெய் அல்ல" என்று கலைஞர் தன்னடக்கத்தோடு குறிப்பிட்டார்.

அவருக்குப் பின்னால் இந்த இயக்கத்தைத் தலைமை தாங்குகிற நம்முடைய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்கின்ற இந்த மகத்தான உலகத் தமிழர்களின் தலைவர் சொன்னார், "எனக்கு கலைஞரைப் போல் எழுதத் தெரியாது; எனக்கு கலைஞரைப் போல் பேசத் தெரியாது; ஆனால் கலைஞர் போல் உழைக்கத் தெரியும்" என்று சொன்னார். அதையே கலைஞர் முன்மொழிந்தார். "உங்களிடத்தில் ஸ்டாலினிடத்தில் பிடித்தது எது?" என்று கேட்டபோது, "உழைப்பு... உழைப்பு... உழைப்பு..." என்று சொன்னார்.

#### அண்ணாவின் அடையாளம்!

எனவே, அண்ணாவிற்கு அடையாளத்தை கலைஞர் சொன்னார். கலைஞர் அவருடைய பிள்ளைக்கு தகுதியை சொன்னார். இன்றைக்கு இந்த இளைஞரணி மாநாட்டை தம்பி ஆருயிர் இளவல் நம்முடைய உதயநிதி ஸ்டாலின் இங்கு நடத்திக் கொண்டிருக்கிறார். அவருக்கு என்ன தகுதி! அண்ணா நிறுவினார். கலைஞர் சுண்ணாம்பு என்று சொல்லி ஒரு மிகப்பெரிய சரித்திரத்தை படைத்தார். எனக்கு கலைஞரைப் போல் எழுதத் தெரியாது பேசத் தெரியாது என்று சொல்லி திராவிட மாடல் ஆட்சியை இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறார் நம்முடைய முதல்வர். நான் அதற்கு வழித்தோன்றலாக இருக்கிற ஆருயிர் இளவல் உதயநிதியை இந்த மேடையில் பார்க்கிறேன்.

அண்ணாவிற்கு பல தகுதிகள். கலைஞர் தன்னடக்கத்தோடு ஏற்றுக் கொண்ட ஒரு தகுதி. இன்னும் தன்னைத் தாழ்த்திக் கொண்டு ஒரு மிகப்பெரிய தகுதியை நம்முடைய கழகத் தலைவர் முதலமைச்சர் பெற்றிருக்கிறார். அதற்குப் பிறகு, இந்த இளைஞரணி மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கும் இளவல் உதயநிதியை நான் பார்க்கிறேன், நான் அண்ணா அல்ல; கலைஞர் அல்ல; ஏன் என் தந்தையை போல் கூட அல்ல; ஆனால் இன்றைக்கு அவர் வழியில் நான் உழைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று அவர் சொல்லக்கூடும் என்றாலும், நான் அவரை எப்படிப் பார்க்கிறேன் என்றால், அவருக்கு இரண்டு தகுதி போதும்.

சனாதன தர்மத்தைப் பற்றி பேசினார். எதிர்ப்பு வந்தது. மண்டியிட மாட்டேன். சிலுவை என்றால் - சிறை என்றால் தூக்கி சுமப்பதற்கு நான் பெரியாரின் பேரன்; கலைஞரின் பேரன்; என் தந்தையின் வழி நடப்பவன் என்று கொள்கையை விட்டுவிட்டு மண்டியிடாத அந்த மனப் பக்குவம் இருக்கிறதே அந்த தகுதி உங்களுக்கு போதும்.

அதற்குப் பிறகு, இன்னொரு தகுதி; மசூதி இருந்த இடத்தில் ராமர் கோவில் கட்டியது தவறு என்று சொல்வதற்கு இந்தியாவில் எந்த அரசியல் தலைவனுக்கும் நெஞ்சுரமில்லை, மன வலிமை இல்லை. ஆனால் உச்சநீதிமன்றத் தீர்ப்பை புறந்தள்ளி, நான் அதை ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று சொல்கின்ற அந்த ஆற்றலில் உங்களை கலைஞராகப் பார்க்கிறேன்; அண்ணாவாக பார்க்கிறேன்; முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற மகத்தான மனிதராக உங்களைப் பார்க்கிறேன்.

ஏன் என்றால், பெரியாருக்கு மட்டும்தான் அந்த ஆற்றல் இருந்தது. நீதிமன்றத்தில் தண்டனை பெற்றார் பெரியார். "உங்களுக்கு எவ்வளவு தண்டனை?" என்று நீதிபதி கேட்டார். பெரியார் சொன்னார், "உங்களுக்கு எவ்வளவு மன நிறைவு வருமோ, அவ்வளவு மனநிறைவு பெறுகின்ற அளவிற்கு நீங்கள் தண்டனை தாருங்கள்" என்று சொன்னார்.

எனவே, பெரியார் வழியில் - அண்ணா வழியில் - கலைஞர் வழியில் - தளபதி வழியில் இன்றைக்கு கொள்கை ரீதியாக பயணிக்கிற உங்களுக்கு இந்த நாட்டை ஆள்வதற்கு வேறு என்ன தகுதி வேண்டும்! உங்களை அங்கீகரிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றைச் சொல்லுவேன். திருநெல்வேலியில் நடைபெற்ற இளைஞர் அணி முதல் மாநாட்டில் பேராசிரியர் பேசினார். அதற்கு முன்னால் தளபதி பேசினார். தளபதி பேசுகிறபோது சொன்னார், "இந்த மாநாட்டை நடத்துவதற்கு இளைஞர் அணிச் செயலாளராக எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கும், பொதுச்செயலாளருக்கும் நன்றி" என்று சொன்னார். அதற்குப் பிறகு, பேராசிரியர் பேசுகிறபோது சொன்னார், "மாநாட்டை மட்டுமா, உன்னிடத்தில் ஒப்படைத்தோம்?; நானும், கலைஞரும் இன்னும் என்னென்னவோ ஒப்படைக்கப் போகிறோம்" என்று அன்று சூசகமாக ஒலித்த குரல் இன்றைக்கு மீண்டும் இங்கே எதிரொலிப்பதாக நான் உணர்கிறேன். அந்த விதத்தில் நம்முடைய இளைஞரணியின் செயலாளரை நான் வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

#### எது திராவிடம்?

தலைப்புக்கு வருகிறேன், 'திராவிட மாடல்': இது ஒன்றும் தெரியாத தலைப்பு அல்ல. திராவிட மாடலைப் பற்றி மூன்றாண்டு காலம் பேசிக் கொண்டிருக்கிறோம். எது திராவிடம் என்றெல்லாம் சொல்லிவிட்டோம். வில் டியூரண்ட் என்ற வெளிநாட்டு அறிஞர் எழுதிய 'நாகரிகத்தின் கதை' என்ற நூலில் திராவிடம் வருகிறது; டி.ஆர்.சேஷா ஐயர் எழுதிய 'திராவிட இந்தியா' வில் திராவிடம் வருகிறது; அதேபோல, அதற்குப் பின்னால் வந்த இராமச்சந்திர தீட்சிதர் எழுதிய 'வரலாற்றுக்கு முந்தைய பண்டைய இந்தியா' என்ற அந்த புத்தகத்தில் வருகிறது; அதற்குப் பிறகு, குமரிலபட்டர்; அதற்குப் பிறகு, வில்லியம் ஜோன்ஸ்; அதற்குப் பிறகு, மாக்ஸ் முல்லர்; பின்னாலே, கால்டுவெல்; இப்படி தத்துவார்த்த ரீதியாக 'திராவிடம் எது' என்று வரலாற்றுத் தரவுகளைச் சொல்லிவிட்டு போனார்கள். அது படிப்பு அது Academic research. ஆனால், அந்த திராவிடத்தை மட்டுமே இன்றைக்கு 'திராவிடமாக' வரித்துக் கொள்ள இயலாத சூழ்நிலை.

ஏனென்றால், எது திராவிடம் என்றால், நில எல்லையா? மொழியா? பண்பாடா? இவற்றையெல்லாம் கடந்து அந்தச் சொல்லாடல் இன்றைக்கு பரந்த தத்துவார்த்தச் சொல்லாக தேவைப்படுகிறது. ஏன் தேவைப்படுகிறது? இந்தியாவிலேயே இரண்டு பண்பாடுகள் உண்டு. ஒரு பண்பாடு சமஸ்கிருதத்தை அடிப்படையாகக் கொண்ட ஆரிய பண்பாடு. அது வடபுலத்தில் இருந்தது. விந்திய மலைக்கு அப்பால் இருந்தது. இன்னொன்று, தமிழ் - தமிழைச் சுற்றி இருக்கின்ற கிளை மொழிகள்.

"கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும் தாயே, தமிழே உன் உதிரத்தே உதித்தெழுந்தே ஒன்று பலவாயிடினும் ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து சிதையா உன் சீரிளமை" என்று மனோன்மணியம் குறிப்பிடுகிறது.

எனவே, கிளை மொழிகளாக இருக்கிற இந்த மொழிகள் தமிழை அடிப்படையாகக் கொண்ட திராவிட இனம். இதை இன்றைக்கு மறுக்கிறார்கள். இந்த இரண்டு இனமும் உண்டு என்று நான் சொல்லவில்லை, ஜவஹர்லால் நேரு சொன்னார். அதற்குப் பிறகு, அம்பேத்கர் சொன்னார். அதற்குப் பிறகு, வரலாற்று அறிஞர்கள் சொன்னார்கள். டாக்டர் ராதாகிருஷ்ணன் 'The Philosophy of Hinduism' என்ற புத்தகத்தில், "இந்த மண்ணில் இரண்டு மொழி அடிப்படையான பண்பாடுகள் இருந்தன. அந்த பண்பாட்டுக் கூறுகளை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்" என்று சொன்னார். சர்.சி.பி.ராமசாமி ஐயர் அதற்கு புத்தகமே போட்டார்.

#### இரண்டு தத்துவத் தளங்கள்!

எனவே இரண்டு தத்துவத் தளங்கள் - இரண்டு பண்பாடுகள் இங்கே இருந்தன. நில எல்லையாக இருக்கலாம். மொழியாக இருக்கலாம். ஆனால் இன்றைக்கு நான் பார்க்கிறேன். நம்முடைய முதலமைச்சர் ஒரு மிகப் பெரிய தீர்க்கதரிசி. எதிரிகள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள்.




நான் சுருக்கமாகச் சொல்கிறேன்; முதலில் திரிசூலத்தை ஏந்தினார்கள். திரிசூலம் எதற்கு? நாங்கள் இஸ்லாமியத்திற்கு எதிரானவர்கள் - ஒரு சூலம். இன்னொன்று, வெளியில் இருந்து வந்த கிறிஸ்தவம், அதற்கு நாங்கள் எதிரிகள். அதற்கு ஒரு சூலம். மதச்சார்பின்மை என்று சொல்கிறார்களே அதற்கு நாங்கள் எதிரிகள். இது மூன்றாவது திரிசூலம் என்று காட்டினார்கள்.

இப்போது வெளிப்படையாக வந்துவிட்டார்கள். இந்த திரிசூலத்திற்குப் பின்னால் இன்னும் இரண்டைச் சேர்த்தார்கள். என்ன சேர்த்தார்கள்? மெட்டிரியலிஸ்ட் பகுத்தறிவுவாதிகள். இன்னொன்று மார்க்ஸிஸ்ட் - பொதுவுடமைவாதிகள். அதற்குப் பிறகு, சேர்த்தார்கள் - மெக்காலே கல்விமுறை. இப்போது அவர்கள் இந்த ஐந்து சூலங்களை வைத்திருக்கிறார்கள். இஸ்லாமியர்கள் மட்டுமல்ல, கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, அதற்குப் பிறகு, பகுத்தறிவுவாதிகள் எங்களுக்கு எதிரிகள். அதற்குப் பிறகு, எங்களுக்கு மெக்காலே கல்வி முறை எதிரி. மதச்சார்பின்மை பேசுகிறவர்கள் எல்லாம் எதிரிகள் என்று அவர்கள் பிரகடனப்படுத்தி விட்டார்கள்.

ஆனால், நமக்கு இந்த அய்ந்து பேரும் நண்பர்கள் என்று சொல்வதற்கு நமக்கு ஒரு தத்துவத்தை நம்முடைய முதலமைச்சர் சொன்னார், எது 'திராவிட மாடல்' என்று சொன்னார்? திராவிட மாடல் என்று சொன்னால், 1.சுயமரியாதை, 2. சமத்துவம், 3.மாநில சுயாட்சி, 4.மதச்சார்பின்மை, 5. தேசிய இனங்களை அங்கீகரிப்பது. மிகத் தெளிவாக இருக்கிறது. ஆரியத்தில் ஐந்து எதிரிகள் 1.இசுலாமியர், 2.கிருஸ்துவர், 3.பகுத்தறிவாளர்கள், 4.பொதுவுடைமைவாதிகள், 5.மெக்காலே கல்வி முறை.

திராவிட மாடலா? ஆரிய மாடலா? என்று இன்றைக்கு அரசியலில் கேள்வி. மெக்காலே கல்வி முறை எதிரி என்று ஏன் சொல்கிறார்கள்?

... சங்கத்தமிழ் எடுத்து படித்துப் பாருங்கள். எங்கள் திராவிட படித்த இனம். தமிழர்கள் ஆண்கள், பெண்கள் எல்லோரும் படித்தவர்கள். அவ்வையார் படித்தவர். எல்லா பெண்களும் படித்தவர்கள். இன்னும் சொல்லப்போனால், சங்கத்தமிழில் என்ன சொல்கிறது? பெண்ணுக்கு எது அழகு?

**குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி அழகே அழகு என்று சொன்னார்கள்.**

பெண்ணுக்கு எது அழகு? நீண்ட கூந்தலா? பருத்த மார்பகமா? அழகிய இடையா? அவை அழகல்ல. அந்த பெண் படித்திருந்தால் அழகு என்று என் சங்கத்தமிழ் சொல்கிறது.

**இடை வனப்பும், தோள் வனப்பும், ஈடின் வனப்பும்,**
**நடை வனப்பும், நாணின் வனப்பும், புடை சால்**
**கழுத்தின் வனப்பும், வனப்பு அல்ல; எண்ணோடு**
**எழுத்தின் வனப்பே வனப்பு** - என்று ஆணுக்குச் சொல்கிறது. ஒரு ஆணுக்கு அகன்ற மார்பு இருக்க வேண்டாம். பருத்த கழுத்து இருக்க வேண்டிய அவசியம் இல்லை. யானையைப் போல் நடை இருக்க வேண்டிய அவசியம் இல்லை. வீரம்கூட வேண்டியது இல்லை. அவனல்ல ஆண், அவன் படித்திருந்தால் மட்டும் தான் ஆண். அவன் கல்வி பெற்றிருக்க வேண்டும். அப்படிப்பட்ட சமூகம் இங்கே இருந்தது.

#### மெக்காலே கல்வி!

அந்தச் சமூகம் காணாமல் போனது எப்போது? படித்த சமுதாயம் - ஆணும் பெண்ணும் படித்தார்களே - அந்தப் பெண்ணை படிக்காதே... சூத்திரனை படிக்காதே... பிற்படுத்தப் பட்டவனை படிக்காதே... தாழ்த்தப் பட்டவனை படிக்காதே... பஞ்சமனை - படிக்காதே... என்று சொன்ன தத்துவம் எது? அந்த தத்துவம் இன்றைக்கு மெக்காலே கல்வி முறையை தவறு என்கிறது. எங்களைப் படிக்க வைத்தது மெக்காலே கல்வி முறை.

#### பெரியாரின் கோபம்!

அந்த மெக்காலே கல்வி முறை 1835ல் வந்ததற்குப் பிறகுதான், பள்ளன் படித்தார்; பறையன் படித்தார்; அருந்ததியர் படித்தார்; நாடார் படித்தார்; தேவர் படித்தார்; கவுண்டர் படித்தார்; செட்டியார் படித்தார்; முதலியார் படித்தார்; ஏன் பிள்ளைமார்களும் படித்தார்கள்; எனவே, அந்த மெக்காலே கல்வி முறையை நீ எதிர்க்கிறாய்... இஸ்லாமியர்கள் இங்கே வந்தார்கள். கிருஸ்துவர்கள் வந்தார்கள். வெறும் தேவாலயத்திற்காக வரவில்லை. கல்வி சொல்லிக் கொடுத்தார்கள்; சுகாதாரம் கொடுத்தார்கள்; சமத்துவம் போற்றினார்கள். அவர்களை எதிர்க்கிறாய். பகுத்தறிவாளர்களை எதிர்க்கிறாய். யார் பகுத்தறிவாளர்? இந்த மண்ணில் கடவுள் மறுப்பிற்காக அல்ல, கடவுள் மறுப்பை ஏன் சொன்னார் பெரியார்? "மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது; கண்ணில் படக்கூடாது; பார்த்தால் பாவம்; தொட்டால் தீட்டு என்ற கொள்கைகள் தாண்டவம் ஆடுகிற ஒரு நாட்டை, பூகம்பத்தால் அழிக்காமலோ, சண்டமாருதத்தால் துகளாக்கப்படாமலோ, சமுத்திரம் பொங்கி எழுந்து மூழ்கச் செய்யாமலோ, பார்த்ததற்கு பிறகும், கடவுள் இருக்கிறார் என்றால் நான் எப்படி நம்புவது" என்று கேட்டார் பெரியார். பெரியாருக்கு கடவுளோடு கோபமில்லை. பெரியாருக்கு கோபம் இந்த கடவுளின் பெயரால் என்னை படிக்க விடாமல் செய்திருக்கிறாய்... இந்த கடவுளின் பெயரால் எனக்கு பண்பாடு இல்லாமல் செய்திருக்கிறாய் என்கின்ற அந்த கோபம்.

எந்த ஐந்தை நாம் ஆதரிக்கிறோமோ, அவற்றையெல்லாம் அவர்கள் எதிர்க்கிறார்கள் என்றால், பகைவர்கள் தெளிவாக இருக்கிறார்கள். அந்த பகைக்கு பெரியார் பேசினார்; அண்ணா பேசினார்; திராவிடம் எது என்று சொன்னார்? பெரியார் திராவிடம் என்ற வார்த்தையை ஏன் பயன்படுத்துகிறோம் என்று சொன்னபோது, "நான் அதிகம் படிக்காதவன். நான் திராவிடம் என்று சொல்வதற்கு காரணம், நாங்கள் எந்த வார்த்தை கொடுத்தாலும், ஆரியர்கள் பார்ப்பனர்கள் அதற்கு உள்ளே வந்துவிடுகிறார்கள். நான் வேறு வார்த்தை எல்லாம் பார்த்தேன். தமிழ் என்று சொன்னால், அவனும் வந்து விடுகிறான். வேறு எந்த வார்த்தை சொல்லியும் தெரியவில்லை. நான் படித்தவர்களுக்கு சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டு பெரியார் சொன்னார், "திராவிடம் என்கின்ற வார்த்தைதான் ஆரியர்களை வெளியே வைத்து, சூத்திரர்களை, பஞ்சமர்களை, தமிழர்களை ஒன்றாக ஆக்கும் ஒரே சொல்" என்று பெரியார் சொன்னார். அந்த பெரியார் சொன்ன வரையறையைத் தாண்டி, அண்ணா சொன்னார், "We Belong to Dravidian Stock" என்று நாடாளுமன்றத்தில் சொன்னார். அந்த வரையறையைத் தாண்டி, திராவிடம் என்பது ஒரு தத்துவம். அந்த தத்துவத்தை வீழ்த்துவதற்கு இந்த மண்ணில் எவனும் இல்லை என்று கலைஞர் முழங்கினார்.

> எப்போதும் மதம் தேசியம் ஆகாது. அந்த கற்பிதத்தை இன்றைக்கு நம்மீது திணிப்பது மட்டுமல்ல, இந்தியா மீது திணிக்கிறபோது அதைக் கட்டுப்படுத்துகின்ற ஆற்றல்மிக்க ஒரு கொள்கை இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்; ஒரே தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். இந்த இயக்கத்தை, இந்த தலைவனை போற்றி பாதுகாப்பதற்கு இளைஞர் படை இருக்கிறது. அந்த படையின் தலைவனாக ஆருயிர் இளவல் நம்முடைய உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இருக்கிறார்.

அந்த தத்துவத்தை தாண்டி; எல்லையைத் தாண்டி; மொழியைத் தாண்டி; பண்பாட்டைத் தாண்டி; திராவிட மாடல் என்றால் சட்டசபையில் பதிய வைத்திருக்கிறார், '1. சுயமரியாதை, 2. சமத்துவம், 3. மாநில சுயாட்சி, 4. மதச்சார்பின்மை, 5. தேசிய இனங்களின் உரிமையை அங்கீகரிப்பது' இந்த ஐந்தும்தான் திராவிடம் மாடல் என்றார்.

எழுதி வைத்துக் கொள்ளுங்கள், இந்த மாநாடு திராவிட மாடல் மாநாடு என்றால் இது தமிழ்நாட்டிற்கான மாநாடு அல்ல, இன்றைக்கு இந்தியா முழுவதும் இது தேவைப்படுகிறது. மம்தா பானர்ஜி இருக்கிறார் மோடி ஆட்சியை முடிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டுகிறார்; கொக்கரிக்கிறார்; ஆயுதத்தை எடுக்கிறார்; ஏன், கோயிலுக்கேகூட போகிறார். பட்நாயக் எதிர்க்கிறார், ஒரிஸாவில் சிவன் கோவிலுக்குப் போகிறார். பக்கத்திலே பஞ்சாப் இருக்கிறது; பக்கத்தில் டெல்லி இருக்கிறது; ஆனால், மதவாதத்தை - பா.ஜ.க.வை வீழ்த்த என்ன ஆயுதத்தை எடுப்பது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஆரியத்தை வீழ்த்த வேண்டும்.

#### மதத்தின் பெயரால் தேசியம்!

என்றைக்கு மதம் 'தேசியம்' ஆனது? கேட்பதற்கு யாருக்கு யோக்கியதை இருக்கிறது? ஒரு மொழி தேசியம் ஆகலாம். நான் ஒன்றை சொல்லி முடிக்கிறேன். இன்றைக்கு "இந்து தேசியம்" என்று சொல்கிறார்கள். இந்து தேசியம் எப்போதாவது உண்டா? மதத்தின் பெயரால் ஒரு தேசியம் உலகத்தில் இருந்ததே இல்லை... சவால் விடுகிறேன்.

நம் பக்கத்தில் இருக்கும் பாகிஸ்தான். பாகிஸ்தான் ஏன் பிரிந்தது? அந்த தவறை சாவர்க்கரால் ஜின்னா செய்தார். சாவர்க்கர் சொன்னார், "இந்து தேசியம்" என்று சொன்னார். "நீ இந்து தேசியம் என்று சொன்னால், நான் 'இஸ்லாம் தேசியம்' என்று சொல்வேன்" என்று ஜின்னா பிரித்தார். மதம் ஒரு தேசியமாக அன்றைக்கு பொய்யாக பூதாகரப்படுத்தப்பட்டது. ஜின்னா நாட்டை பிரித்தார். பாகிஸ்தான் பிரிந்தது.

#### முஜிபுர் ரஹ்மான்!

பாகிஸ்தான் பிரிந்த ஓராண்டில், புதிய நாட்டின் பிரதமர் ஜின்னா டாக்காவுக்கு போகிறார். கிழக்கு பாகிஸ்தானுக்கு போகிறார். ஒரே மதம் எழுதி வைத்துக் கொள்ளுங்கள், ஆனால் மேற்கு பாகிஸ்தானில் பிறந்த ஜின்னாவிற்கு உருது தாய்மொழி. கிழக்கு பாகிஸ்தானில் இருப்பவர்களுக்கு வங்காளம் தாய்மொழி. அந்த நாட்டின் பிரதமர் சுதந்திரத்திற்காக போராடி நாட்டை பிரித்து துண்டாடியவர். இந்தியாவிற்கு எப்படி தேசப்பிதா காந்தியோ, அதேபோல, பாகிஸ்தானுக்கு தேசப்பிதா ஜின்னா. அந்த ஜின்னா டாக்காவிற்கு போகிறார். உருதிலே பேசுகிறார். ஒரு இளைஞன் எழுந்து சத்தம் போடுகிறான், "பிரதமர் அவர்களே, பேசுவதாக இருந்தால் என் தாய் மொழியில் பேசு. என் வங்க மொழியில் பேசு என் தங்க மொழியில் பேசு" என்று சொன்னபோது, அவன் அடக்கி அடக்கி அமிழ்த்து வைத்து தரையில் கிடத்தப் பட்டான். அவ்வாறு கிடத்தப்பட்ட அந்த சிறிய இளைஞன்தான் கால ஓட்டத்தில் வரித்து... வரித்து... வரித்து... 20 ஆண்டுகளுக்கு பிறகு, வங்காளதேசத்தைப் பிரித்து, இது வங்காளதேசம் என்னுடைய தேசம் என்று கிழக்கு பாகிஸ்தானை பிரித்தான் முஜிபுர் ரஹ்மான்.

நார்வே, ஸ்வீடன் இரண்டு நாடு. கிறிஸ்தவத்தில் இருக்கிறது. தேசியம் வந்ததா? பாகிஸ்தான் பிரிந்தது. ஏன் கிழக்கு பாகிஸ்தான்; மேற்கு பாகிஸ்தான்? ஈரான், ஈராக் ஒரே மதம். ஏன் தேசியம் உருவாகி ஒற்றுமை ஏற்படவில்லை. மதம் ஒருபோதும் தேசியம் ஆகாது. மொழிதான் தேசியம் ஆகும்.

#### தேசியம் கற்பிதம்!

இன்னும் சொல்லப் போனால், இந்திய தேசியம் என்பதே கட்டமைக்கப்பட்டது. யாருக்கு எதிராக? வெள்ளைக்காரர்களுக்கு எதிராக கட்டமைக்கப்பட்டது தேசியம். அந்த தேசியத்தை பெரியார் ஒப்புக்கொள்ளவில்லை. தேசியம் கற்பிதம் என்று சொன்னார். தேசிய கொடி என் கோவணம் என்று சொன்னார். தேசிய கொடியை எரித்தார்; காந்தி படத்தை எரித்தார்; இதற்கெல்லாம் காரணம். மொழிவழிதான் தேசியம் அமையும். அதுதான் உண்மையான தேசியம். மதவழி தேசியம் பொய்; அயோக்கியத்தனம்.

எனவே, நண்பர்களே... இன்றைக்கு இந்து தேசியம் என்கிற பெயரால் இல்லாத தேசியத்தை எப்படி பாகிஸ்தானில் மதவாத தேசியம் பொய்யோ; எப்படி நார்வேயில் டென்மார்க்கில் பொய்யோ; ஏன் இப்போது இங்கிலாந்தில் எல்லா நாடுகளும் கிறிஸ்தவ நாடுகள். அந்த கிறிஸ்தவ நாட்டில் இங்கிலாந்து ஏன் பிரிந்தது? ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து ஈரோப் யூனியன் என்று சொல்கின்ற அந்த யூனியன் இருந்து இங்கிலாந்து பிரிவதற்கு காரணம்? ஒரே மதம்தானே, கடவுள் கிருஸ்துதானே. இருந்திருக்க வேண்டியதுதானே ஒன்றாக. என்ன காரணம்? எப்போதும் மதம் தேசியம் ஆகாது. அந்த கற்பிதத்தை இன்றைக்கு நம்மீது திணிப்பது மட்டுமல்ல, இந்தியா மீது திணிக்கிறபோது அதைக் கட்டுப்படுத்துகின்ற ஆற்றல்மிக்க ஒரு கொள்கை இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்; ஒரே தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். இந்த இயக்கத்தை, இந்த தலைவனை போற்றி பாதுகாப்பதற்கு இளைஞர் படை இருக்கிறது. அந்த படையின் தலைவனாக ஆருயிர் இளவல் நம்முடைய உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இருக்கிறார்.

ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன். யுத்தம் பி.ஜே.பி.குள்ளேயே ஆரம்பித்து விட்டது. காலையிலேயே பேசிய அருள்மொழி சொன்னார், மராட்டிய வீரன் சிவாஜி, மிகப் பெரிய வீரன். நாட்டை மீட்டான். ஆனால் அவனுக்கு மகுடாபிஷேகம் செய்ய முடியாது என்று சொல்லி அன்றைக்கு காகபட்டர், பிராமணர்கள், ஆரியர்கள் தடுத்தார்கள். என்ன காரணம்? "நான் வெற்றி பெற்றேன். எனக்கு ஏன் மகுடம் சூட்டத் தயங்குகிறீர்கள்" என்று கேட்டபோது, "நீ சூத்திரன். நாடாளக் கூடாது. சத்திரியன்தான் ஆள வேண்டும்" என்று சொன்னபோது, அந்த நாடு வீணாகப் போய், பஞ்சத்தில் திளைத்து சிவாஜிக்கு ஒரு முடிவு ஏற்பட்டது. நான் இப்போது சொல்கிறேன், சிவாஜியைவிட 56 இன்ச் இருக்கின்ற மோடி பெரிய வீரனல்ல. சிவாஜியைவிட அமித்ஷா பெரிய வீரனல்ல.

#### ஆர்.எஸ்.எஸ்.ஸின் ஆட்டம்!

அமித்ஷா அவர்களே... மோடி அவர்களே... நீங்கள் பிரதமராக இருக்கலாம். ஆனால் பிறப்பால் சூத்திரன். ஆர்.எஸ்.எஸ். ஒரு நாளும் உங்களை ஒப்புக் கொள்ளாது. அது ஆட்டத்தை ஆரம்பித்து விட்டது. ஆறு சங்கராச்சாரியர்களில் நான்கு சங்கராச்சாரியார்கள் உங்களை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். சங்கராச்சாரியார் இந்து என்றால், நீங்கள் யார்? அந்த 'இந்து தேசியம்' என்கிற பெயரால் எங்களை ஏமாற்ற வேண்டாம்.

இவர்கள் எல்லோரும் சட்டப்படி இந்துக்கள் தான். அண்ணன் துரைமுருகன் இந்து - ஆனால் வன்னியர் என்று சொன்னீர்கள்; பக்கத்தில்இருக்கும்அண்ணன்நேருஇந்து-ரெட்டியார் என்று பிரித்தீர்கள்; பக்கத்தில் இருக்கும் ஐ.பி. இந்து தேவர் என்று கூறு போட்டீர்கள். எங்களை சாதியால் பிரித்தீர்கள். ஆனால் மதத்தால் ஒன்றாக நினைக்கிறீர்கள். நாங்கள் சட்டப்படி இந்துக்களாக ஒன்றாக இருக்க விரும்புகிறோம். 'இந்து தேசியத்தில்' அல்ல!

ஆனால் நீங்கள் சொல்லும் இந்துக்களாக நாங்கள் இருக்க விரும்பவில்லை. அந்த தேசியம் எங்களுக்குத் தேவையில்லை. எங்களுக்கு திராவிட தேசியம் தமிழ் தேசியம். அதற்கு பிதாமகனாகஇருக்கும்எங்களுடைய முதலமைச்சர், இந்தியா முழுவதும் இந்த தேசியத்தைக் கொண்டு செலுத்துவார்.

2024இல் மததேசியம் ஒழிக்கப்பட்டு, எல்லா தேசிய இனங்களின் ஆட்சி அமையும்... அமையும்... அமையும்... என்பதற்கான உத்திரவாதம்தான் இந்த மாநாடு என்று சொல்லி உங்களை வணங்கி விடைபெறுகிறேன்.

இவ்வாறு ஆ.இராசா எம்.பி. பேசினார்.




சிவகங்கையில் நடைபெற்ற மொழி போர் தியாதிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் சிறப்புரையாற்றினார். உடன் திருமதி.தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., நகர் கழகச் செயலாளர் சி.எம்.துரை, ஆனந்த், மாவட்ட துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன்,கே.எஸ்.எம்.மணிமுத்து மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# ஆவடியில் மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு!

## மாவட்ட கழக செயலாளர் ஆவடி சாமு. நாசர் எம்.எல்.ஏ அறிக்கை!

திருவள்ளூர் ஜன 30

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாளையொட்டி மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி முன்னாள் அமைச்சர் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ அறிக்கையில் தெரிவித்துள்ளார். இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க அண்ணல் மகாத்மா காந்தியடிகளை இழிவு படுத்துவதை தடுத்தாக



வேண்டும். மதவெறியை மாய்ப்போம், மனித நேயம் காப்போம். அண்ணல் காந்தியடிகளின் நினைவு நாளையொட்டி மதநல்லிணக்க உறுதிமொழி ஏற்பு

நிகழ்ச்சி இன்று (30.01.2024 செவ்வாய்க்கிழமை) காலை 9 மணி அளவில் திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி அருகில் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ எனது தலைமையில் நடைபெறுகிறது.

இந்த மதநல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் சட்ட மன்ற உறுப்பினர் மாநில மாவட்ட நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர ஒன்றியக் கழக, நகர, பகுதி பேரூர்க் கழகச் செயலாளர்கள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மேயர் ஒன்றியக் குழு பெருந் தலைவர்கள், நகர மன்றத் தலைவர்கள், மண்டல குழு தலைவர்கள் பேரூராட்சித் தலைவர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு. நாசர் தமது அறிக் கையில் கேட்டுக் கொண் டுள்ளார்.

### செ.தமிழ் வேந்தன் - பெரம்பூர் ஆர்.மகேஷ் முன்னிலை! த.அன்பழகன் தலைமை!

# வியாசர்பாடியில் ஒருநாள் (வெட்ரன்) கால்பந்து போட்டி!

## அமைச்சர் பி.கே.சேகர் பாபு துவக்கிவைத்து பரிசு வழங்கினார்!

சென்னை, ஜன.30-

வியாசர்பாடி F.F.C கால்பந்தாட்ட குழு 40 வது ஆண்டு துவக்க விழா - பொங்கல் திருநாளை முன்னிட்டு F.F.C கால்பந்தாட்டகுழுசார்பில் மாபெரும் ஒரு நாள் வெட்ரன் கால்பந்து போட்டி த.அன்பழகன் தலைமையில்திரு.வி.க.நகர், வடக்கு பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன், பெரம்பூர் ஆர்.மகேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர்பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு போட்டியைதுவக்கிவைத்து வெற்றிபெற்ற அணிக்கு 60,000 (அறுபதாயிரம்) ரொக்கமும் இரண்டாம் பரிசுபெற்றஅணிக்கு50,000 (ஐம்பதாயிரம்)ரொக்கமும் வெற்றி கோப்பையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஆர்.டி.சேகர்எம்.எல்.ஏ., மாநில வழக்கறிஞர் அணி துணை செயலாளர்கே.சந்துரு, எல்.முனிஸ்வர் கனேசன் , க. ஜெயராமன், கேபிள் டிவி. தினகரன்,வெ.இன்பா,எஸ். புஷ்பராஜ், எம்.இசட். அபோய், மா.ருத்ரமூர்த்தி, ஜி.கிருஷ்ணகுமார்,சே.மணி மாறன், வி.ஜெகன், முகமது ரஃபி, ஜி.சரன்ராஜ், சி. ஆனந்த், ஆர். மனோஜ், த. தமிழ்முகிலன், சந்தோஷ், ஆகாஷ், ந. வீரமுத்து, ஆர். கே.எஸ்.எம்.தம்பய்யா, மா.ஜெயகாந்தன்,ஜி.சுந்தர், எப். செபாஸ்டின், இ.எஸ். ரவிசந்திரன், பி.ஜெய்சிங் தாமஸ், இ.தாஸ், எம். தனசேகர், ஜி. கோட்டிஸ்வரன், ஜி.ரவி,

எம்.கந்தன், வி.லூர்து, எம், பழனி, எம்.முருகேசன் ,ஆர்.பவளவண்ணன்,ஜான் சுரேஷ், ஐ.சி.எப்.பரணி, சுந்தர், இருதயநாதன், ரவி, இ.முருகன், உமாபதி, துரைமுருகன், குணா, ராஜேந்திரன், மம்மு, நந்தகுமார்,பி.நாராயணன், எஸ். தாமோதிரன், வில்லியம்ஸ், எஸ்.சம்பத், சுதா, பன்னீர்.உதயா, வி.ஆரோக்யதாஸ்,விஷ்ணு, சரவணன், எம்.ஆறுமுகம், எம் சுரேஷ், ஜி. முனுசாமி, சி.மௌலி, ஆர்.மோத்தி, J.அரிராஜ்,A.விக்னேஷ்,எஸ். அஜய், எம்.மதன், விக்கி, சுபாஷ், ஏ.முனுசாமி, பி. அஜித், பி.அபி, எல்.அருண், எம்.பிரசாந்த்,எஸ்.கார்த்திக், எம். சக்தி, ஏ. ஐசக், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஏ.பூவரசன், ச.ராஜன், என்.காமராஜ் ஆகியோர் நன்றி கூறினர்.

### கழக துணை அமைப்புச் செயலாளர் - வழக்கறிஞர்

# ப.தாயகம்கவி எம்.எல்.ஏ.வின் மாமியார் - திருமதி. சந்திராம்மாள் மறைவு!

## வந்தவாசி – சேத்துப்பட்டு வட்டம் – கல்யாணபுரத்தில் இன்று இறுதிச் சடங்குகள்!

சென்னை, ஜன. 30-

கழக துணை அமைப்புச் செயலாளர் - வழக்கறிஞர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ.வின் மாமியார் திருமதி. சந்திராம்மாள் அவர்கள், நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவரது இறுதிச் சடங்குகள் இன்று அவரது சொந்த ஊரான, திருவண்ணாமலை மாவட்டம் - கல்யாணபுரத்தில் நடைபெறுகிறது.



கழக துணை அமைப் புச் செயலாளர் - திரு.வி.க. நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவியின் மாமி யாரும் - தமிழ்நாடு அரசின் செய்தித் துறையில் உதவி இயக்குநராகப் பணிபுரியும் திருமதி.கமலாவின் தாயாரும், காலஞ்சென்ற எம்.சாமிநாதன் அவர்களின் மனைவியுமான திருமதி. சந்திராம்மாள் (வயது 89) அவர்கள், சிறிது காலமாக உடல் நலம் குன்றியிருந்தார்.

தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த போதும், சிகிச்சை பலனின்றி, நேற்று (29.1.2024 - திங்கட்கிழமை) மதியம் 1 மணியளவில் இயற்கை எய்தினார்.

அவர் மறைவுற்ற செய்தியறிந்து ஏராளமான கழக முன்னணியினரும், நிர்வாகிகளும், கழகத்தினரும், உறவினர்களும் அவரது உடலுக்கு மலர் மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, சேத்துப்பட்டு தாலுகா, கல்யாணபுரத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து இன்று (30.1.2024) மதியம் புறப்பட்டு, இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.

### தா.இளையஅருணா தலைமை ! கலாநிதி வீராசாமி எம்.பி, - ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ முன்னிலை!

# ஆர்.கே.நகர் தொகுதியில் மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி!

## பகுதிச் செயலாளர்கள் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், இரா.லட்சுமணன் வேண்டுகோள்!

சென்னை, ஜன.30

ஆர்.கே.நகர் பகுதி செயலாளர்கள் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், இரா.லட்சுமணன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

மதநல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி இன்று ( 30.1.2024 செவ்வாய்க்கிழமை ) காலை 10.00 மணியளவில் சென்னை பழைய வண்ணாரப்பேட்டை டி.எச்.ரோட்டில் உள்ள அண்ணா சிலை அருகில் சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா.இளையஅருணா தலைமையில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளரும் ஆர். கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே. ஜே.எபினேசர், ஆகியோர் முன்னிலையில் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இதில் ஆர்.கே.நகர் தொகுதிக்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அனைத்து அணிகளின் சார்பு மன்ற நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இவ்வாறு ஆர்.கே.நகர் பகுதி செயலாளர்கள் எஸ். ஜெபதாஸ்பாண்டியன், இரா.லட்சுமணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.



சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று (29.1.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.க.மணிவாசன், முதன்மை செயலாளர் / சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் / மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் கிழக்கு ஒன்றியம் முன்னாள் தி.மு.க. மாவட்ட பிரதிநிதியும் முன்னாள் ஒன்றிய கவுன்சிலரும் வல்லூர் பா.து.தமிழரசன் இல்ல திருமணம் விழா மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமையில் ஒன்றிய செயலாளர் வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ்ராஜ் வரவேற்பில் நடைபெற்றது. இதில் கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, ஜே.ஜே. எபினேசர், துரை சந்திரசேகர், மாநில மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன், சி.எச்.சேகர், பாஸ்கர் சுந்தரம், ஏ.ஆர்.டி. உதயசூரியன், ருக்மணி மோகன்ராஜ், அத்திப்பட்டு ஜி.ரவி, டாக்டர் எம்.எஸ்.கே.ஆர்.ராஜ்குமார், ஆ.ராஜா, மீ.வி.கோதண்டம், தன்சிங், எம்.டி.ஜி. கதிர்வேல் , வல்லூர் சேகர், பாளையம், சுரேஷ், தசரதன், வாயலூர் தாஸ், மோகன சுந்தர், ஒன்றிய செயலாளர்கள் எல்லாபுரம் சக்திவேல், வல்லூர் ரவி ,நந்தியம் கதிரவன், ஆர்.என். ரமேஷ், அன்பழகன் , உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில்

# வெளி மாநில மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடல்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. பங்கேற்பு!

நாமக்கல், ஜன. 30 -

நாமக்கல் மாவட்டம், மோகனூர் சாலை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் குடியரசு தின விழாவை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயின்று வரும் வெளி மாநிலங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் பொன்னாடை அணிவித்து, இனிப்புகள் வழங்கி குடி யரசு தின விழா வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் பேசும் போது, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயின்று வரும் வெளி மாநிலங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் அனைவருக்கும் குடியரசு தின வாழ்த்துகளை தெரி வித்துக் கொள்கிறேன்.

நாம் பல்வேறு வகையான காலச்சாரம், மொழி, உடை ஆகியவற்றை பின்பற்றினாலும் நாம் அனைவரும் இந்தியர்களாக ஒற்றுமையாக உள்ளோம். அரசியலமைப்பு நமது ஜனநாயகத்தின் முதுகெலும்பு. எனவே அரசியலமைப்பு கொள்கைகளை நிலை நிறுத்துவது என்பது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்.

இந்தியா முழுவதும் உள்ள மாணவர்கள் நமது கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு வருகை புரிந்து பயில்வது மிகவும் பெருமையாகும்.

கணியன், பூங்குன்றன் கூற்றுப்படி "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்பது போல உலகில் உள்ள அனைத்து மனிதர்களும் இனம், மதம், மொழி பாகுபாடின்றி அனைவரும் நமது உறவினர்கள்.

வெளிமாநிலங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் தங்களது அவசர காலங்களில் சொந்த ஊருக்கு செல்வதற்கு உறுதிபடுத்தப்பட்ட ரயில் பயணச் சீட்டு பெறுவதற்கான சிரமங்களை போக்கி பயணச்சீட்டை உறுதி செய்திட எனது அலுவலகத்தின் மூலம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆவனம் செய்கிறேன். எந்த நேரத்திலும், எந்த நாளிலும், எந்த உதவிக்கும் நீங்கள் என்னை தொடர்பு கொள்ளலாம். இதற்காக மாணவர்கள் அடங்கிய வாட்ஸ் ஆப் குழுவை உருவாக்கி அக்குழுவின் மூலம் தங்களது கோரிக்கைகளை தெரிவிக்கலாம்.

கல்லூரி மாணவர்களாகிய நீங்கள் தான் நம் நாட்டின் எதிர்காலம். சமுதாயத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த உங்கள் அறிவையும், திறமையையும் பயன்படுத்த வேண்டும். அரசியலமைப்பை கற்றுக்கொள்ளுங்கள், அரசியலை கற்றுக் கொள்ளுங்கள். இது உங்களுக்கு கலாச்சாரம் மற்றும் ஜனநாயக கட்டமைப்பின் தெளிவை தரும். கால்நடை மருத்துவக் கல்லூரியில் மகளிர் விடுதி அமைப்பதற்கு எனது பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.50.00 இலட்சம் நிதி அளிக்கிறேன். இந்த விடுதியில் மாணவியர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் சிறப்பாக அமைக்கப்பட வேண்டும். மேலும், அனைத்து மொழி பேசும் மாணவர்களும் பயன்படுத்தும் வகையில் தேவையான கட்டமைப்புகளை இந்த நிதியின் மூலம் ஏற்படுத்தப்படும். மேலும், ஒவ்வொரு ஆண்டும் கல்லூரி மாணவர்களின் கலாச்சார நிகழ்ச்சி நடத்த தேவையான நிதியும் எனது நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கப்படும் என பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தெரிவித்தார்.

முன்னதாக நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் அவர்களின் தனி செயலர் சரவணன், நாடாளுமன்ற மாநிலங்களை உறுப்பினர் அலுவலகம் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும், மாணவர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படுவது குறித்தும் காணொலிக்காட்சி வாயிலாக உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் மருத்துவர் எம்.செல்வராஜ், மாணவர் சங்க துணைத்தலைவர் மருத்துவர் பாலசுப்ரமணியன் ஆகியோர் உட்பட கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் த.மனோதங்கராஜ் தலைமையில்

# பால்வளத் துறை மேலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## துணைப் பதிவாளர்கள் பங்கேற்பு!



பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ் தலைமையில் நேற்று (29.01.2024) மாவட்ட பொது மேலாளர்கள் மற்றும் அனைத்து மாவட்ட துணை பதிவாளர்கள் (பால்வளம்) உடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பால்வளத்துறை இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு. வினீத், ஆவின் உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

சென்னை, ஜன. 30-

பால் வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் சென்னை நந்தனம், ஆவின் இல்லத்தில் நேற்று காலை 11.00 மணி அளவில் மாவட்ட பொது மேலாளர்கள் மற்றும் அனைத்து மாவட்ட துணை பதிவாளர்கள் (பால்வளம்) உடனான மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஒப்புகைச் சீட்டு வழங்குதல், கொள்முதல் செய்யப்படும் பாலின் தரத்தை உறுதி செய்தல், சங்க உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்கான கடன் மனுக்கள் தயாரித்தல். பால் கொள்முதல் அதிகரித்தல், சங்கங்கள் இல்லாத கிராமங்களில் புதிய சங்கங்கள் உருவாக்குதல், சங்க உறுப்பினர்களுக்கு 10 தினங்களில் பால் பணம் பட்டுவாடா நிலுவையின்றி செலுத்துதல் ஆகியவை தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார். 20% புரதச் சத்துள்ள கால்நடைத் தீவனம் குறித்து சங்க உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், சங்கங்களின் தணிக்கைப் பணிகளை விரைந்து மேற்கொள்ளவும் அறிவுரை வழங்கப்பட்டது. மின் சிக்கன நடவடிக்கையின் மூலம் டிசம்பர் மாதம் 2023 15.06% சேமிக்கப்பட்டு 48 இலட்சம் சேமிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆவினில் சிக்கன நடவடிக்கை மேற்கொண்டு, செலவை குறைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அமைச்சர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் துறை இயக்குநர் டாக்டர் சு. வினீத், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் கொள்முதல் பிரிவு, நிருவாகப் பிரிவு, கணக்குப் பிரிவு, விற்பனைப் பிரிவு, திட்டமிடுதல் பிரிவு, பொறியியல் பிரிவு, கட்டுமானப் பிரிவு, தர உறுதி, அம்பத்தூர் பால் பண்ணை மற்றும் பால் உப பொருட்கள் பண்ணை, மாதவரம் பால் பண்ணை, சோழிங்கநல்லூர் பால் பண்ணை, மற்றும் இதர பிரிவுகளைச் சார்ந்த உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**குடந்தை பத்மநாபன்**
**சனவரி 30 (1989)**



**குடந்தை வட்டக் கழகமாக இருந்தபோது முதல் வட்டச் செயலாளராகவும், அடுத்து குடந்தையின் முதல் நகரக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**1962ஆம் ஆண்டு விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டுகாலம் சிறையிலிருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் ”பெற்றோர்களைக் கொண்டாடுவோம் என்கிற தலைப்பிலான முதல் மாநில மாநாடு மதுரையில் நடைபெற்றது. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக வாழ்த்துரை வழங்கினார்கள். அமைச்சர் பி.மூர்த்தி இந்நிகழ்வில் கலந்துகொண்டார். அமைச்சரும்–தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மாநிலத் தலைவருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையுரையாற்றினார். கருத்தரங்க அமர்வுகளும் நடைபெற்ற இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் வெங்கடேசன், பூமிநாதன், துணை மேயர் நாகராஜன் ஆகியோரும மதுரை, தேனி, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்களில் இருந்து 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெற்றோர்களும் இம்மாநாட்டில் கலந்துகொண்டார்கள்.மேனாள் சட்டமன்ற உறுப்பினர்–தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழக மாநிலத் துணைத் தலைவர் வி.முத்துக்குமார், பள்ளிக் கல்வித்துறை அரசுச் செயலாளர் ஜெ.குமரகுருபரன், பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர் க.அறிவொளி, மாவட்ட ஆட்சியர் மா.செள. சங்கீதா ஆகியோர் கலந்து கொண்டனர்.



புதுடில்லி திரும்பும் இந்திய குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் அவர்களை நேற்று (29.01.2024) சென்னை விமான நிலையத்தில், குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் வழியனுப்பி வைத்தனர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் – இன்று

## செங்கல்பட்டில் மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி!

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜன. 30 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில், இன்று (30.1.2024) செங்கல்பட்டு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அருகில், மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது என்றும், இந்நிகழ்ச்சியில் மாவட்டம் முழுவதிலிருந்தும் கழகத்தினர் அணி திரண்டு வந்து பங்கேற்றிட வேண்டும் என்றும் மாவட்ட கழகச் செயலாளர்அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

அண்ணல் காந்தியடிகள் இழிவுபடுத்தப்படுவதைத் தடுத்தாக வேண்டும் என்றும், தேசத் தந்தை காந்தியடிகளின் நினைவு நாளான இன்று ஜனவரி 30ஆம் தேதியன்று மதவெறியை மாய்ப்போம் - மனித நேயம் காப்போம் மத நல்லிணக்க உறுதிமொழி



ஏற்றிட வேண்டும் என்றும், நாம் நாளும் போற்றி வணங்கும் - நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் - தமிழ்நாடு முதல்வர், தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அன்பு கட்டளைக்கிணங்க, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி இன்று (30-1-2024) காலை 9.00 மணியளவில் செங்கல்பட்டு, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை எதிரில் எனது (தா.மோ.அன்பரசன்) தலைமையிலும், மாவட்ட கழக நிர்வாகிகள் முன்னிலையிலும் நடைபெற உள்ளது. இந்த மத நல்லிணக்க நாள் நிகழ்ச்சியில் அனைத்து மதங்களைச் சார்ந்த பிரதிநிதிகளும் பங்கேற்க உள்ளனர்.

இந்த மத நல்லிணக்க நாள் நிகழ்ச்சியில், கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் - மாநகர, பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கழக அணிகளின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்க உள்ளனர்.

மத நல்லிணக்கத்தின் அடையாளமான அண்ணல் காந்தியடிகள் அவர்கள் மதவெறியர்களால் கொல்லப்பட்ட ஜனவரி 30ஆம் இன்று தமிழ்நாடு முழுவதும் மத நல்லிணக்க நாளாக கடைப்பிடிக்க வேண்டியது நம் அனைவரின் கடமை என்றும், அப்புனித நாளில் நாம் அனைவரும் இணைந்து மத நல்லிணக்க உறதிமொழியை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று, நம்முடைய ஒப்பற்ற தலைவர், முதல்வர் தலைவர் தளபதி அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செங்கல்பட்டில் இன்று காலை நடைபெறும் மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு பங்கேற்று, நம்முடைய உயிரனைய தலைவர் தளபதி அவர்களுக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

### பேரறிஞர் அண்ணா நினைவு நாள் பேரணி!

## சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள்!

சென்னை, ஜன. 30-

பேரறிஞர் அண்ணா நினைவு அமைதிப் பேரணியில் பெருமளவில் பங்கேற்பீர் என சென்னை தெற்கு மாவட்ட கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மூன்றெழுத்திலே ஒரு சிறப்புண்டு, முத்தமிழ் மணமுண்டு!

மூவேந்தர் முக்கொடி முக்கனியென

மும்முர சார்த்தவர் தமிழர்!

அவர் வாழ்ந்த தமிழ் வாழ்வுக்கு மூன்றெழுத்து அந்த

வாழ்வுக்கு அடிப்படையாம்

அன்புக்கு மூன்றெழுத்து..

அன்புக்குத் துணை நிற்கும் அறிவுக்கு மூன்றெழுத்து

அறிவார்ந்தோர் இடையிலெழும், காதலுக்கு மூன்றெழுத்து..

காதலர்கள் போற்றி



நின்ற

கடும் வீரமோ மூன்றெழுத்து..

வீரம் விளைக்கின்ற

களம் மூன்றெழுத்து...

களம் சென்று காணுகின்ற

வெற்றி மூன்றெழுத்து

அந்த வெற்றிக்கு நமையெலாம் ஊக்குவிக்கும் அமைதி மிகு

அண்ணா மூன்றெழுத்து... என்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் புகழ்ந்து பாடப்பட்ட, நம்முடைய திராவிட மாடல் முதலமைச்சர், கழகத்தலைவர் தளபதி அவர்களின் சிந்தையில் நிறைந்த, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளில், அவருக்கு புகழஞ்சலி செலுத்தும் வண்ணம் அமைதிப் பேரணி நடைபெற உள்ளது.

வருகிற பிப்ரவரி 3 ஆம் நாள், காலை 7.00 மணியளவில், கழகப் பொதுச்செயலாளர் அமைச்சர் துரை முருகன் அவர்கள் தலைமையில், அண்ணா சாலை வாலாஜா சாலை சந்திப்பில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா சிலை அருகிலிருந்து தொடங்கி, அண்ணா நினைவிடத்தில் நிறைவடையும் இந்த அமைதிப் பேரணியில்,

சென்னைத் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக்கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பகுதி மற்றும் ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள்,வட்டக் கழக செயலாளர்கள்,

மாவட்ட பிரதிநிதிகள், இளைஞரணி, மகளிரணி, மாணவரணி, மீனவரணி, மகளிர் தொண்டர் அணி, தொழிலாளரணி, தொண்டரணி, தொழில் நுட்ப அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, இலக்கிய அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, சிறுபான்மை நல உரிமைப் பிரிவு, நெசவாளர் அணி, வர்த்தகர் அணி, விளையாட்டு அணி, மருத்துவர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மற்றும் கழகத்தின் அனைத்து நிலை சார்ந்த செயல்வீரர்கள், வீராங்கனைகள் அனைவரும் பெருமளவில் பங்கேற்றிட வேண்டுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மீதான வழக்கு:

## உயர்நீதிமன்ற தனி நீதிபதி எப்படி தாமாக விசாரணை நடத்த முடியும்?

### உச்சநீதிமன்றம் கேள்வி!

புதுடெல்லி, ஜன. 30-

அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மீதான வழக்கை சென்னை உயர்நீதிமன்ற தனி நீதிபதி எப்படி தாமாக முன்வந்து விசாரணை நடத்தி உத்தரவு பிறப்பித்தார் என உச்சநீதி மன்றம் கேள்வி எழுப்பி உள்ளது.

அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர். வழக்கை மீண்டும் விசாரிக்க உத்தரவிட்ட உயர் நீதிமன்ற நீதிபதி உத்தரவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மனு நேற்று நீதிபதிகள் ரிசிகேஷ் ராய், பி.கே.மிஸ்ரா ஆகியோரடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தரப்பில் மூத்த வழக்கறிஞர் அபிஷேக்சிங்வி ஆஜரானார்.

உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அனுமதி இல்லாமல் தனி நீதிபதி எப்படி வழக்கை எடுத்து தாமாக விசாரிக்க முடியும் என்றும், ரோஸ்ட்டர் இல்லாமல் எப்படி அவர் விசாரிக்க முடியும் என்றும் அவர் வாதிட்டார்.

மேலும், 6 வழக்குகளில் இது போன்று தாமாக முன் வந்து ஒரே மாதிரியான உத்தரவுகளை தனி நீதிபதி பிறப்பித்துள்ளதாகவும் கூறிய அவர், இந்த உத்தரவை ரத்துசெய்ய வேண்டும் என்றும் அவர் வாதிட்டார்.

இதனைத் தொடர்ந்து, தனி நீதிபதி எப்படி தாமாக முன்வந்து விசாரணை நடத்தி உத்தரவு பிறப்பித்தார் என்பது குறித்து பிப்ரவரி 5 ஆம் தேதிக்குள் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்ற பதிவாளருக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

### திண்டுக்கல் – ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் – நவாப்பட்டியில்

## மேல்நிலைப்பள்ளிக்கு ஆய்வக வசதியுடன் கூடிய கட்டிடம்!

### அமைச்சர் ஐ.பெரியசாமி உடனடி நடவடிக்கை! பொதுமக்கள் மகிழ்ச்சி!

சின்னாளபட்டி, ஜன. 30-

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கன்னிவாடி பேரூராட்சி நவாப்பட்டியில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.2 கோடியே 40 லட்சம் மதிப்பில் ஆய்வக வசதியுடன் கூடிய கட்டிடம் கட்டப்படும் என ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்ததன் பேரில் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகளை கட்டிக் கொடுக்க பணிகள் நடைபெற உள்ளது. தங்களின் வேண்டுகோளை ஏற்று புதிய வகுப்பறைகளை கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுத்துவரும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு பெற்றோர்கள், பள்ளி ஆசிரியைகள் பள்ளி மாணவிகள் மனதார பாராட்டு தெரிவித்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் நவாப்பட்டியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் பேரூராட்சி பகுதிகளில் உள்ள பயனாளிகளுக்கு 100 நாள் வேலை திட்டம் மூலம் பணிகள் வழங்குவதற்கான அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்த ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணை பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமியிடம் பள்ளி மாணவிகள் தங்கள் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வக வசதி கட்டிடம் வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். ஒரே மாதத்தில் ரூ. 2 கோடியே 40 லட்சம் மதிப்பில் நவாப்பட்டி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஏற்பாட்டின்படி புதிய வகுப்பறை கட்டிடம் மற்றும் ஆய்வகம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான ஆயத்தப் பணி நடைபெற்று வருகிறது. இச்செய்தி பள்ளி மாணவிகள் பெற்றோர்கள், ஆசிரியைகள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து நவாப்பட்டி வார்டு உறுப்பினரும், கன்னிவாடி பேரூராட்சி மன்ற துணைத்தலைவருமான கீதாமுருகானந்தம் கூறுகையில் அமைச்சரிடம் கோரிக்கை மனுதான் கொடுத்தோம். உடனடியாக கன்னிவாடி பகுதியில் உள்ள பள்ளி மாணவிகளின் நலன் கருதி ரூ.2 கோடியே 40 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமியின் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.24 லட்சம் மதிப்பில் புதிய கழிவறைகள் கட்டிக்கொடுக்க உத்தரவிட்டு அதற்கான பணிகள் நடைபெற்றுவரும் நிலையில் மகிழ்ச்சியளிக்கும் விதமாக எங்களுக்கு புதிய வகுப்பறை கட்டிட வசதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். அவருக்கு எங்கள் பகுதி மக்கள் என்றும் உறுதுணையாக இருப்பார்கள் என்றார்.

### தவறான தகவல்கள்! ஆதாரமற்ற செய்தி பரப்புவதா?

## கோயம்பேடு பேருந்து நிலைய இடத்தில் லூலூமால் என முற்றிலும் வதந்தி!

### வீட்டு வசதித் துறை செயலர் விளக்கம்!

சென்னை, ஜன.30-

கோயம்பேடு பேருந்து நிலையம் உள்ள இடத்தில் லூலூ மால் அமைக்க நிலம் தரப் போவதாக தகவல் பரவி வருவது வதந்தி என தமிழ்நாடு வீட்டு வசதித் துறை செயலர் சமயமூர்த்தி தெரிவித்துள்ளார்

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக கோயம்பேட்டில் இருந்து செங்கல்பட்டு மாவட்டம் கிளாம்பா க்கத்துக்கு புறநகர் பேருந்து நிலையத்தை மாற்றியுள்ளது தமிழக அரசு. இதற்கிடையே கோயம்பேட்டில் பெரிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட உள்ளது என்று அமைச்சர் சேகர்பாபு கூறியிருந்தார். எனினும், கோயம்பேடு பேருந்து நிலையம் உள்ள இடத்தில் எந்த திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்த உள்ளது என்பது குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை.

அதற்குள், கோயம்பேடு பேருந்து நிலையம் உள்ள இடத்தை லூலூ மால் அமைக்க வழங்க உள்ளதாக தகவல்கள் காட்டுத்தீயாகப் பரவின. அபுதாபியை தலைமையிடமாக கொண்ட லூலூ மால் நிறுவனத்துடன் தமிழக அரசு கடந்த 2022ம் ஆண்டு ஒப்பந்தம் மேற்கொண்டது. முதல்வர் ஸ்டாலின் துபாய் சென்றபோது இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. எனவே கோயம்பேடு இடத்தை அந்த நிறுவனத்துக்கு வழங்க தமிழக அரசுக்கு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் பரவின.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர், கோயம்பேடு பேருந்து நிலையம் உள்ள இடத்தை லுலு குரூப் நிறுவனத்துக்கு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்நிலையில், கோயம்பேடு நிலத்தை லுலு மாலுக்கு வழங்க உள்ளதாக பரவி வரும் தகவல் முற்றிலும் பொய்யானது என தமிழக அரசு மறுத்துள்ளது.

இதுகுறித்து பேசிய வீட்டு வசதித்துறை செயலர் சமயமூர்த்தி, “கோயம்பேடு பேருந்து முனையம் இருந்த இடத்தில் லூலூ மால் அமைக்க நிலம் தரப் போவதாக சமூக வலைதளங்களில் வதந்தி பரவுகிறது. அடிப்படை ஆதார மற்ற இந்த பொய்த் தகவலை உண்மை என நம்பி அரசியல் கட்சியினரும், சில தனி நபர்களும் சமூக ஊடகங்களில் பரப்பி வருகின்றனர். மேற்கண்ட தகவல் முற்றிலும் தவறானது, சித்தரிக்கப்பட்டது” என்று தெரிவித்துள்ளார்.



மகாராஷ்டிர மாநிலம், மும்பையில் உள்ள மகாராஷ்டிரா விதான் சபாவில் 27.01.2024 அன்று தொடங்கிய 84 வது அனைத்திந்திய சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை தலைவர்கள் மாநாட்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை சார்பில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு கலந்துகொண்டு உரையாற்றினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி உள்ளார்.



மண்டலம் 5, வார்டு 58இல் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பதினோராம் வகுப்பு பயில்கின்ற மாணவிகளுக்கு 58வது வார்டு மாமன்ற உறுப்பினரும் சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளருமான இராஜேஸ்வரி ஸ்ரீதர் தலைமையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு 152 மாணவிகளுக்கு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார். இதில் மேயர் பிரியாராஜன், கே.எஸ்.ரவிச்சந்திரன், சொ. வேலு, ஸ்ரீராமுலு, பள்ளி தலைமை ஆசிரியர் ஆர்.சுஜாதா, எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர், தலைமைசெயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.நாதன், ஜெ.கிருஷ்ணமூர்த்தி பகுதி நிர்வாகிகள் ரசூல், டி.வி.வேலு, அன்னபூரணி, 58வது வட்ட செயலாளர்கள் ஆர்.பாபு, வி.விஜயகுமார், டால்ஃபின் ஹரி கிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், வட்ட கழக நிர்வாகிகள் க.பன்னீர்செல்வம், இ.ரவிச்சந்திரன், எஸ்.சரளா, ஓகே.கிருஷ்ணமூர்த்தி, சா.குமார், ல.முரளி, பி.சின்னபொண்ணு, ஆர்.ராஜேந்திரன், சூளை குமார், கற்பகம் மற்றும் நிர்வாகிகள் மற்றும் பிற அணி பொறுப்பாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# கலைஞரின் 'அகக்கண்' கோட்பாடு

■ நீரை.மகேந்திரன்



கலைஞர், தான் வாழ்ந்த காலத்தில் முன்னும், பின்னும் பயணித்த கால பயணியாக, காலக் கணிதராக இருந்தார் என்பதற்கு நமது கண்முன் பல அடையாளங்கள் நிறுவப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு, ஒரு நிகழ்ச்சியில் பேசிய நமது முதலமைச்சர் அவர்கள், கோடம்பாக்கம் பாலம் குறித்துத் தனது நினைவினைப் பகிர்ந்தார். சென்னையில் கோடம்பாக்கம் 'ரயில்வே கேட்' மூடப்பட்டால், நகரத்தின் இரண்டு பக்கமும் துண்டிக்கப்பட்டுவிடும். அப்படியான சூழலில் தன்னை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல, பட்ட சிரமத்தை குறிப்பிட்டதுடன், அங்கு பாலம் கட்டினால் என்ன? என அப்போதே யோசித்தார், தலைவர் எனக் கூறினார்.

முதலமைச்சர் சொன்னது போல 'அப்போது' எனில் கலைஞரை காலக் கணிதர் எனச் சொல்வது சாலப் பொருத்தமானது. முதலமைச்சர் குறிப்பிட்ட காலத்துக்கும் முன்னதாகவே, அங்கு பாலம் கட்ட வேண்டும் எனக் கலைஞர் நினைத்திருக்க வாய்ப்புள்ளது. ஏனென்றால், தனது சிறுகதை ஒன்றிலும் கோடம்பாக்கம் ரயில்வே கேட் மூடப்பட்டதால், விளிம்பு நிலையில் வாழும் ஒரு பெண்ணின் ஒரே நம்பிக்கையாக இருக்கும் குழந்தை இறந்த கதையை எழுதி இருப்பார். அங்கு ஒரு பாலம் இருந்திருந்தால், அந்தக் குழந்தை இறந்திருக்காது என்பது அந்தக் கதையின் மையமாக இருக்கும். 'அங்கு ஒரு பாலம் இருந்திருந்தால்' என்பது கலைஞரின் அகக்கண் பார்வை. நான் கலைஞரின் அகக்கண் பார்வையினை ஒரு கோட்பாடாகவே உருவகம் கொள்கிறேன்.

## அகக்கண் கோட்பாடு

கலைஞர் எழுத்திலும், பேச்சிலும் பல இடங்களில் பயன்படுத்தி இருக்கும் சொல் 'நான் அகக்கண்ணால் காண்கிறேன்' என்பது. அந்த அகக்கண்தான் கலைஞரின் தொலைநோக்கு, காலப் பயணம், கழகத்தினரின் மனதைப் படிப்பது என ஒவ்வொரு விதமாகக் குறிப்பிடும்படி இருக்கிறது.

கலைஞரின் சிறுகதைகள் பெரும்பாலானவற்றில் இந்த அகக்கண் கோட்பாட்டினைப் பார்க்கலாம். கலைஞரின் திரைவாழ்க்கை உச்சமெனும் 'பராசக்தி' திரைப்படம் அகக்கண் கோட்பாட்டின் திரை வடிவம் எனலாம். 'எல்லாவற்றையும் மாற்ற வேண்டும்' என்பதை அவரது அகக்கண்தான் எழுதுகிறது. அந்த அகக்கண் கோட்பாடுதான் ஆட்சிக்குப் பின்னர் செயல் வடிவமாக மாறுகிறது. இப்படிப் பலவற்றை நாம் தொட்டுச் செல்ல முடியும்.

கலைஞரின் 'அகக்கண் கோட்பாடு' திரைவாழ்க்கை, ஆட்சியில் செயல்படுத்திய திட்டங்களில் மட்டுமல்ல, கழகத்தினரிடம் உறவாடுவதில் மேலும் சுவைமிக்கதாக இருக்கும். உணர்வுகளை உசுப்பும் வகையில் அமையும். பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பின்னர்தான், அவர் 'உடன்பிறப்பே' கடிதம் மூலம் கழகத்தினருடன் பேசுவதை வழக்கமாக்கி இருந்தார்.

அதைத் தொடங்கிய இரண்டு ஆண்டுகளில், குறிப்பாக 1971-ஆம் ஆண்டில், கழகத்தில் உட்கட்சிக் குழப்பங்களை எம்.ஜி.ஆர். தொடங்கினார். அந்த நெருக்கடியான சூழலை எதிர்கொள்ள கலைஞர் தொடர்ச்சியாகத் தொண்டர்களுக்கு 'உடன்பிறப்பே அகக்கண்ணால் காண்கிறேன்' என்று பொருள்படும்படி கடிதம் எழுதுகிறார்.

## உள்ளத்தைப் படிப்பது

அவை தொண்டர்களைத் தூண்டும் செயல்களைக் கொண்டிருக்கவில்லை. மாறாகத் தொண்டர்களின் உள்ளத்தைப் படிப்பது, அவர்கள் துவண்டுவிடாதிருக்க உடன் நிற்பது என்பதாக இருந்தது. குறிப்பாக, தொண்டர்களின் உள்ளத்தைப் படிப்பது, அதை அவர்களுக்கே சொல்வது என்பது கலைஞர் கையாண்ட அந்த உத்தி நுட்பமானது.

1972 ஆம் ஆண்டு தி.மு. கழக உட்கட்சி சூழல் முற்றியபோது கழகத்தினரின் 'மைண்ட்வாய்ஸ்'-ஐ தனது எழுத்துகளில், அவர்களுக்கே கடிதமாக்குகிறார்.

"கண்களைக் குளமாக்கிக் கொண்டு இந்தக் கடிதத்தைப் படித்திடுவாய் என்று எனக்குத் தெரியும். உன் உள்ளத்து உணர்ச்சிகள், உதடுகளின் படபடப்பாக விழிகளில் நீர்த்துளிகளாக வெளிபடுவதை உணர முடியாதவனா நான்! உன் நெஞ்சக் கொதிப்பு, நீராக வழிகிறது கண்களில், ஆம்! சுடுநீராக... காரணம், நான் கண்டுபிடித்தா சொல்ல வேண்டும்" என்கிறார்.

**கலைஞரின் அகக்கண், அந்தந்தக் காலத்தை நிறுத்தி வைக்கும் காலக் கண்ணாடியாக, காலத்தைத் தாண்டி பயணித்த அறிவியலாக இப்போது பல வடிவங்களில் நம்மிடம் நிலைபெற்றிருக்கின்றன.**

மாநாடுகள், பொதுக்கூட்டங்களுக்கான அழைப்புகளின்போதே அவரின் அகக்கண், அந்தக் கூட்டத் திரளைப் பார்த்துவிடும். "நீ குடும்பம் குடும்பமாக வந்து கொண்டிருப்பதை என்னால் காண முடிகிறது" என்கிறார். தேர்தல் நேரங்களில் "நம் நெஞ்சில் நெருப்பு மூட்டிடுவோர் உனக்கு உருவாக்கியுள்ள ஆத்திரம் - அதன் விளைவை காண நான் அச்சம்கொண்டு, கடமை-கண்ணியம்- கட்டுப்பாடு எனும் முக்கணைகளை உனக்கு நினைவூட்டுகிறேன்" என்பார். இப்படித் தொடர்ச்சியாக அரசியல் பணிகளில், 'தொண்டர்களின் அகத்தை அறிந்த தலைவரின் அகக்கண்' என்பது கலைஞரின் நுண்ணறிவுகளில் ஒன்றாக இருக்கிறது.

## உளக் கோட்பாடு ஒப்பீடு

கலைஞரின் அகப் பார்வை தொடர்பான தரவுகளுக்கான தேடுகையில், நுண்ணறிவுக் கோட்பாட்டை உருவாக்கிய உளவியலாளர் 'ஹோவர்ட் கார்ட்னெரின்' ஒரு குறிப்பினை வாசிக்க முடிந்தது.

'ஒருவரின் ஆற்றலை, அக எழுச்சியை அடையாளம் காண்பதற்கு நிபந்தனையாக உயிரியல், உளவியல், வரலாறு, கலாச்சாரம் ஆகியவற்றில் கொண்டுள்ள பயிற்சி உள்ளன. அவற்றை அறிந்தவர்களின் நுண்ணறிவு மேம்பட்டதாக இருக்கும்' என்கிறார். தவிர, ஹோவர்ட் அடையாளப்படுத்தும் மன எழுச்சிக்கான நுண்ணறிவு ஆற்றல்கள் கலைஞரின் அகக்கண் கோட்பாட்டுடன் ஒத்துபோகின்றன என்பதை நிறுவ முடிகிறது.

"மொழி சார்ந்த நுண்ணறிவு, இசை சார்ந்த நுண்ணறிவு, தர்க்க நுண்ணறிவு, கட்புலன் சார்ந்த நுண்ணறிவு (SPATIAL- VISUAL INTELLIGENCE) உடல் சார்ந்த நுண்ணறிவு, ஆளுமை சார்ந்த நுண்ணறிவு - (ஆளிடை தொடர்பு -தன்னிலைச் சார்பு) இயற்கைச் சார்ந்த நுண்ணறிவு, இருப்பியல்-ஆன்மிக நுண்ணறிவு இவற்றுடன் கற்பித்தல் சார்ந்த நுண்ணறிவும் பன்முக ஆற்றல் கொண்ட ஒரு மனிதனின் அக எழுச்சியாக வெளிப்படும்" என ஹோவர்ட் குறிப்பிடுகிறார்.

ஹோவர்ட் முன்வைக்கும் கருத்துகளின் அடிப்படையில், கலைஞரின் மனக்கண் என்பது மன ஆற்றல் கோட்பாடுகளுடன் இணக்கமாக உள்ளதை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

கலைஞருக்குப் பின்னர் பிறந்தவர்தான் ஹோவர்ட் கார்ட்னர். ஆனால், அவர் மனித ஆற்றல் குறித்து மேற்கொண்ட ஆய்வுகள் அவருக்கு முன்னர் உலகை மாற்றிய தத்துவஞானிகள், அறிவியலாளர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்புகள் கொண்டவைதான். நமக்குக் கலைஞரின் அகக்கண் பார்வையை ஒப்பிட்டு அவற்றைக் கோட்பாடாக்கும் வாய்ப்புகள் உள்ளன.

கலைஞரின் அகக்கண், அந்தந்தக் காலத்தை நிறுத்தி வைக்கும் காலக் கண்ணாடியாக, காலத்தைத் தாண்டி பயணித்த அறிவியலாக இப்போது பல வடிவங்களில் நம்மிடம் நிலைபெற்றிருக்கின்றன. அவற்றைப் பேசி, எழுதி, ரசித்து அடுத்தத் தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பதன் மூலம் கலைஞரின் அகக்கண் கோட்பாட்டை நிலை நிறுத்தலாம்.

## திராவிட இயக்க இதழ்கள் - 'தமிழ்ப்பணி'




தமிழறிஞர் வா.மு. சேதுராமன் அவர்களால் தொடங்கப்பட்டு, 1971 ஆம் ஆண்டு, சித்திரை மாதம் முதல் வெளிவந்து கொண்டிருக்கிறது 'தமிழ்ப் பணி' எனும் இதழ். மாத இதழான இது, சென்னையில் இருந்து வெளிவருகிறது. இதன் தற்போதைய ஆசிரியராக அவரது மகன் வா.மு.சே.திருவள்ளுவர் இருக்கிறார்.

முதல் இதழின் அட்டைப் படமே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படத்தைத் தாங்கி வந்துள்ளது. மேலும், அந்த ஆண்டு தேர்தலில் வென்று ஆட்சியில் அமர்ந்த தி.மு.க. அரசை வரவேற்று தலையங்கமும் எழுதப்பட்டுள்ளது. முதல் இதழுக்கு மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் அன்றைய துணைவேந்தர் டாக்டர் மு.வரதராசனார் மற்றும் டி.கே.எஸ். நாடக சபா தலைவர் தி.க.ஷண்முகம் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

மரபுக் கவிதைக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளிவரும் இதழ் இது வாகும். புதுக்கவிதையை எதிர்த்து, தமிழண்ணல் எழுதிய கட்டுரைகள் இதில் தொடர்ந்து வந்தன. பல்வேறு நூலகங்கள் பற்றிய சிறப்புக் கட்டுரைகள், மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்துகள், தமிழின் சிறப்பை வலியுறுத்தும் கட்டுரைகள் உள்ளிட்டவை, இதில் வெளிவந்துள்ளன.

மேலும் தமிழ்மொழி, தமிழர், தமிழ்நாடு, இலங்கை மற்றும் தமிழர் பெருமளவில் வாழும் நிலப்பகுதிகளில் நிலவும் அரசியல் பற்றிய செய்திகளையும் இது தாங்கி வருகிறது. 1971ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை வெளிவந்த இந்த இதழ்களின் தொகுப்பு, 39 தொகுதிகளாக வெளிவந்துள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### மேயர் தளபதி!



ரமேஷ் ரத்தினசாமி

1996 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி மேயராக இருந்த, அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்கள் திருப்பூர் மாவட்டத்துக்கு வருகை தந்திருந்தார். "விளைய வைப்பதும் உழவரே; விலையை வைப்பதும் உழவரே" என்ற உன்னத நோக்கத்தில் தொடங்கப்பட்ட உழவர் சந்தையைத் திறந்து வைக்கவும், பல்வேறு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும், என அவர் வருகை அமைந்தது. அப்போது கிளைப் பொறுப்பிலிருந்த நான் சால்வை அணிவித்து, அவரை வரவேற்ற தருணத்தில் இந்தப் படம் எடுக்கப்பட்டது.

**-ரமேஷ் ரத்தினசாமி, ஈரோடு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### தமிழ்நாடு தீர்மானமும் அண்ணாவும்!

**1957-ஆம் ஆண்டில் சட்டமன்றத்திற்குள் காலெடுத்து வைத்த தி.மு.க.வின் சார்பில், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசினார் அண்ணா. மக்கள் மன்றத்தில் பல்லாயிரம் கூட்டங்களில் பேசியிருந்தாலும், சட்டமன்றத்தில், அண்ணாவின் குரல் தம்பிமார்களுக்குப் பெருமகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அப்போது ''தமிழ்நாடு என இந்த மாநிலத்திற்குப் பெயரிடாததற்கு வருந்துகிறோம்'' எனத் தீர்மானம் கொடுத்தார் அண்ணா. 1967-இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்துதான் அந்த தீர்மானத்திற்கு உயிர் கொடுத்து, 'மெட்ராஸ் மாகாணம்' தமிழ்நாடு ஆனது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 373




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131